வெளியீடு 29-11-2003

Issued 29-11-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 21, 2003 – தொகுதி 43 – எண் 1

**Monday the 21st April, 2003 – Volume 43 – No. 1**

ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

[Price Rs. 3.00

**21-4-2003**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-38 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) வேலூர் நாகா ஜுவல்லரி நகைக் கடையில் நடந்த கொலை மற்றும் கொள்ளை | 38-46 |
| திரு. சி. ஞானசேகரன் | 38-40, 41-42 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 42, 43 |
| திரு. லா. சந்தானம் | 43-44 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 44-46 |
| (ஆ) நக்கீரன் ஆசிரியர் திரு. ஆர்.ஆர். கோபால் பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளது | 46-53 |
| திரு. சி. ஞானசேகரன் | 46-47 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 47-48 |
| திரு. ஜி. பழனிசாமி | 49-51 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 51-53 |
| **3. அறிவிப்பு—** | |
| உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சித் திட்டத் தொடக்க விழா | 53-54 |

184540
நூலகம்



| | பக்கங்கள் |
|---|---|
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 54 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 54-55 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 54 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 54 |
| திரு. சி. ஞானசேகரன் | 54 |
| (ஆ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 55-56 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 55-56 |
| திரு. கே.சி. கருணாகரன் | 55 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 55 |
| **5. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை—** | |
| புது தில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழிருக்கை நிறுவ நல்கைத் தொகை வழங்குதல் | 56-58 |
| **6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 45-தமிழ் வளர்ச்சி- பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 58-125 |
| மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி | 59,69,76, 104-105,106-108, 109,112,115,118 |
| திரு. டி. சுதர்சனம் | 64-65,66-76 |



| | பக்கங்கள் |
|---|---|
| **6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| *திரு. எம். சுப்பையா பாண்டியன் | 76-88 |
| *திருமதி வி. சிவகாமி | 88-96, 101 |
| *திரு. கே.சி. கருப்பணன் | 96-100,101-104 |
| திரு. என். நன்மாறன் | 60,104,105, 108-112 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 59,112-119 |
| திரு. எச். ராஜா | 119-125 |
| **7. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 126 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 127-128 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் - திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

**5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

**8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

**9. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



**10. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**12. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

**13. மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**14. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள்.

**15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

21. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| **2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| **3. Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **4. Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts and Information Technology. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| 6. Minister for Health and Education | .. | **The Hon. Thiru S. Semmalai:** Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |
| 7. Minister for Backward Classes | .. | **The Hon. Thiru A. Papasundaram:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| 8. Minister for Labour | .. | **The Hon. Thiru A. Anwer Rhazza:** Labour, Employment and Training Urban and Rural Employment, Census and Wakfs. |
| 9. Minister for Agriculture | .. | **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 10. Minister for Social Welfare | .. | **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 11. Minister for Adi-Dravidar Welfare | .. | **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |



| | | |
|---|---|---|
| 12. Minister for Transport | .. | **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| 13. Minister for Electricity and Industries | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:** Electricity, Non-Conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |
| 14. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes. |
| 15. Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection | .. | **The Hon. Thiru P. Mohan:** Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics. |
| 16. Minister for Local Administration | .. | **The Hon Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| 17. Minister for Animal Husbandry | .. | **The Hon. Thiru P.V. Damodaran:** Animal Husbandry. |
| 18. Minister for Rural Industries | .. | **The Hon. Thiru R. Vadivel:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |

| | | |
|---|---|---|
| 19. Minister for Forests and Environment | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |
| 20. Minister for Housing and Urban Development | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 21. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| 22. Minister for Information and Publicity | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| 23. Minister for Handlooms and Textiles | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| 24. Minister for Fisheries | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 25. Minister for Tourism | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

---

* 28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ.,எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர். |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | .. | குழு அலுவலர், |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல் | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர். |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் (பொறுப்பு) |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த., - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந - உளுந்தூர்பேட்டை(செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா. தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி



44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு .கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதாசம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2.
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்

66\. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)

67\. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)

68\. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

69\. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்

70\. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்

71\. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

72\. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்

73\. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி

74\. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

75\. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்

76\. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

77\. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

78\. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

79\. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி

80\. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

81\. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

82\. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி

83\. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை

84\. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)

85\. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை

86\. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்

87\. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்

88\. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)



89\. சாமி, திரு. ஆர். .. மேலூர்

90\. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

91\. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்

92\. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)

93\. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை

94\. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்

95\. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்

96\. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

97\. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

98\. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

99\. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)

100\. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்

101\. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி

102\. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்

103\. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

104\. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்

105\. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)

106\. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்

107\. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்

108\. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்

109\. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி

110\. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
133. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்



134. நடராஜன், திரு. எஸ். .. நாட்றாம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
136. நடராசன், திரு. வது. .. இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
140. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு

155. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்



177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு.ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப் பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி

| | |
|---|---|
| 199. ராஜம்மாள், திருமதி எஸ். | .. தூத்துக்குடி |
| 200. ராஜா, திரு. எச். | .. காரைக்குடி |
| 201. ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. சோழவந்தான் |
| 202. ராஜு, திரு. எச்.எம். | .. உதகமண்டலம் |
| 203. ரெங்கநாதன், திரு. என். | .. பூம்புகார் |
| 204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. பேரூர் |
| 205. லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. அரவக்குறிச்சி |
| 207. வடிவேல், திரு. ஆர். | .. வாணியம்பாடி |
| 208. வளர்மதி, திருமதி பா. | .. ஆலந்தூர் |
| 209. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. மதுரை மேற்கு |
| 210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 211. வாசுதேவன், திரு. பெ. | .. மதுராந்தகம் |
| 212. விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 213. வில்வநாதன், திரு. இரா. | .. சோளிங்கர் |
| 214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. பூங்கா நகர் |
| 215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. புதுக்கோட்டை |
| 216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. பனமரத்துப்பட்டி |
| 217. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. மயிலாடுதுறை |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. ஆலங்குடி |
| 219. வெங்கடாஜலம், திரு. செ. | .. சேலம்-I |



| | |
|---|---|
| 220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 222. வேலு, திரு. ஏ.வ. | .. தண்டராம்பட்டு |
| 223. வேல் முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 224. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. தாம்பரம் |
| 225. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 226. ஜீவானந்தம், திரு. இரா. | .. நாகப்பட்டினம் |
| 227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | .. பொள்ளாச்சி |
| 231. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 233. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. மதுரை மத்தி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. திருவட்டாறு |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 8, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஏப்ரல் 21, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை."

பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நாள் கடத்தாமல் அறவழியை மேற்கொண்டால் அது ஒருவர் மறைந்தபின்கூட அழியாப் புகழாய் நிலைத்துத் துணை நிற்கும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 261, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**261—**

#### புதிய பாலம்

***9908-திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு நகரத்தையும் பள்ளிப்பாளையம் நகரத்தையும் இணைக்கும் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

[2003 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பகுதியில் ஏற்கெனவே ஆர்.சி.சி. பாலம் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். ஈரோடு மாவட்டத்தையும், நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தையும் இணைக்கும் பாலம் மிகவும் சிறியதாக இருப்பதனாலும், இரு நகரங்களுக்கும் வர்த்தகத் தொடர்பு தினசரி அதிகமாகவும், வாகனங்கள் அதிகமாகவும் இருப்பதாலும், அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு வருவதாலும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பாலம் சுமார் 43 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஆத்தூர், விழுப்புரம், வேலூர், பாண்டிச்சேரி, தருமபுரி, சென்னை போன்ற நகரங்களுக்கு எல்லாம் செல்வதற்கு இந்தப் பாலமே முக்கிய வழியாக இருப்பதால், இந்தச் சிறிய பாலத்திற்கு அருகிலே மேலும் ஒரு பாலத்தை—இந்த நிதி ஆண்டிலாவது பரிசீலித்து மீண்டும் ஒரு பாலத்தை—கட்டி, பள்ளிப்பாளையம் மக்களின், ஈரோடு மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்று உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரத்தையும், பள்ளிப்பாளையம் நகரத்தையும் மல்லிகரை, ஆத்தூர், ராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு சாலை, மாநில சாலை எண் 79-ல் இணைக்கிறது. இச்சாலையில் கிலோ மீட்டர் 94/245 முதல் 660-ல் குறுக்கிடும் காவிரி ஆற்றில் ஏற்கெனவே ஆர்.சி.சி. பாலம் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மேலும் பள்ளிப்பாளையம் அருகே ஓடப்பள்ளி என்கிற இடத்தில் பவானி கட்டளைக் கதவணை நீர் மின் திட்டம் இரண்டின்கீழ் காவிரி ஆற்றின் குறுக்கே 4 மீட்டர் அகலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் கதவணை ஒன்று கட்ட இருக்கிறது. அதை 12 மீட்டர் அகலத்தில், கதவணையும், பாலமும் இணைந்ததாகக் கட்டலாமா என்பதை அரசு



2003 ஏப்ரல் 21]

ஆய்வு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதி ஆண்டிலாவது இந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து அமைச்சர் அவர்கள் செய்வதற்கு முன்வருவாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்தப் பாலத்தினுடைய அவசியம் கருதி இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 262, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**262—**

**சாலையைச் செப்பனிடுதல்.**

***12958—திரு. ப. சிதம்பரம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டியிலிருந்து உக்கரம் வழியாக சத்தியமங்கலம் செல்லும் சாலையைச் செப்பனிட உடனடியாக அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்பணியினை எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திற்கு வருகை புரிந்து ரூ.425 கோடியில் அரசு

[2003 ஏப்ரல் 21

நலப்பணித் திட்டங்களை எல்லாம் துவக்கி வைத்து ஈரோடு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்து மாவட்டத்தைச் செழிப்படைய வைத்திருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட புஞ்சை புளியம்பட்டியிலிருந்து, காவிலிபாளையம், உக்கரம் வழியாக சத்தியமங்கலம் செல்லும் சாலை மிகவும் முக்கியமான சாலை. இரு சக்கர வாகனங்கள் மற்றும் பேருந்துகள் மூலம் பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரிக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் இந்தச் சாலை வழியாகத்தான் அதிகமாக வந்து போகிறார்கள். இந்தச் சாலை நீண்ட நாட்களாக பழுதடைந்து போக்குவரத்துக்கு மிகவும் பாதிப்பாக உள்ளது. எனவே இதை மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது இந்தச் சாலையைச் செப்பனிட்டு இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவு செய்து கொடுக்க அரசு முன் வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட இதரச்சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் அரியப்பம்பாளையம்-புளியம்பட்டி சாலை கிலோ மீட்டர் 0/0 முதல் 20/0 ஆகும். இச்சாலை மாநில நெடுஞ்சாலை எண் 15-ல் ஊட்டி, கோத்தகிரி, மேட்டுப்பாளையம், சத்தி, கோபி, ஈரோடு சாலை எண் 209-ல் புளியம்பட்டியில் முடிவடைகிறது. இச்சாலைப் பகுதி கிலோ மீட்டர் 0/0 முதல் 10/0 வரை கீழ்பவானி வாய்க்கால் பாசனப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதியின் அடித்தளம் களிமண் பூமியாக உள்ளதால், இச்சாலையின் மேற்பரப்பு மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ளது. மேலும் இச்சாலையின் கிலோமீட்டர் 4/0 முதல் 8/4 வரையுள்ள சாலை, ஒருவழிப்பாதையாக உள்ளதால் தேசிய நெடுஞ்சாலை எண் 209-ல் புறவழிச்சாலையாகப் பயன்படுவதாலும், பல்வேறு சிற்றூர்கள் இப்பகுதியில் அமைந்துள்ளதாலும் அதன் போக்குவரத்துச் செறிவு அதிகமாக உள்ளது. எனவே இச்சாலையில் கிலோமீட்டர் 4/0 முதல் 10/0 வரை அகலப்படுத்தி வலுப்படுத்தவும், கிலோமீட்டர் 17/0 முதல் 20/0 வரை வலுப்படுத்தவும் தோராயமாக ரூ 100 இலட்சம் தேவைப்படும். எனவே இச்சாலைப்பணியை எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப



2003 ஏப்ரல் 21]

மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 263, (குறுக்கீடு) திரு. ப. சிதம்பரம்.

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையானது அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல, அங்கு எல்.பி.பி. வாய்க்காலினுடைய கழிவுநீர் இருபுறமும் செல்வதால்—அந்தப் பாதை வண்டி வாகனங்கள் செல்வதற்கும் மற்றும் பேருந்துகள் செல்வதற்கும் மிகவும் பழுதடைந்து, மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால்—மாண்புமிகு அம்மா அவர்களினுடைய பொற்கால ஆட்சியில், இந்த ஆண்டிலேயே இதற்குத் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்து, ஏதாவதொரு வகையில் எனது தொகுதி மக்களைக் காப்பாற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சாலையினுடைய அவசர அவசியத்தைக் கருதி வரும் நிதியாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 263, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

**263—**

**வாக்குச்சாவடி.**

***18866—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம், குப்பனத்தம் நல்லூரில் வாக்குச்சாவடி அமைக்கப்படாததால், வாக்களிக்க சிரமமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ) ஆம் எனில், வாக்குசாவடி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) 01-01-2003 ஆம் நாளை, தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல்கள் 17-01-2003 அன்று வெளியிடப்பட்டுள்ளன. வாக்காளர்களின் வசதிக்கேற்ப வாக்குச் சாவடிகளைச் சீரமைப்பது குறித்து தேர்தல் ஆணையத்தினுடைய அறிவுரை பெறப்பட்டவுடன் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை. வினா எண் 264, (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தமிழகத்தில் பல சட்டமன்றத் தொகுதிகளில் 2 கிலோ மீட்டருக்கு மேலாக, 5 கிலோ மீட்டர் அளவுக்குக்கூட நிறைய இடங்களிலே வாக்குச்சாவடிகள் இருக்கின்ற காரணத்தினால், வாக்களிக்க வருபவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதைப் பலமுறை தமிழக அரசு தேர்தல் ஆணையத்திடம் எடுத்துக்கூறியும், வாக்குச் சாவடிகள் நீண்ட தூரத்தில் இருப்பவற்றையெல்லாம் மாற்றியமைப்பதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே அதை மனதிலே வைத்து உடனடியாக வருகின்ற பாராளுமன்றத் தேர்தலுக்குள் — இந்த வாக்குச் சாவடிகள், நீண்ட தூரத்தில் இருப்பவற்றையெல்லாம் — எந்தெந்த இடங்களிலே வாக்குச் சாவடிகளை அமைக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் உடனடியாக, தேர்தல் ஆணையம் அமைப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா? அவர்களை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1,500 வாக்காளர்கள் ஒரு வாக்குச்சாவடிக்கு என்ற முறையிலே அது அமைக்கப்படுகிறது. பல இடங்களில் 2 கிலோ மீட்டர் தொலைவுக்கு மேல் போக வேண்டிய சூழல் இருப்பது உண்மைதான். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டப் பகுதிகளில் எங்கெங்கு 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாக வாக்காளர்கள் நடந்து செல்லவேண்டிய நிலை இருக்கிறதோ அவற்றையெல்லாம் ஆய்ந்து தேர்தல் ஆணையத்திற்கு அனுப்புவதற்காக தயார் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தயார் செய்து அரசுக்குத் தெரிவிக்கின்றபோது அதை உடனடியாக தேர்தல் ஆணையத்திற்கு அறிவித்து தேர்தல் ஆணையத்தின் மூலம் வாக்குச்சாவடிகளை, கூடுதல் வாக்குச்சாவடிகளை, ஏற்கெனவே இருக்கின்ற வாக்குச்சாவடிகளுக்குப் பக்கத்திலேயே அமைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 264, திரு. மா. ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**264—**

### ஜெராக்ஸ் நகலகங்கள்

***5285—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீதிமன்றங்களில் நகலகங்கள் (ஜெராக்ஸ்) ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள அனைத்து சார்பு நீதிமன்றங்களுக்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்குவதற்கு அரசின் தற்போதைய நிதிநிலை மேம்பட்டதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட

[2003 ஏப்ரல் 21

நீதிமன்றங்களுக்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே அந்த ஜெராக்ஸ் இயந்திரங்களை இயக்குவதற்குத் தனியாக பணியாளர்கள் நியமிக்கும் எண்ணம் நம்முடைய அரசிற்கு உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனைப் பராமரிப்பதற்கும், நிர்வகிப்பதற்கும் தனியாக ஒரு ஆளை நியமிக்கக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபடி, சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரையின்படி மற்றத் துறைகளில் மிகுதியாகக் காணப்படுகின்ற ஊழியர்களை நீதிமன்றங்களுக்கு பீமீஜீஷூமீணீமீவீஷீஸீ செய்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. எனவே அது நிறைவேற்றப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 265, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**265—**

### கட்டடம்

**•9485—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2003 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உயர் நீதிமன்றத்தால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலில் இத்திட்டம் இடம் பெற்றுள்ளது. மைய அரசின் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் இச்செயற்குறிப்பு பரிசீலிக்கப்படும்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூரின் தலைமையிடமாக இருக்கின்ற காரணத்தினால் 30 ஆண்டுகளுக்கு முன்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1994 ஆம் ஆண்டு அதே நீதிமன்றத்தில் சிவில் கோர்ட்டும் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு கோர்ட்டுகளும் ஒன்றாக இயங்கினாலும்கூட இடவசதி இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதோடு கோர்ட் கட்டடம் கட்டுவதற்காக 20 ஆண்டுகளுக்கு முன்பே, வேடசந்தூர் சந்தை மைதானத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் இடம் ஒதுக்கீடு செய்து பரிந்துரை செய்யப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்தச் சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வருகின்ற நிதியாண்டிலாவது நிதி ஒதுக்கீடு செய்து அங்கு கோர்ட் கட்டடத்தைப் புதியதாகக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், விருந்தினர் மாளிகை மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு ஆகியவற்றை ரூ.2 கோடியே 27 இலட்சத்து 85 ஆயிரம் செலவில் கட்டித்தரும் செயற்குறிப்பு முன்னுரிமைப் பட்டியலில் மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே மைய அரசின் நிதியுதவி கிடைக்கப் பெற்றதும் முன்னுரிமை அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப இக்கட்டடப் பணி மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர்களுடைய தகவலுக்காக

ஏற்கெனவே நான் பலமுறை இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கின்றேன். ரூ.140 கோடி செலவில் கிட்டத்தட்ட 77 செயற்குறிப்புகள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மத்திய அரசிற்கு இரண்டு நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியும் கூட இன்னும் நிதியுதவி அளிக்கவில்லை. நிச்சயமாக அவர்கள் இந்த ஆண்டில் அளிப்பார்கள் என்று கருதுகின்றோம். அவ்வாறு அளிக்கின்ற பட்சத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முன்னுரிமை அடிப்படையில் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. மீண்டும் அதையே சொல்கிறேன். விரைவாக வேடசந்தூருக்கு நீதிமன்றம் கட்டித்தந்து உதவும்படி அன்போடு வேண்டிக் கேட்டு, அம்மாவினுடைய ஆசியுடன் அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 266, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**266—**

**மருத்துவமனை**

***23215—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருவொற்றியூர் நகரத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.





**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திருவொற்றியூர் தொகுதியிலே மருத்துவமனை அமைப்பது சம்பந்தமாக கடந்த டிசம்பர் மாதம் பார்வையிட்டதன் பேரிலே — அன்னை சிவகாமி நகர், சுப்பிரமணிய நகர், எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, புழல் ஒன்றியத்திலுள்ள பேரூராட்சியின் பின்புறம் ஒன்றும், திருவொற்றியூர் நகராட்சியினுடைய ஆரம்ப சுகாதார மையம் அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டியும் அந்தப் பகுதியிலே இடவசதி வேண்டி, பார்வையிட்டதன் பேரிலே — நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திருவொற்றியூர் நகராட்சியில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைப்பது சம்பந்தமாக பரிசீலனை செய்வோம் என்றும் சொன்னார்கள். திருவொற்றியூர் பகுதியிலே உள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்குப் பதிலாக 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைப்பதன் மூலமாக ——சென்னையில் இருக்கின்ற அரசு பொது மருத்துவமனைக்கு நோயாளிகள் வந்து செல்வதில் அதிகமான வகையில் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்ற காரணத்தாலும், திருவொற்றியூர் பகுதி மட்டுமல்லாமல், திருவள்ளூர் மற்றும் ஆந்திரா போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற நோயாளிகள் அங்கேயே மருத்துவம் பார்த்துக்கொள்வதன் மூலமாக, சென்னை பொது மருத்துவமனைக்கு வரும்போது ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கின்ற முறையிலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதியிலே——திருவொற்றியூர் பகுதியிலே 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்ற இந்தப் பகுதியிலே, மருத்துவமனை அமைக்கப்படுமேயானால், பொது மக்களுக்கு ஏதுவானதொரு பயனுள்ள சூழ்நிலை உருவாகும் என்பதைக் கருத்தில்கொண்டு, நம்முடைய அமைச்சர் அவர்கள் அங்கே மருத்துவமனை அமைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் மூலமாக கிராமப்புற மக்களுக்கு Organised Health Service கிடைப்பதைப் போல, நகரப் பகுதியிலே இப்போது அப்படிப்பட்ட ஓர் அமைப்பு இல்லை. தற்போது நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில்

Maternity Centres. தாய் சேய் நல விடுதிகள் மட்டும், அந்த நிலையத்திலே இருந்து பிரசவத்தை கவனித்துக் கொண்டிருக்கின்றன. கிராமப்புறங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம், எப்படி சுகாதாரச் சேவையை வழங்கி வருகிறதோ, அதேபோன்ற ஓர் அமைப்பு நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலும் இருக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரும்பி, அதன் அடிப்படையிலே, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு இலட்சம் ஜனத் தொகைக்கு ஒரு Urban Primary Health Centre நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை, அமைக்க வேண்டுமென்று எங்களுக்கு ஆலோசனை வழங்கி, அந்த அடிப்படையிலே எங்களுடைய சுகாதாரத் துறை இப்போது நகராட்சி, மாநகராட்சி நிர்வாகத்தோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளிலேயும், -- எப்படி கிராமப்புறங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் வீடுகளுக்கே சென்று சுகாதாரச் சேவையை அளித்து வருகிறதோ, அதுபோன்ற நோக்கத்தோடு, இதுபோன்ற நகர்ப் பகுதிகளிலேயுள்ள, குறிப்பாக,-- நகர்ப் பகுதிகளிலேயுள்ள குடிசைப் பகுதியிலே வாழ்கிற ஏழையெளிய மக்களுக்கு, சுகாதாரச் சேவையை அளிக்கிற வகையில் Urban Primary Health Centres அமைப்பதற்கு இப்போது நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி பரிசீலனையில் இருந்து வருகிற அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன திருவொற்றியூர் பகுதிக்கு, நிச்சயமாக Urban Primary Health Centre அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *267*, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**267—**

**மருத்துவர் நியமனம்**

***24499—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் செண்பகராமநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் நியமனம் செய்யப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மருத்துவர் நியமனம் செய்யப்படுவார்?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் செண்பகராமநல்லூரில் துணை சுகாதார நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. அரசின் நெறிமுறைகளுக்கேற்ப துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் பணியிடம் வழங்கப்படுவதில்லை. மேலும் வரையறுக்கப்பட்ட நாட்களில் மூலக்கரைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், செண்பகராமநல்லூர் துணை சுகாதார நிலையத்திற்கு சென்று சிகிச்சை அளித்து வருகிறார். எனவே செண்பகராமநல்லூர் துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவரை நியமனம் செய்ய இயலாது.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் எனது தொகுதியில் வடக்குப் பச்சையாறு அணைத் திட்டத்தினை திறந்து வைத்தமைக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் வணங்கி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது நாங்குநேரி தொகுதியில் வள்ளியூரில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை, நபார்டு வங்கி மூலம் பெறுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். எனது தொகுதியில் உள்ள மாவடி, சிதம்பரபுரம் ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதிக்குட்பட்ட செண்பகராமநல்லூருக்கு சில நேரங்களில் மட்டும்தான் மருத்துவர்கள் வருகிறார்கள். சில நேரங்களில் வருவதில்லை. ஆதலால் அந்த மருத்துவமனைக்கு மருத்துவர்கள் கூடுதலாக ஒருசில நாட்கள் வருகை தருவதோடு, சரியான நேரத்தில்

[2003 ஏப்ரல் 21

வருகை தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வருகை தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வள்ளியூர் அரசு மருந்தகம், நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி 30 படுக்கைகள் கொண்ட ஒரு வட்டம்சாரா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட இருக்கிறது. அதற்காக அந்த மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றுவதற்கான நிதியைப் பெறுவதற்கு உலக வங்கியையும், நபார்டையும் நாம் நாடி இருக்கிறோம். எந்த நிறுவனம் உடனடியாக நிதியை வழங்க முன்வருகிறதோ, அந்த நிதி உதவியோடு வள்ளியூர் மருந்தகம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரைவிலே தரம் உயர்த்தப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல அவருடைய தொகுதியிலே இருக்கிற செண்பகராமநல்லூரில் உள்ள துணை சுகாதார நிலையத்திற்கு டாக்டர்கள் வருவதில்லை என்ற ஒரு குறைபாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். கண்டிப்பாக வாரம் ஒரு முறை அந்தத் துணை சுகாதார நிலையத்திற்கு, பக்கத்திலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய டாக்டர் வந்து சிகிச்சை அளிக்க வேண்டும் என்று நாங்கள் உத்தரவிட்டு இருக்கிறோம். அப்படி டாக்டர் வருவதிலே ஏதாவது குறைபாடு இருக்குமேயானால் முறையாக அவர் அங்கே வந்து சிகிச்சை அளிப்பதற்குண்டான உத்தரவை உடனடியாக இந்தத் துறை நிச்சயமாக பிறப்பிக்கும். தொடர்ந்து அது குறைபாடு இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படும்.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வள்ளியூர் அரசு மருத்துவமனை விரைவிலே நடைபெறும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் செண்பகராமநல்லூரில் 2 நாட்களாவது டாக்டர்கள் வந்து செல்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட துணை சுகாதார நிலையத்திற்கு வாரத்திற்கு ஒரு முறைதான் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய மருத்துவர் வருவதற்கான வாய்ப்பு



2003 ஏப்ரல் 21]

இருக்கிறது. அப்படி 2 நாட்கள் அவர் வர வேண்டுமென்று சொன்னால், அங்கே செயல்பட்டு வருகின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு டாக்டர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும். எனவே முறைப்படி வாரம் ஒரு முறை அங்கே தவறாமல் டாக்டர் வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ராமராஜ்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்கு -- மலைப் பிரதேசங்கள் அதிகம் உள்ள எங்களுடைய தொகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய போடிநாயக்கனூர் தொகுதிக்கு -- வந்து மக்களிடம் நேரடியாக குறையைக் கேட்டு, மலைப் பிரதேசங்களிலே அதிகம் உள்ள மக்கள் குறைகளையும் கேட்டறிந்தபின் நடமாடும் ஆஸ்பத்திரி அமைப்பதாகக் கூறியிருந்தார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் எங்களுடைய தொகுதி மக்களுடைய நலனைக் கருதி இந்த ஆண்டு நடமாடும் ஆஸ்பத்திரியை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேரடியாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களோடு அந்தப் பகுதிக்குச் சென்று அந்த மக்களுக்கு இதுபோன்ற மருத்துவ வசதிகள் இல்லாத காரணத்தினால்தான் அங்கே ஒரு நடமாடும் மருத்துவக் குழுவை அனுப்ப வேண்டும் என்று முடிவு எடுத்து அந்தக் கருத்தை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவிடம் சொன்னதன் அடிப்படையில் கடந்த 10 நாட்களுக்கு முன்புதான் அவருடைய தொகுதிக்கு ஒரு நடமாடும் மருத்துவக் குழுவை அனுப்புவதற்கான உத்தரவை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். இன்னும் ஓரிரு தினங்களுக்குள் அந்த ஊர்தி அங்கேயே வந்து அந்தப் பகுதி மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி மக்களுடைய நன்றியையும் கூறி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, நிறைவு செய்கின்றேன்.

[2003 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமாவது 24 மணி நேரமும் செயல்படவேண்டும் என்கின்ற விதி அரசிடத்திலே உள்ளதா? அப்படி இருக்குமேயானால், எங்களது உசிலம்பட்டி தொகுதியிலே உள்ள செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் எதிலும் 24 மணி நேர மருத்துவச் சேவை இல்லையே? அதை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தாலுகா அல்லது வட்டார மருத்துவமனை இல்லாத ஒரு ஒன்றியத்தில், வெறும் ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே இருந்தால், அந்த ஒன்றியத்திலே இருக்கிற ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், நிச்சயமாக 30 படுக்கைகள் கொண்ட — — தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு 30 படுக்கைகள் கொண்ட — — தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அது உயர்த்தப்பட இருக்கிறது. அது படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரை 58 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்போது தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே படிப்படியாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையம் எடுத்துக்கொள்ளப்படும். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் சொன்ன அவர்களுடைய தொகுதியிலே இருக்கிற அந்த ஆரம்ப சுகாதார நிலையம் நிச்சயமாக இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 268, (குறுக்கீடு) நன்றி சொல்கிறீர்களா?

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே அப்படியொரு நிலை இருக்கிறது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்



2003 ஏப்ரல் 21]

கொண்டு வந்து, அதனை இந்த ஆண்டு செய்து கொடுத்தால் நன்றி உள்ளவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 35 ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த 35 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்படுகிறபோது, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் சொல்கிற செல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், அந்த 35-லே ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 268, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**268—**

### விடுதிக் கட்டடம்

**•28633—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீரனூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, கீரனூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி பல ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடமும் தேர்வு செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. எனவே தொடர்ந்து

[2003 ஏப்ரல் 21

மாணவர் நலன் காத்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில் அடுத்த நிதியாண்டிலாவது விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டைப் பொறுத்தவரையிலும், அங்கே நிலம் தேர்வு செய்யப்படாததால், கட்டடம் கட்டுவதற்கு வகை செய்யப்படவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலம் அந்த இடத்திலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிலம் இருப்பதாக இருந்தால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, வரும் நிதியாண்டில் அதுகுறித்து பரிசீலிக்கும் என்பதை உங்கள் வாயிலாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 269, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**269—**

**பீடித் தொழிலாளர்கள் நலன்**

**•25110—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள எடப்பாடி நகரில் பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2003 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் இருக்கையில் இல்லை.

வினா எண் 270, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**270—**

**விவசாயக் கல்லூரி**

**•22146—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்திலுள்ள அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்திலுள்ள அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே அன்னவாசல் ஒன்றியத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அண்ணா பண்ணை என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே 1967 ஆம் ஆண்டு அண்ணா அவர்களாலே உருவாக்கப்பட்டது. ஏறத்தாழ 1017 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட மிகப்பெரிய பண்ணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே அண்ணா பண்ணை என்பது மட்டும் 643 ஏக்கருக்கு மேலே இருக்கிறது. மீதமுள்ள பகுதிகளில் எல்லாம் வெப்ப பிராந்திய பழப் பண்ணை, உழவர் பயிற்சி நிலையங்கள் ஆகியவை அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு விவசாயக் கல்லூரியை அமைப்பதற்குத்

தேவையான அத்தனை வசதிகளும் உள்ளன. இன்னும் சொல்லப்போனால், அங்கே போதிய நஞ்சை நிலங்கள், புஞ்சை நிலங்கள் உள்ளன. பழப் பண்ணைகள், தோட்ட நிலங்கள், வானிலை ஆய்வுக் கூடங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கே போதிய கட்டட வசதிகள் இருக்கின்றன. அலுவலர்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகள் இருக்கின்றன. மண் பரிசோதனை நிலையம் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உயிர் உரங்கள் தயாரிப்பு நிலையம் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நுண்ணூட்டக் கலவை தயாரிக்கக்கூடிய பண்ணையும் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழக் கன்றுகள், மரக் கன்றுகள் எல்லாம் நம்முடைய விவசாயத் துறை மூலம் அங்கே நடப்பட்டு மற்ற மாவட்டங்களுக்கு பயன்படக்கூடிய வகையிலே திறமையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இந்தப் பண்ணையை இனி வருகின்ற ஆண்டுகளிலாவது ஒரு விரிவான விவசாயக் கல்லூரியாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம், உறுதி தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கிட்டத்தட்ட 10 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தின் அருகாமையிலே இருக்கிற திருச்சி, மதுரை போன்ற பகுதிகளில் கல்லூரிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. தற்போது கல்லூரிகளில் கிட்டத்தட்ட 531 மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயின்று வெளியிலே வருகிறார்கள். மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால் 40 கோடி ரூபாய்க்கு மேல் செலவு ஆகிறது. ஆகவே புதுக்கோட்டையில் ஒரு கல்லூரி தொடங்குகிற கருத்துரு அரசிடம் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. அரசன்.



**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி தொடங்குவதற்கு நிதிச் சுமைகள் அதிகமாகத் தேவைப்படாது. நம்முடைய புதுக்கோட்டை தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல அனைத்து வசதிகளும் அங்கே இருக்கின்றன. அரசுக்கு நிதிச் சுமை அதிகமாக வருவதற்கு வாய்ப்பில்லை. எங்கள் மாவட்ட மக்கள், விவசாய மக்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு அங்கே விவசாயக் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே ஒரு கல்லூரி தொடங்குவதற்குத் தேவையான அனைத்து கட்டட வசதிகளும் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு புதிய கல்லூரி தொடங்குவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் உள்ள அளவுக்கு அந்தக் கட்டடங்கள் இருக்கின்றனவா என்று சொன்னால், இல்லை. ஆகவே ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், அந்தக் கல்லூரிக்கு என்ன தேவையோ அந்த அளவுக்குக் கட்டடங்கள் தேவைப்படும். ஆகவே அரசினுடைய கருத்தில், அங்கே புதிய கல்லூரி அமைக்கிற கருத்துரு இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 271, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**271—**

### தர்பூசணி பதப்படுத்துதல்

***23197—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் ஆகிய வட்டங்களில் அதிகமாக தர்பூசணி விளைவதால், இதனைப் பதப்படுத்தவும் சாறு பிழியவும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் அதிகமாக விளையும் தர்பூசணியை பதப்படுத்தி சாறு பிழியும் தொழிற்சாலை அமைப்பதற்கான கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

*வினா எண் 272, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

**272—**

**சமுதாயக் கூடம்**

**•7403—திரு. ப. பொன்னம்பலம்:**

*மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கூட்டம் கூட, கலந்துரையாட சமுதாயக் கூடம் கட்டித் தரும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சமூக நலத் துறையின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டம் கூட, கலந்துரையாட சமுதாயக்கூடம் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக தமிழகத்திலுள்ள அனைத்து கிராமப்புறங்களில் உள்ள அடித்தள மக்களின் வாழ்க்கைத்



2003 ஏப்ரல் 21]

தரத்தை உயர்த்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்வேறு நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு மறுபரிசீலனை செய்து சுய உதவிக் குழுக்களுக்கு எதிர் வரும் ஆண்டுகளிலாவது கட்டடம் கட்ட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறையின் மூலமாகத்தான் கட்டடம் கட்டித் தருகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்று குறிப்பிட்டேன். ஆனால் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 'எஸ்.ஜி.எஸ்.ஒய்.' திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்கள் பயன்படுத்திக்கொள்கிற வகையில் பல்நோக்கு மையக் கட்டடம், ஒரு இலட்ச ரூபாய் மதிப்பில் சுய உதவிக் குழுக்கள் கூடிப்பேசுவதற்காகப் பல்வேறு ஊராட்சிகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் கட்டுவதற்கான கேள்வியில், கேள்விக்கே இடமில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். துணைக் கேள்விக்கு இடம் இருப்பதாகக் கருதித்தான் கேட்கிறேன். இங்கே, சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் பற்றிக் கேட்கிறபொழுது, நமது சட்டமன்ற உறுப்பினர்களே பல பேர்கள், குழுவாக, சுய உதவிக் குழுக்களுடைய உறுப்பினர்களைப் போன்று ஒரே நிறத்திலே சேலை அணிந்து, இங்கே நமது கூட்டத் தொடரிலே பங்கேற்றிருக்கிறார்கள். அவர்களுடைய அந்த உணர்வை மதிக்கிற வகையிலாவது இந்தக் கேள்விக்கு நல்ல பதிலை நான் எதிர்பார்த்தேன். ஆகவே சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் கட்ட —— வேறு பணிகள் மூலமாக நடைபெறுவதாகக் கூறுகிறீர்கள். ஆனால் —— இதை தனித்த முயற்சியாக எடுத்து, அதற்குரிய நிதியை ஒதுக்கீடு செய்து, அதற்கான வகையில் கட்டடம் கட்டினால்தான், அது பயனுள்ள வகையில் அமையும். இதைக்கூட சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி, மற்ற நிதி என்று அதில் ஒரு காரணத்தைக் காட்டி, ஒரு எண்ணிக்கையை உயர்த்திவிடுவதற்கான முயற்சியை

எடுக்காமல், தனித்த நிதியை ஒதுக்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மிக அதிகமான அளவிலே ஆர்வத்தோடு குழுக்களை அமைப்பதற்கு தீவிரமாக வந்து கொண்டிருக்கிறார்கள். அரசினுடைய பொது நிதியிலேயிருந்து, அத்தனை ஊராட்சிப் பகுதிகளிலேயும் அமைக்கப்பட்டிருக்கிற குழுக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தருவது என்று சொன்னால், இருக்கின்ற நிதி நிலை அதற்கு இடம் தராது என்கிற காரணத்தால், தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், சமீபத்தில்தான் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கூடிப் பேசுவதற்கும், கூட்டம் நடத்துவதற்கும் அந்தந்த கிராமங்களிலே இருக்கிற சத்துணவுக் கூடங்கள், ஊட்டச் சத்து மையங்கள் மற்றும் அந்தந்த கிராமத்திலே இருக்கிற இதர அரசு கட்டடங்களைப் பயன்படுத்தி, குழு உறுப்பினர்கள் கூடிப் பேசலாம் என்கிற உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையாக இட்டிருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள், மாநிலத்திலே அதிக எண்ணிக்கையில் அதிகப்படியான குழுக்கள் இப்போது உருவாகி வருகின்றன. இதில் இலட்சக்கணக்கில் மகளிர் அங்கம் வகிக்கிறார்கள். இந்தக் குழுக்கள் அந்தந்த வட்டங்களில் யாருடைய கட்டுப்பாட்டில், யாருடைய தலைமையில் இவை செயல்படுகின்றன? அமைக்கப்பட்டிருக்கக்கூடிய சமுதாயக் கூடங்களும், அமைக்கப்போகிற சமுதாயக் கூடங்களும் யாருடைய கண்காணிப்பில், பராமரிப்பில் செயல்படும்? இவற்றை முறைப்படுத்துவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தனிப்பட்ட யாருடைய கட்டுப்பாட்டின் கீழும் இயங்கவில்லை. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் கட்டுப்பாட்டிலேதான் இந்த சுய உதவிக் குழுக்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கவும் அவர்களுக்குத் துணைபுரிவதற்காகவும்தான் அந்தந்தப் பகுதியிலே இருக்கிற தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படுகிறார்களே தவிர, தனிப்பட்டவர்களின் கட்டுப்பாட்டிலே சுய உதவிக் குழுக்கள் இயங்கவில்லை. அதேபோல சத்துணவுக் கூடங்கள், ஊட்டச் சத்து மையங்களிலே கூட்டம் நடத்துவதற்கு, பள்ளிக் குழந்தைகள் படித்து முடித்துவிட்டுச் சென்றதற்குப் பிறகுதான் அந்த மையங்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு அந்தக் குழு உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. கூட்டம் முடிந்ததற்குப் பிறகு சத்துணவுப் பொறுப்பாளர்களிடத்திலோ அல்லது ஊட்டச் சத்து மையங்களின் பொறுப்பாளர்களின் கையிலோ அந்தக் கட்டடத்தின் பொறுப்பு வந்துவிடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 273, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**273—**

### கண்காணிப்புக் குழு

***10072—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு மையங்களைக் கண்காணிக்க பொதுமக்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சத்துணவு மையங்களைக் கண்காணிக்க பொதுமக்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில், பொதுமக்கள் அடங்கிய குழு நியமிக்கப்படவில்லை

[2003 ஏப்ரல் 21

என்று கூறினார்கள். வேறு எந்த மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் அரசாணை எண் 66, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 13-05-2002-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையில், மையங்களைக் கவனிக்க மாவட்ட வட்டார, மாநகராட்சி, நகராட்சி அளவில் உள்ள குழுக்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் இடம் பெற்றுள்ளார்கள். இது தவிர, அந்தந்த கிராமங்களிலே உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களும், பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களினுடைய பிரதிநிதிகளும், அரசுசாரா உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் பணிகள் என்னென்ன என்பதையும் இதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களிலே பயன்பெறுகின்ற பயனாளிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு சரியான அளவிலே காய்கறி மற்றும் உணவுப் பொருட்கள் எடுக்கப்படுகிறதா அல்லது தரமான உணவைப் படைக்கிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கும் — — கண்காணிப்புக் குழு ஏற்படுத்துவதோடு மட்டுமல்ல -- அந்தந்த கிராமங்களிலே நடைபெறுகின்ற சத்துணவு மையங்களில் பொது மக்கள் இது சம்பந்தமாக ஏதாவது குறைகளை எடுத்துச்சொல்கிற பொழுது அதைக் கேட்பதற்கும் இந்தக் கண்காணிப்புக் குழுவிற்கு சில விதிகளை வகுத்து அரசு ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு மையங்களில், சத்துணவு ஊழியர்கள் அமருவதற்கான நாற்காலி அல்லது சத்துணவு மையங்களில் பணியாற்றக்கூடிய பெண் ஊழியர்கள் ஒதுங்குவதற்கான கழிவறைகள் போன்ற வசதிகளெல்லாம் காணப்படவில்லை. ஆகவே அந்த ஊழியர்களுடைய நலனை முன்னிட்டு, அவர்களுக்கான இருப்பிட வசதிகளை உத்தரவாதப்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு அரசினுடைய குறிப்பில், எதிர்காலத்திலே திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா? அடுத்ததாக, அந்த ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கான குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமையைக் கருத்திலேகொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் ஆயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 274, திரு. ப. அண்ணாவி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**274—**

### வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***15893—திரு. ப. அண்ணாவி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், டோல்கேட்டிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை முசிறிக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர்

[2003 ஏப்ரல் 21

இதயதெய்வம டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10-3-2003 அன்று, திருச்சி மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள். ஏழையெளிய, நடுத்தர மக்களுக்கு 209 கோடி ரூபாய்க்கு பல்வேறு அரசு நலத் திட்டங்களை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு திருச்சி மாவட்டம் மக்கள் சார்பாக நன்றியினை பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு திருச்சி தாலுகா, தொட்டியம் தாலுகா, துறையூர் தாலுகா, ஆகிய தாலுகாக்களிலுள்ள வாகனங்களைப் பதிவு செய்வதற்கும், ஓட்டுநர் உரிமம், நடத்துனர் உரிமம் மற்றும் உரிமம் புதுப்பித்தல் போன்றவற்றிற்கு சுமார் 50 கி.மீ. தொலைவிலுள்ள, திருச்சி டோலகேட்டிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வரவேண்டியுள்ளது. ஏற்கெனவே திருச்சி மாநகரில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இருப்பதால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மறுபரிசீலனை செய்து டோல்கேட்டிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை மேலே குறிப்பிட்டுள்ள மூன்று தாலுகாக்களின் மையமான முசிறிக்கு மாற்றித்தர மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தற்போது இயங்கி வரும் திருச்சிராப்பள்ளி மாநகரத்திலிருந்து முசிறிக்கு சுமார் 35 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இதனால் இங்கிருந்து இடமாற்றம் செய்வதற்கு அரசின் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. இருந்தபோதிலும்கூட இப்போது இயங்கி வருகின்ற அந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் பழுதடைந்த நிலையில் இருப்பதால், பழமையானதாகி இருப்பதால் சற்று. அதனை மாற்றி தற்போது திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தை இப்போது தேர்வு செய்துள்ளோம். ஆகவே மாநகராட்சி ஒப்புதலைப் பெற்றவுடன் மிக விரைவிலே—அந்த ஆர்.டி.ஓ. அலுவலகம்—வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திருச்சி மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது என்பதைத்



2003 ஏப்ரல் 21]

தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முசிறியிலே மீண்டும் கூடுதலாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே திருச்சியிலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இயங்கி வருகிறது. அதற்கு அடுத்தபடியாக, 1999 ஆம் ஆண்டு முதல் பகுதி அலுவலகமாக இருந்த ஸ்ரீரங்கத்தை இப்போது, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தகுதி உயர்த்தி, ஸ்ரீரங்கத்திலும் ஒரு தனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் நடைபெற்று வருகிறது. ஆகவே திருச்சி மாவட்டத்திற்கு இரண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இப்போது இயங்கி வருகின்றன. எனவே மூன்றாவது அலுவலகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இப்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 275. திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**275—**

## அகல இரயில் பாதை

**•23944—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகரிலிருந்து சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம், காங்கேயம், தாராபுரம் வழியாக பழனிக்கு அகல இரயில் பாதை அமைப்பதற்கு மைய அரசைத் தமிழக அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பெங்களூர்-சத்தியமங்கலம் புதிய அகல இரயில் பாதை மற்றும் மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்கப்பட்ட மைசூர்-சாம்ராஜ் நகர் அகல இரயில் பாதை மாற்றம் ஆகியவை, ஏற்கெனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டங்களில், சாம்ராஜ் நகர், சத்தியமங்கலம் பிரிவும் அடங்கும். இவை தவிர, சத்தியமங்கலத்திலிருந்து கோபிசெட்டிப்பாளையம், காங்கேயம், தாராபுரம் வழியாக பழனி

[2003 ஏப்ரல் 21

வரை உள்ள பகுதியினை ஆய்வு செய்ய, இரயில்வே துறையால் தற்போது ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தையும், தமிழகத்தையும் இணைக்கும் இந்த முக்கியமான சாலையை இரயில் பாதையின் மூலமாக அமைப்பார்களானால், அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கெல்லாம் அதிக அளவிலே உபயோகமாக இருக்கும் என்பதால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் இதை வலியுறுத்தி, கோபிசெட்டிப்பாளையம் வழியாக பழனி வரையில் அகல இரயில் பாதைக்கு மைய அரசை வலியுறுத்துவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலத்திலிருந்து திருப்பூர், தாராபுரம் வழியாக பழனிக்கு குறுகிய இரயில் பாதை அமைக்கும் பொருட்டு, இரயில்வே துறையால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த அறிக்கையில் சத்தியமங்கலம், திருப்பூர், தாராபுரம், பழனி மற்றும் சத்தியமங்கலம், திருப்பூர், காங்கேயம், தாராபுரம், பழனி ஆகிய இரு மாற்று வழி இரயில் பாதைகளுக்கும், திரும்புகைப் பயன் முறையே 2.76 விழுக்காடும் மற்றும் 4.8 விழுக்காடுமாக இருந்தன. எனவே போதுமான திரும்புகைப் பயன் இல்லாத காரணத்தாலும், நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாகவும், இரயில்வே துறை இத்திட்டத்தை—இரயில்வே வாரியம் இத்திட்டத்தை -- தற்போது ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளது. இருந்துபோதிலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மத்திய இரயில்வே அமைச்சகத்தையும், இரயில்வே வாரியத்தையும் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று இன்றைக்கும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 276, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 21]

**276—**

**மின்சாரம் தயாரித்தல்**

**•20780—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியிலுள்ள மோர்தானா அணைக்கட்டில் மின்சாரம் தயாரிக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்தோரையும் நாடிக் கண்டு நல உதவிகள் வழங்கிடும் நன்மணியாம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். என் தொகுதியிலுள்ள மோர்தானா அணைக்கட்டிற்கு ஒரு கிலோ மீட்டர் அருகாமையில், கெங்கன்சிரசு என்ற நீர்ப்பரப்பு, சுருளி நீர்வீழ்ச்சி உள்ளது. அங்கிருந்து வரும் தண்ணீர், மழைக் காலங்களில் மோர்தானா அணையில் நிரம்பி வழிகிறது. மேலும் தற்போது அணைக்கட்டில் 28 அடி அளவிற்கு தண்ணீர் உயர்ந்திருக்கிறது. கிராமத்து மக்கள் நீர் மின்சாரத்தின் ஆதாரத்தையே நம்பி வாழ்கின்றனர். ஆகவே மோர்தானா அணைக்கு அருகாமையிலுள்ள குண்டலபள்ளி, அரவட்லா, கங்கானபள்ளி, ராக்கிமானபள்ளி, அத்திக்குப்பம், சிவனகிரி, திட்டப்பள்ளி, காஸ்மானபண்டா போன்ற மலைவாழ்ப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு உதவியாக, மாண்புமிகு அம்மாவின் அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து, மோர்தானா அணைக்கட்டில் நீர் மின்சாரம் தயாரிக்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய நான் விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோர்தானா அணை 2000 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது. ஒரு அணை கட்டப்பட்ட பின்பு, அதில் நீர்மின்சாரம் தயாரிப்பதற்கு குறைந்தது 5 ஆண்டுகளாவது பாசனத்திற்காக விடப்படுகின்ற நீரின் அளவும், பாசனத்தின் அளவும் குறித்து ஆராய்ந்த பின்னரே அதுகுறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகவே 5 ஆண்டுகள் கழித்து, 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் அதுகுறித்து ஆராயப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 277, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**277—**

**அமுதம் பல்பொருள் அங்காடி**

***22733—திரு. ப. நீலகண்டன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் தற்போது இயங்கிவரும் அரசு அமுதம் பல்பொருள் அங்காடிகளைப்போல் பிற நகரங்களிலும் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இயங்கிவரும் அரசு அமுதம் பல்பொருள் அங்காடிகளைப் போல பிற நகரங்களிலும் அமைக்கின்ற வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழாது.





**திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு இதய தெய்வம், எங்களுடைய குடும்ப தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் அமுதம் பல்பொருள் அங்காடிகள் சுமார் 24 செயல்பட்டு வருகின்றன. இந்த அங்காடிகள் மூலம் தரமான பொருட்கள் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கின்றன. மேலும் பொதுமக்களுடைய பாராட்டையும் பெற்று வருகின்றன. அதேபோல முதல்கட்டமாக மாவட்டத் தலைநகரங்களில் அமுதம் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்பட்டால், அரசின் சார்பு நிறுவனங்களுக்கு வருவாய் கிடைப்பதோடு மக்களுக்குத் தரமான பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கும். மேலும் தனியார் முதலாளிகளினுடைய விலையினை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு, அமுதம் அங்காடிகள் சிறப்புற செயல்பட்டு வருகின்றன. வெளிச்சந்தை விலையையும் கட்டுப்படுத்துவதற்கு உதவும். எனவே மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மாவட்டத் தலைநகரங்களில் அரசு சார்பு நிறுவனமான அமுதம் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தற்போது சென்னையில் 24 அமுதம் பல்பொருள் அங்காடிகளையும், கடலூர் மாவட்டத்தில் 6 அமுதம் பல்பொருள் அங்காடிகளையும் இயக்கி வருகின்றது. வெளிச்சந்தையில் விற்கப்படும் பொருட்களின் விலையை ஓரளவு கட்டுப்படுத்துவதற்காக அமுதம் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்பட்டன. தற்போது தனியார்கள் பல்வேறு இடங்களில் வீதிகள்தோறும் திறந்து நடத்தி வருவதால், நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்திவரும் பல்பொருள் அங்காடிகள் இலாபம் ஈட்டாமல் இயங்கி வருகின்றன. என்றாலும் நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு அந்தக் கடைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் தற்போது மேற்கொண்டு புதிதாக கடைகளைத் திறக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 278, திரு. டி. பி. எம். மைதீன்கான், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**278—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

***19937—திரு. டி. பி. எம். மைதீன்கான்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதி, ரெட்டியார்பட்டியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், ரெட்டியார்பட்டி குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் கிராமக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி மக்கள் தொகையின் அடிப்படையில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 279, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**279—**

**கழிவுநீர் இணைப்பு**

***35379—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் ரூ.100/- மட்டும் செலுத்தி கழிவுநீர் இணைப்புப் பெறலாம் என்ற சிறப்புத் திட்டத்தின்கீழ் இணைப்பு கேட்டு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இணைப்பு கொடுக்கும் பணி எப்போது தொடங்கும்?



**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி சென்னை மாநகரில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழுகின்ற மக்கள் பயன்பெறுகின்ற வகையில் ரூ.100/- மட்டும் செலுத்தி கழிவுநீர் இணைப்புப் பெறலாம் என்ற சிறப்புத் திட்டத்தின்கீழ், கழிவுநீர் இணைப்பு கேட்டு இதுவரை சுமார் 23,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கழிவுநீர் இணைப்பு கொடுக்கும் பணி 10-1-2003 முதல் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை அவைக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவுநீர் தேங்கி நிற்காமல் ஏழை மக்கள் சுகாதாரத்தோடு வாழ வேண்டுமென்று உயரிய நோக்கத்தோடு, மனிதநேய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த திட்டம்தான், வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிற ஏழை மக்களுக்கு ரூ.100/- செலுத்தினால் கழிவுநீர் இணைப்பு கொடுக்கும் திட்டம் என்பதாகும். இந்தத் திட்டத்தில் இதுவரையில் 23,000 விண்ணப்பங்கள் வந்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே கொடுக்கப்பட்டிருக்கிற இணைப்பு விகிதங்களைப் பார்த்தால் 1,213 பேர்களுக்குத்தான் இணைப்புகள் தரப்பட்டுள்ளன. வரப்பெற்ற விண்ணப்பங்களில் தரப்பட்ட இணைப்புகளை கணக்கிட்டுப் பார்த்தால் ஐந்து சதவீத இணைப்புகள்தான் தரப்பட்டிருக்கின்றன. இந்தக் கால அளவும் அதிகமானதாக உள்ளது. மேலும் கழிவுநீர் குழாய்களைப் பதிக்கின்றபோது வைக்கப்பட்ட dummy-களை—அதாவது அடைப்புகள்—குழாய் பதித்தவர்களே நீக்க வேண்டும் என்ற ஒப்பந்தம் இருப்பதாகவும் அறிகிறேன். ஆகவே மக்கள் நலன் கருதி கழிவுநீர் இணைப்புக்கு பணம் செலுத்தியவர்களுக்கு போர்க்கால அடிப்படையில் கழிவுநீர் இணைப்பு தர நடவடிக்கை எடுக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கும் பணி 10-1-2003 முதல் தொடங்கப்பட்டு, போர்க்கால அடிப்படையில் துரிதப்படுத்தப்பட்டு அந்தப் பணிகள் இன்று வரை, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதுபோல அல்லாமல் மொத்தம் 2,802 கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தக் கழிவுநீர் இணைப்புப் பணிகள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கிற மக்களுக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்பதுதான் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவு. அந்த அடிப்படையிலே இந்தப் பணிகள் வெகுவிரைவாக துரிதப்படுத்தப்பட்டு, விண்ணப்பம் செய்த வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற அத்தனை மக்களுக்கும் நிபந்தனைக்கு உட்பட்டு உடனடியாகக் கொடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பி. கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் வறுமைக் கோட்டிற்குக் கீழ் 60,278 குடியிருப்பாளர்கள் வசிப்பதாக கணக்கிட்டிருக்கிறார்கள். இதிலே 23,000 விண்ணப்பங்கள்தான் வரப்பெற்றுள்ளதாக அறிவித்து இருக்கிறார்கள். மீதம் இருக்கிற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தின் தலைமை இடத்தில்தான் இந்த விண்ணப்பங்கள் பெறப்படுவதாகவும், ஆதலால் ஏழையெளிய மக்கள் சென்று விண்ணப்பிப்பதற்கு சங்கடங்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே அவர்கள் வசித்து வருகிற பகுதியிலே இருக்கிற குடிநீர் வழங்கல் அலுவலகங்களிலே இந்த விண்ணப்பங்களைப் பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கிற மக்களின் வருமானம் ஆண்டிற்கு ரூ.18,000-க்குக்கீழ் இருக்க வேண்டும். அவர்கள் வருவாய்த் துறை உயர் அதிகாரியிடமிருந்து வருவாய் சான்றிதழ் பெற்று அளித்தால் மட்டுமே வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற மக்கள் என்று கணக்கில் எடுக்கப்பட்டு 100 ரூபாய் செலுத்தி கழிவுநீர் இணைப்புப் பெறலாம். எனவே தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கும் ஒரு சலுகையாக புதிய



2003 ஏப்ரல் 21]

கழிவுநீர் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு பெற வாரியத்தில் நடைமுறையில் உள்ள கட்டணத்தில் 50 விழுக்காட்டை மட்டும் செலுத்தி அவர்கள் இந்தக் கழிவுநீர் இணைப்பினை பெற்றுக்கொள்ளலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு ரூ.100 கட்டணம் செலுத்தி கழிவுநீர் இணைப்பு பெறலாம் என்ற இந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல இப்போது தலைமை அலுவலகங்களிலே மட்டும்தான் அந்த விண்ணப்பங்கள் பெறப்பட்டுக்கொண்டிருக்கின்றன. நடைமுறைச் சிக்கல்கள் கூடுதலாக இருக்கக்கூடிய காரணங்களால் அந்தந்த வட்டங்களில் இருக்கக்கூடிய குடிநீர் வாரிய அலுவலகங்களிலே இந்த விண்ணப்பங்களைப் பெறுவதற்கு, மீண்டும் தேவையான முகாம்களை நடத்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவுநீர் இணைப்புப் பெறுவதற்கு வட்டங்கள் வாயிலாக, பகுதி வாயிலாக, ஏற்கெனவே சென்னை குடிநீர் வழங்கல் வாரியம் மூலமாக முகாம்கள் அமைக்கப்பட்டு மனுக்கள் பெறப்பட்டன. தற்சமயம் தலைமையிடத்தில் மட்டும் மனுக்கள் பெறப்பட்டு கழிவுநீர் இணைப்புக்குண்டான பதிவுகள் செய்யப்படுகின்றன. சென்னை வாழ் மக்கள் முழுமையாகப் பயன் பெற வேண்டும் என்பதுதான் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவு. அந்த அடிப்படையிலே மேற்கொண்டு அந்தந்தப் பகுதி, வட்டங்கள் வாயிலாகவும், பகுதிகள் வாயிலாகவும் முகாம்கள் அமைக்கப்பட்டு கழிவுநீர் இணைப்பு வழங்குவதற்கு, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற மக்கள் எல்லாம் பயன் பெறுகின்ற வகையி .....

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் பதில் முடிகிற வரைக்கும் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மனுக்கள் பெறப்படும் என்பதை நான் தங்களின் மூலமாக இந்த அவைக்கு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) வேலூர் நாகா ஜுவல்லரி நகைக் கடையில் நடந்த கொலை மற்றும் கொள்ளை

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) வேலூரில் நடைபெற்ற சம்பவம் குறித்து 18-4-2003 அன்று (குறுக்கீடு) வேலூரில் நாகா ஜுவல்லரியில் நடந்த கொள்ளை முயற்சியில் மூவர் சுடப்பட்டு இறந்தது குறித்து, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், திரு. ஞானசேகரன் அவர்கள், திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், திரு. கருணாகரன் அவர்கள், திரு. டி. மணி அவர்கள், திரு. நன்மாறன் அவர்கள், செல்வி பாலபாரதி அவர்கள் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று திரு. சந்தானம் அவர்கள் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் இப்போது எடுத்துக்கொள்கிறேன். இது பற்றிச் சுருக்கமாக விளக்கவேண்டும், அரசின் கவனத்திற்குக்கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-4-2003 ஆம் தேதி இரவு 8-10 மணிக்கு வேலூர் மெயின் பஜாரில் இருக்கக்கூடிய ஒரு பெரிய நகைக்கடையான நாகா ஜுவல்லரிக்குள் இரண்டு தீவிரவாதிகள் அதி நவீன துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்து அவர்கள் பணத்தையும், நகைகளையும் கேட்டபோது அங்கே இருக்கக்கூடிய உரிமையாளர்கள் கொடுக்க மறுத்த காரணத்தாலே துப்பாக்கியால் கடை உரிமையாளர்கள் மூன்று பேரையும்—அண்ணன் தம்பிகள் முதலிலே, சீனிவாசனையும், அதற்குப் பிறகு ராஜேந்திரபாபுவையும் அதற்கு அடுத்து ராஜேஷையும் —3 பேரையும் —அந்தக் கொள்ளையர்கள் சுட்டு நகைகளையெல்லாம் ஒரு பையிலே





போட்டுக்கொண்டு ஓடி இருக்கிறார்கள். சீனிவாசன் என்ற உரிமையாளர் அதே இடத்திலே இறந்து போனார். மற்ற இரண்டு பேரையும், சி.எம்.சி. மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். திருமலை என்கிற குமாஸ்தா, அந்தக் கடையினுள் பணியாற்றிக்கொண்டிருந்த ஏழை குமாஸ்தா, ஓடிய கொள்ளையர்களைத் துரத்திக்கொண்டு வந்து, கிட்டத்தட்ட 100 கஜ தூரம் வந்த பிறகு Palace Cafe Junction சி.எம்.சி. ஆஸ்பத்திரி எதிரில் வருகிறபோது குமாஸ்தா பையை பிடுங்க—கொடுக்க மறுத்த காரணத்தினாலே, பிடுங்குகிற காரணத்தினாலே—ஆத்திரமுற்ற அந்தத் தீவிரவாதிகள் அதி நவீன துப்பாக்கியால் திருமலை என்கிற குமாஸ்தாவையும் சுட்டுவிடுகிறார்கள். அதற்குப் பிறகு அங்கிருந்து 10 அடி நகர்ந்து போலிஸ் சிக்னலில் சிக்னல் போட்டு இருக்கிற காரணத்தாலே, சிவப்பு விளக்கு எரிகிறது என்கிற காரணத்தாலே. மோட்டார் சைக்கிளில் வந்த, தனியார் பள்ளியில் பணியாற்றிக்கொண்டிருந்த ஆசிரியர், ராமு என்பவர்—தன்னுடைய மனைவிக்கு வயிற்று வலி என்கிற காரணத்தாலே, இளநீர் வாங்க வந்தவர்—அவரிடம் மோட்டார் சைக்கிளை தப்பி ஓடுவதற்குக் கேட்கிறார்கள். அவர் கொடுக்க மறுக்கிறார். எட்டி உதைக்கிறார்கள்; அப்போதும் அவர் மோட்டார் சைக்கிளை கொடுக்காத காரணத்தினாலே, அவரை காது அருகே சுட்டு, அவரும் அந்த இடத்திலே மாண்டு போனார். திருமலை என்கிற குமாஸ்தாவும் அந்த இடத்திலே மாண்டுபோனார். பிறகு தீவிரவாதிகள் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடி விடுகிறார்கள். இந்தச் சம்பவம் நடந்த இடம் வேலூர் நகரினுடைய மையப் பகுதி—ஒரு busy ஆன ஏரியா, காவல் நிலையத்திற்கு மிக அருகாமையில் இருக்கக்கூடிய ஓர் இடம். இரவு 10-00 மணி வரை நகைக் கடையானாலும் சரி, பக்கத்தில் இருக்கக்கூடிய மண்டி, மண்டித் தெரு, Long Bazar—தெரு, போன்ற தெருக்கள், Palace Cafe போன்ற பகுதிகளிலே எப்போதுமே நடமாட்டம் அங்கே இருக்கும். கடைகள் எல்லாம் திறந்து இருக்கிற நேரம். அதேநேரத்திலே காவல் துறையினுடைய Beat Point-ல்—திருமலையும் அதேபோல ராமு என்கிற இரண்டுபேர் சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்திலேயே Police Beat point-ல் போலிசார் இருக்கிறார்கள். Beat போலிசார் இருக்கிறார்கள். அதற்குப் பிறகும் 3 Police Beat Point-கள் வருகின்றன. அதற்கடுத்து காட்பாடி மார்கமாகச் சென்றுதான் தப்பிக்கிறார்கள். அங்கேயும் காவல் துறை Beat Points இருக்கின்றன. எங்களுக்கு இருக்கிற ஐயமெல்லாம், காவல் துறை இந்த அளவுக்கு ஏன் தன்னுடைய கட்டுப்பாட்டை இழந்து விட்டது என்கிற ஒரு கேள்வியை இந்த

நேரத்திலே நான் எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக மக்களுக்குப் பாதுகாப்பை அளிப்பதும், அவர்கள் சர்வ சுதந்திரமாகத் தங்கள் தொழிலை செய்வதற்கும் தகுந்த ஏற்பாட்டைச் செய்து தருவதற்காகத்தான் நாம் நம்முடைய காவல் துறையை வைத்திருக்கிறோம். ஸ்காட்லாண்டு யார்டுக்கு இணையான போலிஸ் என்று பெயர் பெற்றிருப்பது நம்முடைய தமிழகப் போலிஸ்

*முற்பகல் 11-05*

பொதுவாக தீவிரவாதிகள் அதிநவீன துப்பாக்கியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் துப்பாக்கி இந்தப் பகுதியிலேயே விற்பனை செய்யப்படக்கூடிய துப்பாக்கியும் அல்ல; இங்கே தயாரிக்கக்கூடிய துப்பாக்கியும் அல்ல. அது அதிநவீன துப்பாக்கி என்று சொல்கிறார்கள். அது சுடப்பட்ட சத்தம்கூட கேட்காத அளவுக்கு மிக மெல்லிய சப்தத்தை உருவாக்கக்கூடிய மிக Powerful-ஆன ரவைகளைக் கொண்டிருக்கக்கூடிய துப்பாக்கிகள் அந்தத் துப்பாக்கிகள். அப்படிப்பட்ட துப்பாக்கிகளைப் பயன்படுத்திய தீவிரவாதிகள் பகலில் ஏதோ சொந்தக்காரரர் வீட்டிற்கு வந்து போவது போல துப்பாக்கியோடு வருகிறார்கள். வந்து சுட்டுவிட்டு, தப்பி ஓடுகிறார்கள். பொதுவாக இப்படி வரக்கூடியவர்கள் முன்னேற்பாட்டோடு ஏதாவது வாகனத்திலே வந்து தப்பித்தார்களா என்றால் அதுவும் இல்லை. அவர்கள் தமிழகத்திற்குள்ளே வேலூருக்கு, வ்ந்து சுட்டுவிட்டு, ஆளை சுட்டுத் தள்ளிவிட்டு, நகைகளையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு, சகஜமாகப் போய்விடலாம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அல்லவா இன்று நாட்டினுடைய சட்டம்-ஒழுங்கு கெட்டிருக்கிறது என்பதை நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே முழுமையான விவாதம் *(மணியடிக்கப்பெற்றது)* முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முழுமையான விவாதம் எல்லாம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இதிலே நீங்கள் பேசுகிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, கொஞ்சம் பேசி முடிக்க விடுங்கள். எவ்வளவு முக்கியமான சம்பவம். நீங்கள் ஒரேயடியாக...



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முக்கியமான சம்பவம் பத்திரிகையில் வந்திருக்கிறது, தொலைக்காட்சியிலே அது வந்திருக்கிறது. விவரம் எல்லாம் தெரியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகளுக்கு பொதுவான இப்படிப்பட்ட சம்பவங்களை எடுத்துச்சொல்வதற்கு ஒரு வாய்ப்பை நீங்கள் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள். முதலமைச்சர் பதில் சொல்வார்கள். திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஏன் இப்படி நடந்தது என்பதற்கான காரணத்தைக் கண்டு, முனைப்போடு செயல்பட வேண்டும் என்று சொன்னால் சில பாயிண்ட்டுகளைச் சொல்லியாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுதான், கவனத்திற்குக் கொண்டு வாருங்கள், அவ்வளவுதான். திரு. ஹேமச்சந்திரன். *(குறுக்கீடு)* சம்பவத்தைச் சொல்லிவிட்டீர்கள்; விளக்கம் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, எதிர்க்கட்சிகள் இப்படிப்பட்ட முக்கியமான சம்பவத்தைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்புத் தரவில்லை என்றால் நீங்கள் சட்டமன்றத்தை மூடிவிட்டுப் போகலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அளவுக்கு சம்பவம் எங்களுடைய வேலூரில் நடந்திருக்கின்ற காரணத்தினாலே மக்கள் இன்னும் பீதியோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு அப்பாவி மக்கள், மிக ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்திருக்கிற ராமு என்கிற ஆசிரியர்; அதேபோல திருமலையினுடைய குடும்பம் இன்று நட்டாற்றில் விடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு முதல்வர் அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாவது அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சட்டம்-ஒழுங்கை சீர்படுத்த T.S.P. சிறப்பு Battalion-ஐ அந்த இடத்திலே நீங்கள் நிரந்தரமாகப் போட்டு, பாதுகாப்பைத்தர சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்ற உளவுத் துறையை நீங்கள் முடுக்கிவிடவேண்டும். இன்னும் குற்றவாளிகள் கைது செய்யப்படவே இல்லை. Still it is a thousand dollar question still unanswered. ஆகவே இந்த குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையை காவல் துறை எடுத்திருக்கிறதா? இந்த நவீன துப்பாக்கிகள் எங்கே தயாரிக்கப்பட்டன? இந்தத் தீவிரவாதத்தை தமிழகத்திலிருந்து வேரறுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களை ஒட்டுமொத்தமாக பீதியிலே கொண்டு விட்டிருக்கிற ஒரு நிகழ்ச்சி இது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேலூரிலே நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள் பத்திரிகைகளில் வந்திருக்கிற செய்தி என்னவென்றால், இந்தச் சம்பவம் நடக்கிற கடைக்கு அருகாமையிலேயே ஒரு Traffic Police Constable கூட நின்று கொண்டிருந்திருக்கிறார். ஆனால் அவர் இதிலே ஒன்றும் தலையிட்டு தடுப்பதற்கு முன்வரவில்லை. ஒருவேளை, உயிருக்குப் பயந்து அவர் அதைச் செய்யாமல் இருந்திருக்கக்கூடும். ஆனால் நான் இதை ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி என்று பார்க்கவில்லை.

அதேபோல ஏப்ரல் 13 ஆம் தேதி சென்னை நகரத்திலே, T. Nagar-லே ஒரு வைரக் கடையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், வேலூர் சம்பவம் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்தச் சம்பவத்திற்குள்ளே போகவில்லை. அந்த வைர நகைக் கடையிலே திருட்டு நடந்திருக்கிறது, கொள்ளை நடந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றையெல்லாம் தனியாக எடுத்துக்கொள்ளலாம்.





**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தமிழகத்திலே பல பகுதிகளிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கிற ஓர் அவல நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. காவல் துறை இதில் எந்த அளவுக்கு கவனமாக இருந்து மக்களுக்கு நம்பிக்கையூட்டக்கூடிய முறையிலே, இப்படிப்பட்ட கொள்ளைகளும், கொலைகளும் தடுக்கப்படும் என்ற முறையிலே நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய கடமை அரசாட்சிக்கு இருக்கிறது என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிச்சயமாக தமிழகத்தினுடைய காவல் துறையை நல்ல முறையிலே உள்ள காவல் துறையாக மாற்றுவதற்கு பல திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை அமல்படுத்துவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள். நான் அதை கவனத்தில் வைத்துக்கொண்டுதான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று சென்னை நகரத்திலே சட்டமன்றம் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பிறகு பல இடங்களிலே பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலூர் சம்பவம் பற்றி மட்டும்தான் சொல்ல வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்குத் தகுந்த அளவிலே காவல் துறையை என்னென்ன முறையிலே முடுக்கிவிட முடியுமோ அப்படி நீங்கள் முடுக்கிவிட்டு, தமிழக மக்களுக்கு, அதுவும் குறிப்பாக சென்னை நகரத்திலே இருக்கிற மக்களுக்கு, அவர்களுடைய சொத்துக்கும், உயிருக்கும் பாதுகாப்பு உண்டு என்ற ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய முறையிலே அரசாட்சி தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்தி, நான் அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 11-10*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 18-4-2003 ஆம் நாள் வேலூரிலே நாகா ஜுவல்லரி என்கின்ற நகைக் கடையிலே சில தீவிரவாதிகள் துப்பாக்கியோடு புகுந்து அங்கிருக்கின்ற 3 பேரை சுட்டுக் கொலை செய்து, தப்பித்துச் சென்றிருக்கிறார்கள் என்கின்ற சம்பவம் நம்மையெல்லாம் வருத்துகின்ற சம்பவமாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தைப்

பொறுத்தளவிலே இன்றைக்கு சட்டம்-ஒழுங்கு நன்றாகப் பராமரிக்கப்படுகின்ற நிலை இருக்கின்ற நேரத்திலே இப்படிப்பட்ட ஒரு துரதிருஷ்டவசமான சம்பவம் நடந்திருக்கிறது. அவற்றையெல்லாம் இன்றைக்கு இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இப்படிப்பட்ட துயரச் சம்பவங்கள் நடைபெறாது காவல் துறை மிக விழிப்போடு இருந்து செயல்படவேண்டும். மக்களுடைய உடமைக்கும், உயிருக்கும் பாதுகாப்புத் தருகின்ற நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் முக்கிய கடை வீதியில் அமைந்துள்ள நாகா ஜுவல்லரி என்கின்ற நகைக் கடையில் 18-4-2003 அன்று இரவு 8-20 மணியளவிலே முழுக்கால் சட்டையும், 'T' சட்டையும் அணிந்த அடையாளம் தெரியாத 25 முதல் 30 வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் நகை வாங்குபவர்கள் போல் உள்ளே நுழைந்து முதலில் தங்கச் சங்கிலி வேண்டுமென்று கேட்டார்கள். பின்னர் கடையின் உரிமையாளர் திரு. நாகராஜன் என்பவரின் மகன் திரு. ராஜேஷ் என்பவரைப் பார்த்து கடையிலுள்ள பணம் முழுவதையும் கொள்ளையர்களில் ஒருவன் கேட்டிருக்கிறான். திரு. ராஜேஷ் மற்றும் அவரது சகோதரர் திரு. சீனிவாசன் ஆகிய இருவரும் பணத்தைக் கொடுக்க மறுக்கவே, கொள்ளையர்களில் ஒருவன் துப்பாக்கியை எடுத்து திரு. சீனிவாசனை நோக்கிச் சுட்டிருக்கிறான். பயந்து போன திரு. ராஜேஷ் உடனே பணத்தை எடுத்து கொள்ளையனிடம் கொடுத்திருக்கிறார். இருப்பினும் கொள்ளையர்கள் திரு. ராஜேஷ் மற்றும் அவருடைய மூத்த சகோதரர் திரு. ராஜேந்திரபாபு ஆகிய இருவரையும் சுட்டிருக்கிறார்கள். மேலும் கொள்ளையர்கள் கடை உரிமையாளரின் நெருங்கிய உறவினர் திரு. சதிஷ் என்பவரை உதைத்துத் தள்ளி, ஒரு கண்ணாடி அலமாரியை உடைத்து சுமார் 10 சவரன் தங்க நகைகளையும், இரண்டு தட்டுகளில் இருந்த வெள்ளிக் கொலுசுகளையும், பணம் சிறிதளவையும், மொத்தத்தில் ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள பொருள்களை கொள்ளையடித்திருக்கிறார்கள். பிறகு கொள்ளயடித்த நகைகளையும், பணத்தையும் ஒரு பையில் எடுத்துக் கொண்டு கடையைவிட்டு வெளியேறி உள்ளனர். அச்சமயத்தில் கடைக்குத் திரும்பிக் கொண்டிருந்த கடை ஊழியர் திரு. திருமலை என்பவர் கொள்ளையர்களை விரட்டி பையைப் பிடுங்க முயற்சி



செய்தார். கொள்ளையர்கள் அவரைச் சுட்டுக் கொன்றனர். மேலும் கொள்ளையர்கள் தங்களை விரட்டிய பொதுமக்களையும் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார்கள். வழியில் கொள்ளையர்கள் பேலஸ் கபே சந்திப்பு என்ற இடத்தில் டி.என்.23-எப்-9895 என்ற ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிளில் வந்த திரு. ராமு என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று அவருடைய மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளனர். அப்போது பேலஸ் கபே சந்திப்பில் இருந்த காவல் அதிகாரிகள் கொள்ளையர்களை விரட்டினர். ஆனால் அதிக போக்குவரத்தின் காரணமாக காவலர்களின் பார்வையில் இருந்து கொள்ளையர்கள் மறைந்துவிட்டனர். நகைக் கடையின் உரிமையாளரின் மகனான திரு. சீனிவாசன் மற்றும் ஊழியர் திரு. திருமலை, இருவரும் வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இறந்த நிலையில் கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, பிரேத அறையில் சடலங்கள் வைக்கப்பட்டன. திரு. ராஜேந்திரபாபு மற்றும் திரு. ராஜேஷ் இருவரும் அதே மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். ஹீரோ ஹோண்டா வாகனத்தில் வந்தபோது, கொள்ளையர்களால் சுடப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துபோன திரு. ராமுவின் சடலம் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிணவறையில் வைக்கப்பட்டது. கொள்ளையர்கள் தப்பிச் செல்லும் வழியில் அந்த இரு சக்கர வாகனத்தை சுமார் 12 கி.மீ. தொலைவிலுள்ள கரிசமங்கலம் சந்திப்பில் விட்டுவிட்டு தலைமறைவாகிவிட்டனர்.

வேலூர் சரகக் காவல் துறை துணைத் தலைவரும், மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரும் சம்பவ இடத்திற்குச் சென்று மாவட்ட போலீஸ் அதிகாரிகளை துரிதப்படுத்தி புலன் விசாரணையை மேற்பார்வையிட்டனர். கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு) மற்றும் வடக்கு மண்டல காவல் துறைத் தலைவர் ஆகியோர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, மாவட்டக் காவல் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்கள்.

முற்பகல் 11-15

தமிழக எல்லையிலுள்ள ஆந்திர பிரதேச காவல் துறையினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அனைத்து மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்களும் வாகனத் தணிக்கையைத் தீவிரப்படுத்தவும்

தேடுதல் வேட்டையைத் துரிதப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். வேலூர் வடக்கு காவல் நிலைய குற்ற எண் 71/2003 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 394, 397, 307, 302 மற்றும் இந்திய ஆயுதச் சட்டம், 25 உட்பிரிவு 1(ஏ)-ன்கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடய அறிவியல் நிபுணர்களும், கைரேகை நிபுணர்களும் புலன் விசாரணைக்கு உதவி புரிந்து வருகின்றனர். சம்பவ இடத்திலிருந்தும், மோட்டார் சைக்கிளில் இருந்தும் கைரேகைகள் எடுக்கப்பட்டுள்ளன. குற்றம் நிகழ்ந்த இடத்திலிருந்து காலி ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. மூன்று சடலங்களும் பிரேதப் பரிசோதனைக்குப்பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. கொள்ளையர்களைப் பிடிக்க ஆறு தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கொலைகளுக்கான அனைத்து நோக்கங்களும் ஆராயப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

## (ஆ) நக்கீரன் ஆசிரியர் திரு. ஆர்.ஆர். கோபால் பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. ஞானசேகரன், திரு. பழனிசாமி, திரு. ஹேமச்சந்திரன், திரு. டி.மணி, திரு. கருணாகரன், திரு. நன்மாறன், செல்வி பாலபாரதி ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கிறேன். இதுபற்றிச் சுருக்கமாகக் கருத்துகளைக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால் அவர்கள்மீது முதலிலே ஆயுதச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, பிறகு 'பொடா சட்டத்தின்கீழ் அந்த வழக்கு மாற்றப்பட்டு, இப்போது சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவத்தில் இவர் ஈடுபட்டதாகச் சொல்லி அந்த வழக்கிலே இவரை இணைத்து, பிறகு அதனுடைய அடிப்படையில் இப்போது ஆயுதம் வைத்திருந்ததாகச் சொல்லி பொடா வழக்கு இப்போது பத்திரிகை ஆசிரியர்மீது போடப்பட்டிருக்கிறது. ஒரு பத்திரிகை ஆசிரியர்மீது இப்படிப்பட்ட வழக்கை அரசு, 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வுக்காக இப்போது போடப்பட்டிருக்கிறது.





பொடா வழக்கு இப்போது போடப்பட்டிருப்பது என்பது பத்திரிகையாளர்களை அச்சுறுத்துவதற்கு இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்கிற அளவில், ஒரு பெருத்த கண்டனம் எல்லாத் தரப்பு மக்களிடமிருந்தும் வந்துகொண்டிருக்கிறது. பொதுவாக தீவிரவாதிகளை அடக்குவதற்காக, அவர்களை ஒடுக்குவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம், பத்திரிகையாளர்மீது பாய்வது என்பது ஏற்புடையது அல்ல; தமிழகத்திலே இப்படிப்பட்ட ஒரு சூழலில்-இப்படிப்பட்ட சம்பவம் வருகிறபோது, பத்திரிகையாளர் எந்தக் கருத்தையும் சுதந்திரமாகச் சொல்ல முடியாமல் அவர்கள் அவதிக்கு ஆளாக வேண்டிய ஒரு சூழ்நிலை வந்துவிடுகிறது. ஏனென்றால், பத்திரிகைகள்தான் நாட்டில் நடக்கக்கூடிய சம்பவங்களை நமக்கு எடுத்துரைக்கக்கூடிய ஒரு சாதனமாக இருந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பத்திரிகைத் துறைக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது நம் தலையாய கடமை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், நம்முடைய அரசு, பத்திரிகையாளரை திடீரென்று அவர் அலுவலகத்தில் இருக்கிறபோது, ஒரு Call Taxi-யில் சென்று அவரைப் பிடித்து, ஆயுதச் சட்டம் என்று முதலிலே போட்டு, பிறகு, பொடா சட்டத்திற்கு அந்த வழக்கை Convert செய்து, இப்படி நாம் அச்சுறுத்துவது நியாயம்தானா? இதை மறுபரிசீலனை செய்து அரசு உடனடியாக இப்படிப்பட்ட அச்சுறுத்துகின்ற பணியிலிருந்து விடுபடவேண்டும் என்கிற கோரிக்கையை காங்கிரஸ் தரப்பில் நான் வைக்கிறேன். இந்த பொடா சட்டத்தின்கீழ் உண்மைக்கு மாறான வழக்கைத் தொடுத்து இருக்கிறது அரசு என்று, எல்லா மக்களும் பொதுவாக சொல்லக்கூடிய அளவில் சூழ்நிலை உருவாகி இருப்பதை அரசு உடனடியாக மாற்றியமைத்து, **நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாகச் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது** என்று சொன்னது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** உண்மைக்கு மாறான வழக்கு என்று போட்டுக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நக்கீரனுடைய ஆசிரியர் கோபால் சம்பந்தமான

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வழக்குகளுக்கு உள்ளே நான் போக விரும்பவில்லை. அதற்கு அரசு சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுங்கள். ஆனால் பொடா சட்டத்திலே அவரைக் கைது செய்திருப்பது என்பது ஒரு சரியான நடவடிக்கை அல்ல என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-20*

இன்று சாதாரணமான, மாமூலான சட்டப்படி நடவடிக்கைகள் எடுப்பதற்கு இடமிருக்கிறபோது, இத்தகைய வழக்குகளைப் பொறுத்தளவிலே, அது சம்பந்தமான குற்றவாளிகளைப் 'பொடா' சட்டத்திலே போட்டு, அவர்கள் இன்று சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகிற நடவடிக்கை என்பது கண்டனத்திற்குரியது என்பது எங்களுடைய கருத்து. இன்று தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு உருவாக்கப்பட்ட சட்டம் என்ற முறையிலே, மத்திய அரசால் உருவாக்கப்பட்டிருக்கிற 'பொடா' சட்டத்தைப் பற்றியே மத்திய அரசிலே இருக்கிற கட்சிகளுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் வெளியே வந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, இப்போது தமிழக அரசு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இங்கு வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறேன். அவர் ஏதாவது குற்றம் செய்திருக்கிறார், நக்கீரன் பத்திரிகையினுடைய ஆசிரியர் செய்திருக்கிறார் என்றால், எங்களுக்குத் தெரிந்த அளவிலே இன்று பத்திரிகைகளிலே வந்திருக்கிற செய்திகள்படி பார்த்தால், அவர் மேலே கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளைக் குறித்து இன்று இந்த நாட்டிலே உருவாக்கி இருக்கிற அல்லது நாட்டிலே நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிற மற்ற சட்டங்கள்படி நடவடிக்கை எடுக்கலாம் என்றுதான் தெரிகிறது. ஆகவே அப்படிப்பட்ட நேரத்திலே, இப்படி—பத்திரிகையாளர்களை அல்லது பத்திரிகை உலகத்தையே முழுமையாக வேதனைப்படுத்தக் கூடிய முறையிலே பத்திரிகையாளர்கள்மீதும் இந்தக் கோரச் சட்டம் பாயும் என்ற ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய முறையிலே இன்று இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி இருப்பதைக் கைவிட்டு மாமூலான சட்டப்படி நாட்டிலே இருக்கிற மற்றச் சட்டப்படி அவர் மேலே நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் 'பொடா' சட்டத்தை, அவர் மேலே போட்டிருக்கிற வழக்கை வாபஸ் பண்ண வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நான் வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை ஆசிரியர் நக்கீரன் கோபால் அவர்களை நள்ளிரவிலே கடந்த *12* ஆம் தேதி கைது செய்கிறபோது அரசின் தரப்பிலே சொல்லப்பட்டிருக்கிற காரணம் ஒன்று, அவர்மீது பல்வேறு வழக்குகள் இருப்பதால் அவர் கைது செய்யப்பட்டார். சந்தனக் கடத்தல் வீரப்பன் அவர்களை, சந்தித்ததினுடைய விளைவாக ஏற்பட்டிருக்கிற பண மோசடி மற்றும் கையாடல் காரணமாகவே அவர் கைது செய்யப்படுகிறார் என்பதுதான் காரணமாக இருந்தது. ஆக, காவல் துறையிலே முதலில் கைது செய்கிறபோது ஒரு காரணத்தைச் சொல்வதும், கைது செய்யப்பட்ட பின்னால் அவர்மீது இப்போது இருக்கிற கொடுமையான சட்டமான 'பொடா' சட்டத்திலே கைது செய்திருப்பது என்பதும் ஜனநாயகத்தின் ஒரு தூணாக இருக்கிற பத்திரிகைகளை அச்சுறுத்துவதாகும். ஒன்று. 'பொடா' சட்டத்தின்கீழ் வழக்கு போடக்கூடிய அளவிற்கு அவர் என்ன செய்தார்? என்பதற்கு இந்திய அரசிடத்திலிருந்து நான் விளக்கம் பெற விரும்புகிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோதும் நாடாளுமன்றத்திலே நடந்த விவாதத்தின் போதும் மைய அரசால் சொல்லப்பட்டது என்னவென்றால் எல்லைதாண்டிய தீவிரவாதம் இந்திய நாட்டிலே ஊடுருவக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதாகும். இன்னும் NSA சட்டம் இருக்கிறது, பிறகு 'தடா' சட்டம் இருக்கிறது. பிறகு 'மினி மிசா' இருக்கிறது. இவற்றையெல்லாம் தாண்டித்தான் இந்த 'பொடா' சட்டம் அன்றைக்கு வந்தது. அப்படியானால் எல்லைதாண்டிய தீவிரவாதத்தோடு தமிழகத்திற்குத் தொடர்பு இருக்கிறதா? எல்லை தாண்டிய தீவிரவாத ஊடுருவல் இருக்கிறதா? அப்படிப்பட்ட நிலை உருவாவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன எனபதை அரசே ஒத்துக்கொள்கிறதா? இல்லையென்றால் பிறகு அந்தச் சட்டத்தைக் கொண்டு ஒரு பத்திரிகையாளரைக் கைது செய்வதற்கு என்ன காரணம்? அந்நிய நாட்டிலிருந்து உலக நாட்டிலேயிருந்து தூதர்கள் இங்கு வந்து ஏதாவது ஒரு இரகசிய உடன்பாடு வைத்திருக்கிறார்களா என்பது பற்றி இன்றைக்கு கேள்விக்குறியைத் தொடரவேண்டிய அவசியம் இருக்கிறது.

அதேநேரத்திலே ஜனநாயகபூர்வமாக, நாட்டு மக்களுடைய பிரச்சினையிலே எந்த ஒரு பத்திரிகை எழுதினாலும் இப்படிப்பட்ட வழக்குகள் போட்டுத்தான் தீரவேண்டுமா? வேறு சட்டமே

கிடையாதா? ஆக இப்படிப்பட்ட சட்டம் போட்டிருப்பது என்பது ஏதோ ஒரு பழிவாங்குகிற நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதாகவும், நிகழ்ச்சிகளை அச்சுறுத்துவதற்காகவும் இது பயன்படுத்தப்படுகிறது. ஏற்கெனவே 2,3 தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பழனிசாமி, இது 'பொடா' சட்டம் பற்றிய விளக்க உரை அல்ல.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, நான் விளக்க உரை ஆற்றவில்லை. விளக்கம் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நக்கீரன் கோபாலைப் பற்றி அரசினுடைய விளக்கம் என்ன என்று சொல்லிக் கேளுங்கள்.

**திரு.ஜி. பழனிசாமி:** விளக்க உரை நான் ஆற்றவில்லை. விளக்கம் வேண்டும் என்று நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான். நக்கீரன் கோபால், 'பொடா' சட்டத்தில் கைது செய்யப்பட்டது பற்றிக் கேளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அரசுத் தரப்பிலேயிருந்து விளக்கம் பெற வேண்டுமென்பதற்காகத்தான் கேட்கிறேன். அரசுத் தரப்பிலேயிருந்து சில விளக்கங்களைப் பெற வேண்டும். சாதாரணமாகப் பேசிவிட்டு, இரண்டு வரியிலே இதைச் சொல்லிவிட முடியாது.

பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற சட்டத்திலே, இந்தியாவில் இருக்கின்ற மோசமான சட்டம்....

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இது ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு. நீங்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றித்தான் விளக்கம் சொல்ல வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** தமிழக அரசு மட்டும்தான் இதுபோன்ற சட்டங்களைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகையினால் விவாதிக்க வேண்டிய அவசியமிருக்கிறது. இதைச் சொல்வதன் மூலமாக அரசிடத்திலேயிருந்து தமிழ்நாட்டு மக்கள் தெளிவு பெறுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அரசு நிகழ்ச்சிகளுக்கும்



விளக்கம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இரண்டொரு வரி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இந்தப் பிரச்சினையைப் பற்றி நீங்கள் சுருக்கமாகச் சொல்ல முடிந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதுதான், அரசிடமிருந்து விளக்கம்தான் நான் எதிர்பார்க்கிறேன். ஆகையினால் இப்படி பத்திரிகை ஆசிரியர்களை அச்சுறுத்துவது என்பது சரியல்ல. அரசியல் கட்சிகளுடைய தலைவர்களைக் கைது செய்வது சரியல்ல. இதற்கான முழுமையான விளக்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மாண்புமிகு முதலமைச்சரிடத்திலேயிருந்து எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28-6-2001 அன்று ராஜாமணி என்பவர் காணாமல் போனது பற்றிய வழக்கு ஒன்று சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது மேற்படி ராஜாமணி என்பவர் ஒரு போலிஸ் தகவலாளி என்ற சந்தேகத்தில், 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வீரப்பனும் அவனுடைய கும்பலும் ராஜாமணியைப் பிடித்து சத்தியமங்கலம் காட்டில் வைத்துக் கொலை செய்தது தெரிய வந்தது. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையின்போது, ஆர்.ஆர். கோபால் என்கிற நக்கீரன் கோபால் மற்றும் அவரது நிருபர்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பது தெரிய வந்தது. ராஜாமணி ஒரு போலிஸ் தகவலாளி என்ற விவரத்தை நக்கீரன் கோபால் மூலம் தெரிந்துகொண்ட வீரப்பன், ராஜாமணியை காட்டிற்குள் அழைத்துவரச் செய்து சித்ரவதை செய்து கொலை செய்துவிட்டான். வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் பற்றி போலிசுக்கு தகவல் கொடுப்பவர்களுக்கு இந்த நிலைதான் ஏற்படும் என்று பொது மக்களை அச்சுறுத்தவேண்டி ராஜாமணி கொலை பற்றிய விவரத்தையும் மற்றும் கந்தவேலு, பக்தவத்சலம் ஆகிய போலிஸ் தகவலாளிகள் கொலை பற்றிய விவரங்களையும், புகைப்படங்களையும் 24-11-1998, 27-11-1998 மற்றும் 4-12-1998 ஆகிய தேதியிட்ட நக்கீரன் இதழ்களில்

"வீரப்பன் கோர்ட்டில் விசாரணை—ஆள் காட்டிக்கு மரண தண்டணை" என்ற தலைப்பில் நக்கீரன் கோபால் பிரசுரம் செய்துள்ளார்.

11-4-2003 அன்று இரவு சுமார் 8-40 மணிக்கு எண் 105, ஜானி ஜகான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை-14-ல் உள்ள நக்கீரன் அலுவலகம் அருகில் எதிரி ஆர்.ஆர். கோபால் கைது செய்யப்பட்டார். குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அலுவலகத்திற்கு எதிரியை அழைத்து வந்து அவரைச் சோதனை செய்தபோது, அவரிடம் உரிமம் இல்லாத நாட்டு கைத்துப்பாக்கி ஒன்றும், இரண்டு தோட்டாக்களும் மற்றும் தடை செய்யப்பட்ட தமிழர் விடுதலைப் படை அமைப்பின் பிரசுரமும் இருந்தன. இரண்டு தனி நபர் அரசு சாட்சிகள் முன்னிலையில் அவை கைப்பற்றப்பட்டன. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வாளர் கொடுத்த புகாரின்பேரில், குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தலைமையிட குற்ற எண் 1/2003 ஆயுதச் சட்டம் 1959-ன் சட்டப் பிரிவு 25, உட்பிரிவு 1(பி) (ஏ) மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124(ஏ)-ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, இந்த வழக்கில் ஆர்.ஆர். கோபால் 12-4-2003 அன்று அதிகாலை 0-40 மணிக்கு கைது செய்யப்பட்டார். அவர் 12-4-2003 அன்று எழும்பூர் ஆறாவது பெருநகர நடுவர் அவர்கள் முன்பு ஆஜர் செய்யப்பட்டு, 25-4-2003 அன்று வரை நீதிமன்றக் காவல் உத்தரவு பெற்று சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த வழக்கின் விசாரணையின்போது எதிரி ஆர்.ஆர்.கோபால், சந்தனக் கடத்தல் வீரப்பனின் நெருங்கிய கூட்டாளி என்பதும், வீரப்பனுக்கும், தமிழ்நாடு விடுதலைப் படை மற்றும் தமிழ்நாடு மீட்சிப் படை ஆகிய அமைப்புகளுக்கும் ஆர்.ஆர். கோபால் மூலம் பல கோடி ரூபாய்கள் கைமாறியதும் தெரியவந்தது. மேலும் ஆர்.ஆர். கோபால், தடை செய்யப்பட்ட தமிழ்நாடு விடுதலைப் படை மற்றும் தமிழ்நாடு மீட்சிப் படை அமைப்புகளின் கருத்துகளை வெளியிடுபவராக இருந்துள்ளார் என்பதும் தெரிய வந்தது. இந்தத் தீவிரவாத அமைப்புகள் அரசாணை எண் 4, எஸ்.ஓ.682 (இ), நாள் 1-7-2002-ன்படி பொடா சட்டம் 2002-ன் இணைப்பிலுள்ள அட்டவணையில் வரிசை எண்கள் 30 மற்றும் 31-ல் தடை செய்யப்பட்ட இயக்கங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு 1-7-2002 அன்று, இந்திய அரசு சிறப்பு இதழ் பாகம் 2, பிரிவு 3, உட்பிரிவு 2, எண் 579-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.





முற்பகல் 11-30

தமிழக அரசு, 24-12-2002 அன்று வெளியிட்டுள்ள அரசாணை எண் 1262, உள் துறை, காவல் 7-ன்படி தமிழ்நாடு முழுவதும், பொடா சட்டம், பிரிவு 4-ன்கீழ் அறிவிக்கப்பட்ட பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே உரிமம் இல்லாத நாட்டுக் கைத்துப்பாக்கி, 2 தோட்டாக்கள் மற்றும் தமிழ்நாடு விடுதலைப் படை இயக்கத்தின் பிரசுரங்கள் வைத்திருப்பது பொடா சட்டம் பிரிவு 4(ஏ)-ன்படி குற்றமாகும். இந்தக் காரணங்களினால், பொடா சட்டம் 2002 பிரிவு 4(ஏ)-ன் கீழ் வழக்கு, பூந்தமல்லியில் பொடா சட்டத்திற்காக நிறுவப்பட்டுள்ள தனி நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. 16-4-2003 அன்று கூடுதல் பெருநகரக் குற்றவியல் நடுவர், எழும்பூர் அவர்கள் இந்த வழக்கை பூந்தமல்லியில் உள்ள பொடா நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவு பிறப்பித்தார். அதன்பேரில் பொடா நீதிமன்றம் எதிரியை ஆஜர் செய்ய 18-4-2003 அன்று உத்தரவு பிறப்பித்து அது எதிரிக்கு serve செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில், எதிரி ஆர்.ஆர்.கோபால், ராஜாமணி கொலை வழக்கு தொடர்பாக 17-4-2003 அன்று கோபிசெட்டிப்பாளையம் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 15 நாள் நீதிமன்றக் காவல் பெற்று, சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. வேல் முருகன் அவர்கள் இருக்கையில் இல்லாத காரணத்தால் தள்ளிவைக்கப்படுகிறது.

## 3. அறிவிப்பு

**உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சி திட்டத் தொடக்க விழா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிப் பயிற்சி திட்டத் தொடக்க விழா, தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் இன்று (21-4-2003) மாலை 4-00 மணியளவில் சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் 10-வது தளத்தில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 21

சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மாலை 3½ மணியளவில் இருக்கையில் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் இவ்விழாவில் கலந்துகொள்வதற்கு ஏதுவாக, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிமுக நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**திரு.சி.ஞானசேகரன்:** நாங்களும் அறிமுக நிலையிலேயே இதை எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



### (ஆ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடங்களை வரன் முறைப்படுத்துகிற இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

### புது தில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழிருக்கை நிறுவ நல்கைத் தொகை வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியின்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியின் வளர்ச்சியில் என் தலைமையில் அமைந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. எந்த வகையில் எல்லாம் தமிழுக்கு சிறப்புச் செய்ய முடியுமோ, அந்த வகையில் எல்லாம் தமிழை வளர்க்க உறுதி பூண்டிருக்கிறது இந்த அரசு. இவ்வரசின் “இன்றும் தமிழ் என்றும் தமிழ்” என்ற குறிக்கோளுக்கிணங்க, தமிழ் மொழியின் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு எடுத்து வருகின்றது.

*முற்பகல் 11-35*

ஆட்சி மொழித் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த உறுதி பூண்டுள்ள இவ்வரசு, மைய அரசின் ஆட்சி மொழிகளுள் தமிழ் மொழியையும் ஒன்றாக அறிவிக்கவும், தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்கவும் வேண்டுமென்று மைய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காக, அனைத்து சாத்திய முறைகளிலும் தமிழ் மொழியினைச் செம்மைப்படுத்தவும், மேம்படுத்தவும் இவ்வரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அவ்வகையில், மற்ற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கைகள் தோற்றுவிக்க நல்கைகள் வழங்கப்படுகின்றன. மேலும் தற்போது இயங்கி வரும் உலகக்



தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மூலம், உலகில் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழறிஞர்களின் ஒத்துழைப்புடன், தமிழியல் துறைகளுடன் இணைந்து தமிழாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் நல்கைகள் வழங்கப்படுகின்றன.

இந்தியத் தலைநகரில் உள்ள புகழ்மிக்க ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காக தமிழிருக்கை நிறுவப்படுவதன் இன்றியமையாமையையும், தேவையையும் கருத்தில்கொண்டு, ஐம்பது இலட்சம் ரூபாய், ஒட்டுமொத்த நல்கைத் தொகையாக ஒரே தவணையில் வழங்க One time lumpsum grant- ஆக வழங்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்தில், இது தொடர்பாக சில செய்திகளை இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன். புது தில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், தமிழிருக்கை நிறுவுவதற்கு நல்கை வழங்குமாறு, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகள் மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவரின் 15-3-2000 நாளிட்ட கடிதம் வாயிலாக வேண்டுகோள் வரப்பெற்றது. தி.மு.க. ஆட்சியின்போது, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது சட்டமன்றப் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழிருக்கை நிறுவப்பெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, அரசாணை எண் 137, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள்: 9-6-2000-ல் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழிருக்கை நிறுவுவதற்கு 10 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பெற்றது. ஆனால் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் தமிழிருக்கை நிறுவுவதற்கு 50 இலட்சம் ரூபாய், ஒரே தவணையில் வழங்கப்பட வேண்டும் அல்லது ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாய் வீதம், 5 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று 4-7-2000 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டு, தொகையைத் திருப்பி அனுப்பிவிட்டது. அதற்குப் பிறகு, இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் தி.மு.க. அரசால் எடுக்கப்படவில்லை. ஏனென்றால், தமிழ் வளர்ச்சியில் அவர்களுக்கு உண்மையான அக்கறை இல்லை.

24-9-2001 நாளிட்ட கடிதத்தில், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலிருந்து என்னுடைய தலைமையிலான அரசுக்கு வேண்டுகோள் வரப்பெற்றது. உடனடியாக, எனது அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுத்து, இந்தியத் தலைநகரில் உள்ள புகழ்மிக்க ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காக தமிழிருக்கை நிறுவப்படுவதன் இன்றியமையாமையையும், தேவையையும் கருத்திற் கொண்டு, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழிருக்கை நிறுவுவதற்கு 50 இலட்சம் ரூபாய், ஒட்டுமொத்த நல்கைத் தொகையாக, ஒரே தவணையில் வழங்குவதற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் வளர்ச்சி என்பது வார்த்தை அளவில் மட்டுமல்லாமல், ஆக்கபூர்வமாக அமைய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். தி.மு.க. அரசு எடுத்த அரைகுறை நடவடிக்கைகளையும், அதையும் முழுமையாகச் செய்யாமல் விட்டுவிட்டதையும், இந்த நேரத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருவதுடன், ஆக்கபூர்வமான தமிழ் வளர்ச்சிப் பணிகளை ஆற்றுவதில் எவரைக் காட்டிலும் இந்த அரசே முன் நிற்கிறது என்ற உண்மையை இந்த அவைக்கும், அதன் மூலம் தமிழக மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப் பேரவையின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 45 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 45 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - இந்து சமய அறநிலையத் துறை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.



முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.33,60,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4273, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9045, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6891, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2157, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் அருள்மிகு முத்தாம்பாள் சமேத அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்யவேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 520, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலயங்களில் குடமுழுக்குச் செய்யப்படும்போது தமிழ் வழிபாட்டு முறையினை செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,10,11,000/-மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6900, திரு. கே. வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை நகரத்திலிருக்கும் மிகவும் பிரசித்தி பெற்ற அருள்மிகு பேட்டராய ஸ்வாமி திருக்கோயிலுக்குத் திருப்பணி வேலைகள் செய்யவும், குளத்தைச் சீர்செய்யவும் அந்தப் புனித இடத்தை சுற்றுலா மையமாக்கிட வேண்டியது குறித்தும், அன்னதானத் திட்டம் தொடங்க வேண்டியது குறித்தும் விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5318, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "வேலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகொண்டா ஸ்ரீரங்கநாதர் கோயிலைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/-மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6935. திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பூர் இரவீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1000, திரு. எஸ். ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, பூங்கா நகர் தொகுதி, அங்காள பரமேஸ்வரி கோயிலைச் சார்ந்த தட்டான் குளத்தைச் சீர்படுத்தவும் அதனோடு சேர்ந்த காரிய கொட்டகையைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7496, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் தொகுதி, சுவாமி மலையில் அமைந்துள்ள ஸ்ரீசுவாமிநாத சுவாமி ஆலயத்தில், முதியவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் முருகப் பெருமானை தரிசிக்க "கேபிள் கார்" அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1285, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு அடிப்படை வசதிகளைச் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 962, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் அறநிலையத் துறைக்கு உட்பட்ட தேவிகுமாரி மகளிர் கல்லூரிக்குப் போதுமான கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4695, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிர்வாகத்தின் மூலமாக பழனியில் பக்தர்கள் தங்குவதற்காக நட்சத்திர அந்தஸ்தில் ஒரு விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1000*, திரு. எஸ். ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, பூங்கா நகர் தொகுதி, அங்காள பரமேஸ்வரி கோயிலைச் சார்ந்த தட்டான் குளத்தைச் சீர்படுத்தவும் அதனோடு சேர்ந்த காரிய கொட்டகையைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7496*, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் தொகுதி, சுவாமி மலையில் அமைந்துள்ள ஸ்ரீசுவாமிநாத சுவாமி ஆலயத்தில், முதியவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் முருகப் பெருமானை தரிசிக்க "கேபிள் கார்" அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1285*, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு அடிப்படை வசதிகளைச் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *962*, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் அறநிலையத் துறைக்கு உட்பட்ட தேவிகுமாரி மகளிர் கல்லூரிக்குப் போதுமான கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4695*, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் நிர்வாகத்தின் மூலமாக பழனியில் பக்தர்கள் தங்குவதற்காக நட்சத்திர அந்தஸ்தில் ஒரு விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/-மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4564, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறு கோயில்களில் பூசாரிகள் நியமிக்கப்படும் முறை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1092, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயில்களின் உண்டியல்களை உடைத்து திருடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7688, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழமையான கோயில்களில் உள்ள கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புமிக்க சிலைகள் கொள்ளை போகாமல் தடுக்க காவலை பலப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 326, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயில் நிலங்களை சாகுபடியாளர்கள் பெயருக்கு குத்தகை வாரப்பதிவு செய்து பதிவேட்டில் அடங்கல் கணக்கு வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2957, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆணையடி தோட்டத்தில் மூலிகைப்பண்ணை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1208, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி பெண்கள் கல்லூரியில் (அறநிலையத் துறை) மாணவிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருதல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,60,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே கலந்துகொண்டு, காங்கிரஸ் பேரியக்கத்தின சார்பாக என்னுடைய கருத்துகளைத் தெரிவிக்க முன்வருகிறேன்.

தமிழகக் கோயில்கள் தொன்றுதொட்டு பழமையானவை. அவை வழிபடும் தலங்கள் மட்டுமல்லாமல் தமிழகத்தின் கலை

(@) 129 முதல் 166 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



நுணுக்கத்தையும், வரலாற்றுச் சிறப்பினையும் நமக்கு தெள்ளத் தெளிவாக இன்றைக்கும் எடுத்துரைக்கும் அரிய சிறப்புகளைப் பெற்றதேயாகும். தமிழகத்திலே உள்ள முக்கியக் கோயில்களை ஒரு சுற்று சுற்றி வந்தாலே தமிழக வரலாறு, கலைச் சிறப்பை நாம் தெரிந்துகொள்ள முடியும். தமிழகத் திருக்கோயில்கள் எல்லாம் நமது முன்னோர்கள் நமக்கு அளித்துச் சென்றுள்ள அழிக்கமுடியாத செல்வங்களாகும். தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாகும். நமது பண்பாட்டின் அணிகலன்களாக, நாகரிகத்தின் சின்னமாக விளங்கி வருகின்றன. தொன்மைக்காலத்திலே வாழ்ந்து வந்த அனைவரது முயற்சியால் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் இன்றும் சீரோடும், சிறப்போடும் வளர்ந்து வந்துள்ளன. காலம் காலமாக பாதுகாக்கப்பட வேண்டிய நமது திருக்கோயில்களைப் பராமரிக்கும் முயற்சியில் இதுவரை நாம் பெரும் வெற்றி பெறவில்லை. கலைச் செல்வங்கள் சிலரால் களவாடப்பட்டு, திருக்கோயில்கள் பாழடைந்த நிலையிலே சில உள்ளன. அரசுக் கணக்கின்படி திருக்கோயில்களுக்குச் சொந்தமாக இன்றைக்கு 4,78,00,957 ஏக்கர் நன்செய், புன்செய், மானாவாரி நிலங்கள் உள்ளன. அதுமட்டுமல்லாமல் அதிலே 20,046 கட்டடங்கள் இருக்கின்றன. 33,627 மனைப் பகுதிகள் உள்ளன. அவற்றிலே 38,001 குத்தகைதாரர்கள் உள்ளார்கள்.

*முற்பகல் 11-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1925 ஆம் ஆண்டு மைலாப்பூரைச் சேர்ந்த கேசவ முதலியார் என்பவர் மைலாப்பூரிலே இருக்கின்ற ஆதிகேசவ பெருமாள் கோயில் சொத்து தொடர்பாக ஒரு வழக்கினைத் தொடுத்தார்கள், சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப்பட்டது. வழக்கு எண் 593/1922. அந்த வழக்கின் தீர்ப்பு 1925-லே உயர்நீதிமன்ற நீதிபதி சீனிவாச ஐயங்கார் அவர்களாலே அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிலே 3 மாதங்களுக்குள் ஒவ்வொரு கோயில்களுடைய சொத்துக்களை பொதுமக்கள் பார்வைக்கு கோயில் முன்பாக பட்டியலிட வேண்டுமென்று அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் கோயில் சொத்து குல நாசம் என்கிற காரணத்தாலே அந்தத் தீர்ப்பை பல ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால் அந்தத் தீர்ப்பை இப்போது நடைமுறைப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டதோ என்ற அச்சம் வந்துள்ளது.

பெரு நகரங்களிலே கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் பெரு மதிப்பு உடையவை. ஆனால் இவற்றை பல ஆண்டுகளாக பல பேர்

ஆக்கிரமித்துக் கொண்டு கடைகள் கட்டி வாடகைக்கு விட்டு பெரும் பணத்தை சம்பாதித்து வருகிறார்கள். ஆனால் கோயிலுக்கு தரை வாடகை என்ற பெயரிலே மிகச் சிறிய தொகையைத் தருகிறார்கள். சிலர் தராமலும் இருக்கிறார்கள். இதைப்போலவே கோயிலுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் இருந்தும், வருவாய் வராமல் பல கோயில்கள் உள்ளன. இப்படி ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களையும், குத்தகை தராமல் இருப்பவர்களையும் வெளியேற்ற தேவையான சட்டங்கள் அறநிலையத் துறையிடம் இல்லை. எனவே அறநிலையத் துறை சட்டங்களில் மிகக் கடுமையான திருத்தங்கள் கொண்டு வந்து இப்படிப்பட்டவர்களை வெளியேற்ற வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, பூவிருந்தவல்லியிலே இருக்கின்ற திருக்கச்சி நம்பி பெருமாள் கோயில். இந்தத் திருக்கச்சி நம்பிபெருமாள் கோயிலுக்குச் சொந்தமான பல நூறு ஏக்கர் நிலம் By-pass சாலையிலே இருக்கிறது. அந்த By-pass சாலையிலே இருக்கின்ற நிலங்களை வேறு பெயருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25 இலட்சம் ரூபாய், 30 இலட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டு உரிமம் மாற்றம் செய்கின்றார்கள். அப்படி உரிமம் மாற்றம் செய்யப்படுகின்ற காரணத்தாலே கோயிலுக்கு வரவேண்டிய வருவாய் வருவதில்லை. ஆனால் யாரோ, அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் ஒரு ஏக்கருக்கு 25 இலட்சம் ரூபாய், 30 இலட்சம் ரூபாய் என்று பெற்றுக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். இதனால் கோயில் சீரமைப்புப் பணிகூட நடைபெற முடியாமல் மிக மோசமாக இருக்கிறது.

அதைப்போன்று திருமழிசை ஆழ்வார் கோயில். ஆழ்வார் அவதரித்த ஊர் திருமழிசை. அந்தக் கோயிலுக்குக்கூட சுமார் 300, 350 ஏக்கர் நிலம் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, பெங்களூர் நெடுஞ்சாலையை ஒட்டி இருக்கிறது. அதிலேகூட மிகப் பெரிய முறைகேடுகள் உள்ளன.

திருநின்றவூரிலே இருக்கின்ற பக்தவச்சல பெருமாள் கோயில். அதற்கு 500 ஏக்கர் நிலத்திற்கு மேல் இருக்கிறது. சென்னையை ஒட்டி இருக்கின்ற பகுதி. அங்கேகூட இதுவரை அந்தக் கோயிலுக்கு, இந்த நிலத்தினாலே ஏதாவது வருமானம் வருகிறதா என்று பார்த்தால், வரவில்லை. அதையும் அரசு கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில தினங்களுக்கு முன்னாலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. காங்கேயம் பகுதியில் சுமார் 7000 ஏக்கர் நிலம், அரசுக்குச் சொந்தமான நிலம், சுமார் 12 கோயில்களுக்குச் சொந்தமான நிலம்—அந்த 12



கோயில்களுக்குச் சொந்தமான 7000 ஏக்கர் நிலம்—காலங்காலமாக வேறு யார் கையிலோ இருக்கிறது. அப்படி இருக்கின்ற காரணத்தாலே அந்தக் கோயில் நிலங்களை எல்லாம்—அந்தக் கோயில்களுக்கு வருமானம் இல்லாமல் 12 கோயில்களும் இன்றைக்கு சீரழிந்து கொண்டிருக்கின்றன—7,000 ஏக்கர் நிலத்தை தனியார்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அரசுக்குச் செலுத்த வேண்டிய, கோயிலுக்குச் செலுத்த வேண்டிய பாக்கியைக்கூட அவர்கள் செலுத்துவதில்லை என்பதைச் சொல்லி, அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கவனிப்பாரற்று சிதிலம் அடைந்த கோயில்கள்...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் பகுதி என்பது ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தது. அங்கு 7,000 ஏக்கர் நிலம் யாரிடமும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. உடனடியாகக் கண்டறியப்பட்டு யார், யாரிடத்தில் இருக்கிறது என்பதை இந்த அரசு உடனடியாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினமலர் பத்திரிகையிலே 6-4-2003 அன்று பெரிய அளவில் காங்கேயம் கோயில் நிலம் 7 ஆயிரம் ஏக்கர் கோவிந்தா என்ற தலைப்பிலே வந்திருக்கிறது. அதை நீங்கள் தயவுசெய்து படித்துப்பார்த்து, வி.ஏ.ஓ.க்களுடன்...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் வருகின்ற செய்திகளை எல்லாம் உண்மை என்று எடுத்துக்கொள்ள முடியாது. எங்கெங்கே இருக்கிறது என்று எடுத்துச் சொல்வார்களேயானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** இப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது என்றுதான் சொன்னேனே தவிர, இதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்றுதான் கேட்டேனே தவிர, உங்கள்மீது குற்றமாகச் சொல்லவில்லை. கவனிப்பாரற்றுக் கிடக்கின்ற, சிதிலம் அடைந்த கோயில்கள் தமிழ்நாட்டில் பல இருக்கின்றன. இக்கோயில்களுக்கான நிலங்கள் இருந்தும் பயிரிட முடியாமலும், வேறு இனங்களில் வருமானம் இல்லாததாலும் அவற்றைப் பொறுப்பேற்றுக் கொள்ள யாரும் முன்வருவதில்லை. ஆன்மீகத்திலே நாட்டம் கொண்டவர்களையும்,

ஆன்மீகவாதிகளையும், பொதுச்சேவை செய்வதில் பற்றுள்ளவர்களையும் கண்டுபிடித்து இப்படிப்பட்ட கோயில்களை அவர்களிடம் ஒப்படைத்தால், இவ்வகையான கோயில்கள் புத்தொளி பெறும். எனவே தாங்கள் இதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

கோயில்களிலேகூட பணக்காரக் கோயில்கள் இருக்கின்றன; ஏழைக் கோயில்களும் இருக்கின்றன. பணக்காரக் கோயில்களிலே பல்வேறு வசதிகள் இருக்கின்றன; ஆனால் ஏழைக் கோயில்களினிடத்திலே, மிகக் கடுமையான, விளக்குக்கூட ஏற்ற முடியாத ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நமது அறநிலையத் துறையில் இந்தக் கோயில்களுக்கு விளக்குகளைப் போடுகிறார்கள். ஆனால், அதற்கு மின்சார வாரியத்தினர் Commercial Tariff போடுகிறார்கள். Commercial Tariff போடுகின்றபோது அதிகமான அளவு மின்சாரக் கட்டணம் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. சில கோயில்களாலே கட்ட முடியாத ஒரு துர்பாக்கிய நிலை இருக்கிறது. எனவே Commercial Tariff மாற்றி -- அதை வீட்டு உபயோகத்திற்கு உபயோகப்படுத்துகின்ற வகையிலே, --domestic tariff-ஆக மாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நல்ல நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. சுதர்சனம், ஏழைக் கோயில்களை உங்களை மாதிரி பணக்காரர்கள் கவனித்தால் பிரச்சினையே தீர்ந்து போகும்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் மட்டுமே நினைத்து தமிழகத்திலே இருக்கிற கோயில்களை எல்லாம் சரி செய்துவிட முடியாது. ஆகையினாலே எல்லோரையுமே நாம் அணுகினால் அதற்கு வேண்டிய நன்மைகள் கிடைக்கும்.

தமிழகத்திலே அதிக அளவில் வருமானம் ஈட்டக்கூடிய கோயில்களுள் முதன்மையானது, பழனியிலுள்ள பழனி பாலதண்டாயுதபாணி ஆலயம். அறுபடை வீடுகளில் முக்கியமானது என்றாலும், அக்கோயிலிலேயுள்ள மூலவர் சிலை சித்தர் போகர் என்பவரால் உருவாக்கப்பட்டது. அது நவ பாஷாணச் சிலை என்பது நம் அனைவருக்கும் தெரியும். இன்றைக்கு அந்த நவ பாஷாணச் சிலையைப் பற்றி பல்வேறு விமர்சனங்கள் வந்துகொண்டிருக்கின்றன.



பூஜை செய்வதிலேகூட பல்வேறு விமர்சனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஒரு நண்பர் நீதிமன்றத்திலேகூட வழக்குப் போட்டிருக்கிறார். நவ பாஷாணச் சிலையை நான் செய்து கொடுக்கிறேன்; இதுவரையிலும் 10, 12 சிலைகளை நான் செய்து கொடுத்திருக்கிறேன், சென்னையிலே; நீங்கள் எனக்கு அனுமதி அளித்தால் நான் செய்கிறேன் என்று நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து இருக்கின்றார்கள். அந்த நண்பரை அழைத்துப் பேசி இதற்கான வழிவகைகளைக் காணப் போகிறீர்களா? ஏற்கெனவே இருக்கின்ற சிலைக்கு--இப்போது பூஜை எல்லாம், அபிஷேகங்கள் எல்லாம் நடைபெறுவதில்லை. கவசம் போட்டுத்தான் இப்போது பூஜைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே பக்தர்களுக்குச் சில மன அதிருப்திகூட இருக்கின்றது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து திருவண்ணாமலையிலே இருக்கின்ற அருணாசலேசுவரர் கோயில், தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினராலே எடுக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, இப்போது தமிழக அரசு அந்தக் கோயிலை தொல்பொருள் துறை எடுக்கக்கூடாது என்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. திருவண்ணாமலை கோயிலில் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் சுமார் 5 இலட்சம், 6 இலட்சம் பேர் கூடுகிறார்கள். அப்படிக் கூடுகின்ற அந்தக் கோயிலில், வசதிகள் இல்லை. போதுமான கழிப்பிட வசதிகூட சரியான முறையிலே இல்லை. குடிநீர் வசதி இல்லை. பொதுமக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் தொல்பொருள் துறை எடுத்துக்கொள்ளுமோ என்ற அச்சம் இருக்கிறது. மறு பக்கம் தமிழக அரசு அதன்மீது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது எடுக்கக் கூடாது என்று; அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்திலே அங்கே வருகின்ற பக்தர்களுக்கு வேண்டிய பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

பல கோடி ரூபாய் மதிப்புள்ள அண்ணாமலையார் நிலப் பட்டாக்கள், மடங்கள், மண்டபங்களை எல்லாம் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாநிலம் முழுவதும் ஏறக்குறைய 160 திருக்கோயில்களிலே அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு மனிதனுக்கு பொன்னோ, பொருளோ எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி வராது. ஆனால் உணவு சாப்பிடும்போது மட்டும் வயிறு நிரம்பும்போது, 'போதும் போதும்' என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை இன்னும் பல்வேறு கோயில்களுக்கு விரிவுபடுத்த வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே சிறுசிறு பிரச்சினைகள் ஆங்காங்கே இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்க வேண்டும். அதுமட்டுமல்ல. இந்தத் திட்டத்தைக் கண்காணிப்பதற்கு அந்தந்த மாவட்டத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட 2 பேர்களையோ, 3 பேர்களையோ கொண்ட ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளையும் இந்த நேரத்திலே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அறங்காவலர் குழுக்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை. அறங்காவலர்களை நியமிப்பதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஏற்கெனவே இருந்த பல்வேறு அறங்காவலர்கள் கோயில் சொத்துக்களையெல்லாம் கொள்ளையடித்தார்கள். அதுமட்டுமல்ல. கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கொடியவர்களின் கூடாரம் எல்லாம் கோயில்களிலே வந்ததால், இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற கோயில்கள் எந்த அளவிற்குச் சீரழிந்து இருக்கின்றன என்பதைப் பற்றி மிக விவரமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நம்முடைய சபாநாயகர் அவர்கள் உடனே மணி அடித்துவிடுவார்கள். அதனால் இதுபற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் இருக்கின்றார். எப்போது பார்த்தாலும் பொட்டு வைத்துக் கொண்டு இருப்பார். அவரைப் பார்க்கின்றபோதே ஒரு மனத்திருப்தி ஏற்படுகின்றது. கோயிலுக்கு நல்லது செய்வார் என்ற எண்ணம் எங்களுக்கெல்லாம் வருகின்றது. அதேபோன்று அறங்காவலர்களாக நியமிக்கப்படுகின்றவர்கள் உண்மையிலேயே கோயில்களிலே நம்பிக்கை உடையவர்களாக, ஆண்டவனிடத்திலே நம்பிக்கை உடையவர்களாக இருப்பவர்களையெல்லாம் நீங்கள் பார்த்து நிச்சயமாக -- அதிலே அரசியல் புகுத்தாமல் -- அறங்காவலர்களை



நியமிக்க வேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை வைக்கிறேன். அறங்காவலர்களை நியமிக்கின்றபோது எப்படி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு நிச்சயமாக இடம் அளிக்க வேண்டும் என்று சொல்கின்றீர்களோ அதேபோன்று -- தாய்க் குலத்தைச் சேர்ந்த முதலமைச்சர் நீங்கள் இருக்கின்ற காரணத்தினாலே, ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் ஒவ்வொரு பெண்ணை அறங்காவலராக நியமிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-55*

அதேபோன்று திருவள்ளூரிலே இருக்கின்ற வீரராகவப் பெருமாள் கோயில், சுமார் 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்னாலே உருவாக்கப்பட்டது. சாலிகோத்திர மகரிஷி என்பவர்கள் ஒரு கடுமையான தவம் இருந்தார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுதர்சனம், இரண்டு மணித் துளிகளுக்குள் பேச்சை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஸ்தல புராணம் எல்லாம் வேண்டாம்.

**திரு. டி. சுதர்சனம்:** சாலிகோத்திர மகரிஷி கடுந்தவம் இருந்தபோது, ஆண்டவன் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டபோது, எனக்கு எந்த வரமும் வேண்டாம்; அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் நோய்வாய்ப்பட்டு இருக்கின்றார்கள், அந்த நோயைப் போக்குகின்ற வகையிலே ஒரு குளம் அமைக்கின்றேன்— 9 மூலைகள் கொண்ட குளம். நவக்கிரக மூலை என்று சொல்வார்கள்— அந்தக் குளத்திலே வந்து குளித்து என்னை வணங்குகின்றவர்களுக்கு நோய்ப் பிணி நீங்க வேண்டும் என்று ஒரு வரத்தைக் கொடுங்கள் என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட வரத்தைப் பெற்ற சாலிகோத்திர மகரிஷி அமைத்த அந்தக் குளத்திலே இப்போது தண்ணீரே இல்லை. 9 மூலைகள் இருக்கின்றன. அதைச் சுற்றி வந்து சாமி கும்பிட்டால் நிச்சயமாகப் பிணி நீங்கும் என்ற ஐதீகம் உள்ளது. இன்றைக்குக்கூட அமாவாசை அன்றைக்குப் பார்த்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் திருவள்ளூருக்கு வருவார்கள். ஆனால் இப்போது தண்ணீரே இல்லை. அதற்குத் தண்ணீர் வருகின்ற கால்வாய்கள் எல்லாம் இப்போது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுவிட்டன. அந்த ஆக்கிரமிப்பை எல்லாம்

அகற்றி தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. திருவேற்காட்டிலே இருக்கின்ற கருமாரி அம்மன் கோயில்; அந்தக் கருமாரி அம்மன் கோயிலுக்கு அதிகமான அளவு பணம் வருகிறது. கோயிலுக்குச் சொந்தமான இடம் பக்கத்திலே 15 ஏக்கர் நிலம் இருக்கிறது. அவ்வப்போது சிலராலே ஆக்கிரமிப்பு செய்யப்படுகிறது. அந்த 15 ஏக்கர் நிலத்திலே ஒரு மகளிர் கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று காஞ்சிபுரம். கடவுள் நிறைந்த காஞ்சிபுரம். 108 சிவன் கோயில்களும், 18 விஷ்ணு கோயில்களும் காஞ்சிபுரத்தில் உள்ளன. காஞ்சி சங்கராச்சாரியார் இருக்கின்ற காஞ்சிபுரத்திலே பல்வேறு வசதிகள் இன்றி பக்தர்கள் இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். வட இந்தியாவில் இருந்து பல்வேறுபட்ட பக்தர்கள் தினம் தினம் வருகிறார்கள். காமாட்சி அம்மன் கோயில் இருக்கிறது; ஏகாம்பரேஸ்வரர் கோயில் இருக்கிறது; வரதராஜப் பெருமாள் கோயில் இருக்கிறது; உலகளந்த பெருமாள் கோயில் இருக்கிறது. இப்படி பல்வேறுபட்ட கோயில்களைக் கொண்டிருக்கின்ற காஞ்சி நகரத்திலே உள்ள அத்தனை கோயில்களையும் இணைத்து, பக்தர்கள் வருகின்றபோது எல்லாக் கோயில்களையும் காட்டுவதற்கு வசதியாக நம்முடைய சுற்றுலாத் துறையின் மூலமாக ஏதாவது ஏற்பாடு செய்ய முடியமா என்பதை நீங்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுதர்சனம் ஒரு மணித் துளிக்குள் பேச்சை முடித்துவிடுங்கள். இன்னும் 5 பேர் பேச வேண்டும்.

**திரு. டி. சுதர்சனம்:** இரண்டே நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். திருத்தணியில் இருக்கின்ற முருகன் கோயில். மலையிலே தினம் தினம் 10 ஆயிரம் பேர் வந்து தரிசனம் செய்கின்றார்கள். தரிசனம் செய்கின்ற 10 ஆயிரம் பேர்களிலே மேலே ஏறிச் செல்வதற்கு சிலர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வசதி மிக்க அந்தத் திருத்தணி கோயிலுக்கு ஒரு இழுவை இரயில் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூரிலே உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவள்ளூர் மாவட்டத்திலே சிறப்பு மிக்க ஆலயங்கள் பல உண்டு. அவற்றிலே மீஞ்சூர் அருகில் உள்ள மேலூரில் திருவுடையம்மன்; திருவொற்றியூரிலே உள்ள வடிவுடையம்மன்; திருமுல்லைவாயலில் அமைந்துள்ள கொடியுடையம்மன் ஆகிய மூன்றையும் பௌர்ணமி அன்று தரிசித்தால் நல்ல பலன் கிடைக்கும் என்று நீண்ட நாட்களாகச் சொல்கின்றார்கள். இந்த மூன்று ஸ்தலங்களையும் சேர்த்து தரிசிக்கும் வகையில் பௌர்ணமி அன்று சிறப்புப் பேருந்துகள் விட வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அதேபோன்று எனது தொகுதியில் உள்ள இராமஞ்சேரி கிராமம். பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட இரட்டைக் கோயில் என வழங்கப்படும் சோமேஸ்வரர் கோயில் மற்றும் பெருமாள் கோயில் உள்ளது. இந்த இரு கோயில்களுக்கும் 50 ஏக்கர் நிலம் உண்டு. கிருஷ்ணா கால்வாய்த் திட்டம் வந்தபோது நிலத்தை அரசு எடுத்துக்கொண்டது. கோயில் அதிகாரிகள் கோயில் பெயரை தவறுதலாக எழுதி விட்ட காரணத்தினாலே அந்தக் கோயிலுக்கு வரவேண்டிய பணம் இதுவரை வந்து சேரவில்லை. ஆந்திர மாநிலத்திலே உள்ள ஒரு வங்கியிலே டெபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. அதை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயது நிறைவடைந்த ஓய்வு பெற்ற அர்ச்சகர் மற்றும் ஓதுவார்களுக்கு ஓய்வூதியம் ரூ.500 வழங்கப்படுகிறது. அருள்கூர்ந்து இதனை 1,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்கிற வேண்டுகோளை வைக்கிறேன். 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற கிராமபூசாரிகளுக்கு ஓய்வூதியம் ரூ.500 வழங்கப்படுகிறது. அதனை ரூ. 1000 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்கிற வேண்டுகோளையும் வைக்கிறேன். திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகள் திருமணத்திற்கு முறையே ரூ. 6,000 மற்றும் ரூ. 10,000 என முன் பணம் வழங்கப்படுகிறது. அது முறையே ரூ. 10,000 மற்றும் ரூ. 15,000 என உயர்த்தித் தர வேண்டுமென்கிற வேண்டுகோளை வைக்கிறேன்.

கோயில் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு மருத்துவப் படியாக ரூ. 50 வழங்கப்படுகிறது. அதை ரூ.100 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயில் சீருடைப் பணியாளர்களுக்கு

சலவைப் படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.10/- வழங்கப்படுகிறது. அதை 50 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும். திருக்கோயிலில் உள்ள பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு 60 நாட்களே கொடுக்கிறார்கள். அதை 90 நாட்களாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்கிற வேண்டுகோளையும் வைக்கிறேன். இந்த மானியத்தின்மீது உரையாற்ற வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்து, கடைசியாக—ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். கடைசியாக—திருப்பதியிலே இருக்கிற திரு. வெங்கடாஜல பெருமாள் கோயிலுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 7 அடி உயரத்திலே ஒரு தேரைச் செய்து உகாதி அன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அப்படி ஒன்று செய்ததாக அறநிலையத் துறைக்கு ஒன்றும் தகவல் கிடைக்கவில்லை.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வந்தது. நான் திருப்பதிக்குப் போயிருந்தேன். அந்தத் தேரைக்கூட அங்கே பக்கத்தில் நிறுத்தி வைத்திருந்தார்கள். அதனாலே..........

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வரக்கூடிய செய்திகள் எல்லாம் உண்மையல்ல. அப்படி திருப்பதி மலைக்கு எந்தவிதமான தேரும் செய்யவில்லை என்பதை அறநிலையத் துறையின் சார்பாக தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன்.

***திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தின் உயிர் மூச்சாக விளங்கும் அன்னையே, வணக்கம்.

அன்றும் இன்றும் என்றும் மக்களை வாழ வைக்க வந்து, கண்ணியம் பிறழாமல், கடமை தவறாமல் எண்ணியதை எய்தி, ஏழைகளின் நலம் சேர்க்கும் புண்ணியத் தாய், புனித அன்னை, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு என் உரையைத் தொடங்குகிறேன்.



கொண்டு வந்துள்ள திட்டங்கள் அத்தனையும் நற்சுவைக் கனிகள்; மக்களின் பசி தீர்க்க வந்த பழரசங்கள்; நிழல் கொடுக்க வந்த நல் மரங்கள்; வருடிவிட வந்த வண்ணக் காற்றிசைகள்.

தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு மக்கள் ஒன்று திரண்டு உறுதுணையாக நிற்கிறார்கள் என்பதற்கு அண்மையில் நடந்த சாத்தான்குளம் இடைத் தேர்தலில் பெற்ற மகத்தான வெற்றியே ஒரு அடையாள முத்திரை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கோடையைத் தணிக்க கொடைக்கானல் போகிறேன் என்று ஒப்புக்கொள்ளாமல் தொல்காப்பியத்தை துணைக்கழைத்தவர்கள் சொன்னதுபோல், அணுகுண்டு மழை அல்ல தமிழக பட்ஜெட். அத்தனையும் சலுகை மழை. கடந்த 30 ஆண்டுகளாக கஜானா கண்டிராத வறட்சியிலும் கருணையோடு சில திட்டங்கள். கண்டிப்போடு பல திட்டங்கள், வாழ வழிவகை செய்யும் வளமான திட்டங்கள்.

உபரி பொருளாதாரத்தில்கூட உருவாக்க முடியாத நிதிநிலை அறிக்கையை, பற்றாக்குறை பட்ஜெட்டில் வார்த்துத் தந்த சிக்கனத் தலைவியே, எட்டயபுரத்துக் கவிஞன் இருந்திருந்தால் பெண்ணடிமை ஒழிந்ததென்று பேரிகை கொட்டி முழங்கியிருப்பான்.

தமிழகத்தின் பசுமை வளர்ச்சிக்குப் புள்ளி வைத்துவிட்டு, மகுடி ஊதிவிட்டுப் போன தி.மு.க. வினருக்கு மத்தியிலே பொருளாதாரத்தின் வேர்களை அறிந்து இன்று தமிழகத்தை தலைநிமிர்த்தி வீறுகொண்ட நடைபோட வைத்த பெருமை நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

வாக்களிப்பதோ மக்கள் கடமை. ஆனால் அவர்களுக்கு ஜனநாயக துரோகம் செய்வதோ எங்கள் கடமை என்று தி.மு.க.வினர் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் மின்னல் வேக பதில்களுக்கும், பேச்சாற்றலுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் தொடக்கப் பள்ளியிலே செய்த தவறுகளை, இன்று சட்டமன்றத்திலே அன்றாடக் கடமையாக, வெளிநடப்பு பாணியை தி.மு.க. எம்.எல்.ஏ.-க்கள் செய்து வருகிறார்கள். இவர்களுக்கு உறுதுணையாக எதிர்க்கட்சிகளும் தங்கள் பங்கிற்கு துரோகச் செயலுக்கு துணை போகின்றனர்.

மக்கள் பணியைவிட இலக்கியப் பணிதான் எனது உயிர் என செப்பிய தலைவரெல்லாம் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராய் சாலை மறியல் செய்த சட்ட அவமதிப்பு உறுப்பினர்களை சட்டமன்றமே வர மறுக்கும் வயோதிக வாலிபர் திரு. கருணாநிதி குசலம் விசாரிக்க வந்ததேன்? புகைப்படங்களுக்கு போஸ் கொடுக்கும் முனைப்போடு முகம் காட்டியதேன்? உங்கள் திட்டமிட்ட வேஷ நாடகங்களெல்லாம் மக்கள் மத்தியில் இனி எடுபடாது. மக்கள் அனைவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பக்கம்தான் உள்ளார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

*பிற்பகல் 12-05*

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

கோனுயரக் குடி உயருமென்னும் பழமொழிக்கு ஏற்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கோனும் உயர்ந்திருக்கிறது, கோயில்களும் உயர்ந்திருக்கின்றன. இந்து சமய அறநிலையத் துறை ஆன்மீகப் பணிகள் மட்டுமல்லாது சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறது. 3636 திருக்கோயில்கள் இத்துறையின் ஆளுகையின்கீழ் இருந்தாலும் இவற்றில் பெரும்பாலான திருக்கோயில்கள் நிதி வசதியில்லாதவை, சுமார் ஆயிரம் திருக்கோயில்கள் மட்டுமே தன்னிறைவு பெறுகிற வகையில் வருவாயை ஈட்டிக்கொண்டிருக்கின்றன. இத்திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து பல வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் பேசும்போது, 4 கோடியே 957 ஏக்கர் என்று கூறினார்கள் அது தவறு. தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களுடைய இடம் 4 இலட்சத்து 78 ஆயிரத்து 967 ஏக்கர் 54 சென்ட் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இவ்வளவு ஏக்கர் நிலங்கள் திருக்கோயில்களுக்குச் சொந்தமாக இருப்பினும், அவற்றிலிருந்து திருக்கோயில்களுக்கு பெரிய அளவில் வருவாயைப் பெறமுடியாத நிலை உள்ளது. திருக்கோயில்களின் நிலங்கள் தொடர்ந்து ஆக்கிரமிப்பில் உள்ளன. அவற்றை மீட்க நீதிமன்றங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், பல நலிவடைந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையிலும், சமூக நலத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற



நோக்கத்தோடு தமிழகத்திலுள்ள 162 திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்து, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தி உள்ளார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாபாரதத்திலே, துரியோதனன் சொத்தை கர்ணன் அள்ளி அள்ளிக் கொடுத்தான். பொன்னையும் பொருளையெல்லாம் போதுமா, போதுமா என்று அள்ளி அள்ளிக் கொடுத்தான். போதும், போதும் என்று வாங்கிச் சென்றவர்கள், ஆஹா, போதுமா என்று கேட்டாரே, இன்னும் கொஞ்சம் கேட்டோமா என்று நினைத்தனர். அதேபோல புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டம்,

> "ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மை பேசி
> உப்பில்லா கூழிட்டாலும் உண்பதற்கு அமிர்தமாம்
> முப்பழமோடு பாலன்ன முகம் கடுத்திடுவாராயின்
> கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும்தானே"

என்று சொன்னதைப்போல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வீட்டிற்கு 2 பேர் விருந்தாளி வந்திருக்கிறார்கள் என்றால், அன்பான வார்த்தைகளைப் பேசி, வீட்டில் எல்லாம் நன்றாக இருக்கிறார்களா என்று கேட்டு அங்கிருக்கிற 4 பேர்களோடு இவர்கள் 2 பேரும் சேர்ந்து கூழினைக் கொடுத்தாலும் அது அமிர்தம் ஆகி விடுமாம். ஆனால், மா, பலா, வாழை போன்ற உயர்ந்த கனிகளையும், உயர்ந்த அன்னங்களையும் வைத்து முகம் கடுத்து அந்த அன்னத்தைப் பரிமாறினால் கப்பிய பசியோடு கடும் பசியாகும்தானே என்றதைப்போல புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புன்முகத்தோடு இன்றைக்கு 162 திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்களே, அங்கே வரக்கூடிய பக்தர்கள் மதிய உணவை நன்றாக அருந்திவிட்டு, மகராசி வாழ்க என்று வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமட்டுமல்லாமல், 14-07-2002 ஆம் தேதி அருள்மிகு திருவேற்காடு கருமாரியம்மன் திருக்கோயிலில் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமை தாங்கி, 1008 ஏழைகளுக்கு இலவசத் திருமணத்தை நடத்தி வைத்தார். மேலும் மாவட்டங்கள்தோறும், 108 ஜோடிகள் என இதுவரையில் 1500-க்கும் மேற்பட்ட ஏழைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஊதியங்கள் அனைத்தும் முதலில் அரசு நிதியிலிருந்து அளிக்கப்பட்டாலும், பின்பு திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து அரசிற்கே திரும்ப அளிக்கப்படுகிறது. ஆலயப் பணிகள் அளவு கடந்து பெருமைபெறும் இந்த நேரத்தில் ஆன்மீக சிந்தனை அடித்தளமாக அமைய வேண்டுமென்ற இனிய நோக்கோடு, ஆன்மீகப் பயிற்சி வகுப்புகள் நடத்த ஆணையிட்டுள்ளது கண்டு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உளமார நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பசுமாத்தாணிபோல் புதிய இளைஞர்களுக்கு ஆன்மீகச் சிந்தனை அளிக்கும் அரிய பார்வை பல விவேகானந்தர்களை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறையில் கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்காக வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. பல கோயில்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக குறிப்பாக, பெண்களுக்கான நவீன கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், 2002-2003 ஆம் ஆண்டில் 967 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. இன்னும் 400-க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 1,060 திருக்கோயில்களில் குடிநீர் வசதியும், 187 திருக்கோயில்களில் கழிப்பிட வசதியும் அம்மா அவர்களுடைய ஆட்சி செயல்படுத்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-10*

2002-2003 ஆம் ஆண்டு, 'ஒருகால பூஜை' திட்டத்தின்கீழ் 460 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. தமிழில் வழிபாடு செய்ய அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சேக்கிழார், திருஞானசம்பந்தர், ஔவை ஆகியோருக்கு விழாக்கள் எடுக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலைபோல், பழனியிலும் கிரிவலப் பாதை அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. புத்தொளிப் பயிற்சித் திட்டம் அளிக்கப்படுகிறது. இத்தனையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நடக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



2002-2003 ஆம் ஆண்டில் 529 திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப்பட்டுள்ளது. தமிழ்ப் புலவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்படி, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று நாவுக்கரசர் உழவாரப் படை தாங்கி ஆலயங்களை சீரமைக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதுபோல, ஆலயங்களை செப்பனிட, சீரமைக்க, சிறப்பாக்க, செழுமையாக்க நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்துக்கொண்ட பணியினை நினைத்துப் பார்க்கும்போது அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி ஆலயங்களை ஆன்மீக பூமிகளாக ஆக்கும் காட்சி என்று சொன்னால், இங்கிருக்கும் இதயங்களில் புன்னகை பூத்துக் குலுங்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி எந்தத் துறையானாலும், எண்ணற்ற சாதனைகளை தமிழக மக்களுக்கு அர்ப்பணித்துவரும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய சாதனைகளை ஜீரணிக்க முடியாத எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையிலேகூட வெளிநடப்புச் செய்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல், மூத்த உறுப்பினர்கள் எல்லாம் இந்த அவையிலிருந்து, எதற்குமே, காரணம் இல்லாததற்கு எல்லாம் வெளிநடப்புச் செய்கிறார்கள். அங்கேயிருந்து வரும்போதே, 'சரி, இன்றைக்கு எப்படிச் சண்டையிட வேண்டும்; எப்படி சண்டையிட்டு நாம் வெளியே செல்லவேண்டும்; பத்திரிகைகளுக்கு எப்படி எப்படி பேட்டி கொடுக்கவேண்டும்' என்றெல்லாம் இங்கே மூத்த உறுப்பினர்கள் எல்லாம் வந்து, வெளிநடப்புச் செய்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கருதியநூல் கல்லாதவன் மூடன் ஆகும்;
கணக்கறிந்து பேசாதவன் கசடன் ஆகும்;
ஒரு தொழிலும் இல்லாதவன் முகடி ஆகும்;
ஒன்றுக்கும் உதவாதவன் சோம்பன் ஆகும்;
பெரியோர்கள் முன்னின்று மரத்தைப் போல்
பேசாமல் இருப்பவனே பேயன் ஆகும்;
பரிவு சொல் கழுவியவன் பசப்பன் ஆகும்;
பசிப்பவர்களுக்கு இட்டு உண்ணாதவன் பாவியாகும்'

என்ற சொல்லுக்கிணங்க, இந்த கொள்கை விளக்கப் புத்தகத்தைக் கூட கிழித்தெறிந்துவிட்டு, வெளியே சென்று 'தவறி கீழே விழுந்துவிட்டது' என்று அங்கே போய் பேட்டி கொடுக்கிறார்கள். ஆனால் நாட்டு மக்கள் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி ஒரு முதலமைச்சரை எங்கேயாவது பார்த்ததுண்டா? நானும் 1967-லேயிருந்து, இங்கே எதிரே இருக்கிற மாடத்திலே உட்கார்ந்து பார்த்திருக்கிறேன். பொறுப்பாக வந்து, இந்தச் சட்டமன்றத்திலே அமர்ந்து, கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம், மின்னல் வேகத்திலே பதில் கூறி அவர்களுக்கு என்னென்ன பதில்களைச் சொல்லவேண்டும் என்ற பொறுப்போடு, தினசரி இந்த மாமன்றத்திலே உட்கார்ந்து, தன்னுடைய கடமையை ஆற்றி, நாட்டு மக்களுக்கு நன்மை செய்து வருகிறார்களே; அதை எதிர்த்து இன்றைக்கு எப்படியெல்லாம் குரல் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

"நாய் வாலை அளவெடுத்து பெருக்கித்தீட்டி,
நற்றமிழை எழுத எழுத்தாணி ஆகுமோ;
அந்தப் பேய் வாழும் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளி
பெரிய விளக்கேற்றி வைத்தாலும் வீடாகுமோ;
தாய் வார்த்தை கேளாத சகட சண்டியோன்
சற்றிடினும் முழுத்த குணம் தவறமாட்டான்;
இந்தத் தாய் வார்த்தை கேளாத சகட சண்டியோன்
சற்றிடினும் முழுத்த குணம் தவறமாட்டான்;
இவனும் ஈயான்; மற்றவரையும் ஈயவிடான், மறுபிறப்பில்
மலத்தில் ஒட்டும் ஈயினும் கேடாய்ப் பிறப்பான்"

என்றான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஓர் அழகான திட்டத்தை --இந்த மாமன்றத்தில் உட்காரக்கூடிய சட்டமன்ற இருக்கைக்கு--இந்தச் சட்டமன்றத்தை மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அழகான இடத்தைத் தேர்வு செய்திருக்கிறார்கள்.





இராணி மேரி கல்லூரியை புதியதாகக் கட்டித் தருகிறேன் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தை, நல்ல திட்டத்தையெல்லாம் எதிர்த்துச் செயல்படுவதுதான் இங்கே உள்ள உறுப்பினர்களுக்கெல்லாம் வேதனையாக இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா சொல்லியிருக்கிறார்; "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று. நல்ல திட்டங்களை வரவேற்கவேண்டும். ஆனால் நீங்கள் எதிர்க்கிறீர்கள்; மாறாக எதிர்த்துக் கொண்டு வருகிறீர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 24 மணி நேரத்தில், 18 மணி நேரம் இங்கேயிருந்து, கண் துஞ்சாமல் நாட்டு மக்களுக்காக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் உள்ள பாமர மக்கள்கூட பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

அதுமட்டுமல்லாமல் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தும் நோக்கோடு திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களை மீட்டு, அவற்றிலிருந்து திருக்கோயில்களுக்கு சரியான வருவாய் கிடைக்க ஏற்பாடு செய்வதற்காக மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஓர் அலுவலரையும் அவரது பணிகளை மேற்பார்வையிட இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையில் ஓர் அலுவலரையும் நியமித்து, இதுவரை அறநிலையத் துறையினரால் கண்டறியப்படாத நிலங்களை அடையாளங்கண்டு அந்நிலங்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிகிறேன். பல்வேறு காலகட்டங்களில் செல்வந்தர்களும், ஈகை குணமுடையவர்களும், திருக்கோயிலுக்கு அளித்த அசையாச் சொத்துக்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மீட்டு திருக்கோயிலின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காக அறநிலையத் துறை எடுத்துவரும் முயற்சியை ஒட்டுமொத்த தமிழக மக்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காட்டில் வாழ்க்கை நடத்திக் கொண்டு பல மனித உயிர்களைக் குடித்துக் கொண்டிருக்கும் சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கும், அவரை

[திரு. எம். சுப்பையா பாண்டியன்] [2003 ஏப்ரல் 21

பலமுறை சந்தித்துவிட்டு சந்தன வாசத்துடன் திரும்பி இன்று சிறைக்குள் இருக்கும் நக்கீரன் கோபாலுக்கும் இடையே சிலரின் வாசமும், பாசமும் எத்தனை விழுக்காடு என்ற கேள்வியினை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீவிரவாதத்துக்கும், பயங்கரவாதத்துக்கும் துணை போகிறவர்களுக்கெல்லாம் பாராட்டு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுக்காக ஒரு நாளைக்கு 18 மணி நேரம் கண்துஞ்சாமல் விழித்திருந்து 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று பாடுபட்டுக்கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டுவதில் பெருமை மிக உண்டு என்பதை இம்மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மழைக்குமுன்பு இடி இடித்தால், 'அர்ச்சுனன் பத்து, அர்ச்சுனன்' பத்து என்று சொல்வார்கள். ஏனென்றால் அர்ச்சுனன் பத்து என்று சொன்னால், அது 500 காதம் தாண்டி அந்தப் பக்கம் இடி விழுவதாக மகாபாரதத்தில் ஓர் செய்தி இருக்கிறது. ஏனென்றால் அர்ச்சுனனுக்கு 11 பெயர்கள் உண்டு, பார்த்தன், அர்ச்சுனன், காண்டீபன், விஜயன், பகாசாதனி, சவ்வியசாசி, பர்குணன், பார்யேத்தும், தனஞ்செயன், கிரிடி, சுகேத வாகனன், என்ற 11 பெயர்கள் உண்டு. அதுபோல ஆஞ்சநேயருக்கு எத்தனையோ பெயர்கள் உண்டு. மாருதி, அனுமந்தன், ஆஞ்சநேயன், வாயு நந்தனன், கேசரி நந்தவர்த்தனன், இராம பக்தன், இராம தூதன், ஆதித்திய சிஷ்யன், பஞ்சமுக அனுமன், தசபூச அனுமன், எனப்படும். அரிகிரி விஷ்ணுவிற்கு எத்தனையோ பெயர்கள் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணன், துவாரகை மன்னன், கண்ணன், வாசுதேவன், கோவிந்தன், கோபாலன், கேசவன், பார்த்தசாரதி, ஜனார்த்தனன், ரிஷிகேசன், பிண்டரிகேசன், மதுசூதனன், மாதவன், நாராயணன், அச்சுதன், இராமன். இப்படி எத்தனையோ பெயர்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், திரு. சுப்பையா பாண்டியனையும் கோயிலுக்கு ஆன்மீக வகுப்பு எடுப்பதற்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)



2003 ஏப்ரல் 21]

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லட்சுமிக்கு எத்தனையோ பெயர்கள் உள்ளன. அன்னலட்சுமி, சொர்ணலட்சுமி, பாக்கியலட்சுமி, வீரலட்சுமி, விவேகலட்சுமி, ஆதிலட்சுமி, அஷ்டலட்சுமி, லட்சுமி, லட்சுமி நாராயணி, என்று உள்ளன. ஆதிபராசக்திக்கு எத்தனையோ பெயர்கள் உள்ளன. ஆதிபராசக்தி, அங்காள பரமேஸ்வரி, எல்ல முத்தம்மன், கொல்லூர் மூகாம்பிகை, வடிவுடையம்மன், காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி, பெரியபாளையத்தம்மன், துர்க்கா தேவி, தேவி திருவேற்காடு கருமாரி, உருமாரி, மாரியம்மா என்று உள்ளன. இந்த மண்ணாள வந்த மாதரசி, வடநாட்டு அரசியலுக்கு சிம்ம சொப்பனம், தமிழகத்தினுடைய விடிவெள்ளி மகிளா, சிரோன்மணி, தங்கத் தலைவி, தானைத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்களைப் போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும் போகட்டும் புரட்சித் தலைவிக்கே, உங்கள் பணி தொடரட்டும் என்பதை இந்த அறியாச் சிறுவன் இந்த மாமன்றத்திலே பதிய வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன், சிறுவன் என்று யாரைச் சொல்கிறீர்கள், உங்கள் பையனையா? (சிரிப்பு)

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைத்தான் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில்கூட நெல்லை மாவட்டத்திற்கு அம்மா அவர்கள் வருகை தந்து 438 கோடி ரூபாயில் நல்ல பல திட்டங்களை அர்ப்பணித்தும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், குறிப்பாக எனது கடையநல்லூர் தொகுதியில் 36 கோடி ரூபாயில் ஆய்க்குடி பகுதியில் சிறு மின் உற்பத்தி நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டியமைக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டம் மட்டுமல்லாமல் கிட்டத்தட்ட 19 மாவட்டங்களுக்குச் சென்று, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். நான் ஒன்றை நினைத்துப் பார்க்கிறேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமாயணத்தில் இராமர் வாலிபனாக

இருக்கும்போது, விஸ்வாமித்திரர் அவரை அழைத்துக்கொண்டு போகிறார்; அவ்வாறு இராமர் வரும்போது கல்லை மிதித்து அகலிகையைப் பெண்ணாக்கினாராம். அதற்கு அந்த இராமர் கதையிலே,

**"இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்**
**இனி இந்த உலகுக்கெல்லாம்**
**உய்வண்ணம் ஆற்றி மற்றோர்**
**துயர் வண்ணம் உறுவது உண்டோ**
**மைவண்ணத்து அரக்கி போரில்**
**மழைவண்ணத்து அண்ணலே உன்**
**கைவண்ணம் அங்குக் கண்டேன்**
**கால்வண்ணம் இங்குக் கண்டேன்"**

என்று சொன்னதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கள் நெல்லை மாவட்டத்திற்கு வந்து, கால் பட்ட உடனே, வருண பகவான் இயற்கையிலே தூவி வரவேற்றான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் வேண்டிக்கொள்ளுங்கள், கண்டிப்பாக மழை பெய்யும் என்று சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களே, இன்றும் ஒருநாள் விட்டு ஒருநாள் எங்கள் மாவட்டம், கன்னியாகுமரி, வ.உ.சி. மாவட்டங்களில் மழை பெய்து கொண்டே இருக்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களே. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் வாக்கு தெய்வ வாக்கு; புரட்சித் தலைவி அவர்களே, நீங்கள் என்ன சொன்னீர்களோ அவையெல்லாம் நடக்கும். உங்களை எதிர்ப்பவர்கள் எவருக்கும் சக்தி கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமதக்னி முனிவருக்குப் பிறந்தவன் பரசுராமன். பிடித்த பிடியிலேயே பாதி பலத்தை வாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி படைத்தவன். அதேபோல புரட்சித் தலைவி, எதிரிலே நிற்பவர்களைப் பார்த்தாலே பதறி அடித்து ஓடிவிடுவார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்களிலே முடித்து விடுகிறேன், எனது தொகுதிக்கு உட்பட்ட





பண்பொழி அருள்மிகு திருமலைக்குமாரசாமி கோயில் பல ஆண்டுகளாக குடமுழுக்கு செய்யப்படாமல் இருந்த நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் குடமுழுக்கு செய்ய, புதிய திருப்பணிக் கமிட்டி அமைக்க உத்தரவிட்டு, இன்றையதினம் அத்திருக்கோயிலில் 95 சதவீதப் பணிகள் முடிவடைந்து விரைவில் குடமுழுக்கு நடக்க உள்ளது. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குடமுழுக்கு விழாவிற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரவேண்டும். வரமுடியவில்லையென்றால், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சரையாவது வரச்சொல்ல வேண்டுமென்று உங்கள் பாதம் பணிந்து அம்மாவைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் 3 கோரிக்கைகள்--தொகுதிக்கு வந்துவிட்டேன் பேரவைத் தலைவர் அவர்களே--எனது தொகுதியில் 3 கோரிக்கைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** முக்கியமானது பேரவைத் தலைவர் அவர்களே; அம்மாவின் 1995 ஆம் வருடம் ஆட்சி நேரத்தின்போது, கடையநல்லூர் தொகுதியில், திரிகூடபுரம் மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டி விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் சுமார் 9 கோடி ரூபாயில் வரட்டாறு குப்பத்து ஓடை அணை கட்ட நல்ல திட்டம் தந்தீர்கள். ஆனால் அதன் பின்னர் வந்த தி.மு.க. ஆட்சியில் அந்தத் திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டனர். மாண்புமிகு அம்மா அவர்களின் இப்போதைய பொற்கால ஆட்சியில் அந்த வரட்டாறு குப்பத்து ஓடை அணை கட்ட சுமார் ரூ.18 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அம்மா அவர்கள் கனிவோடு அவ்வணைக்கட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த உத்தரவிட அம்மா அவர்களை பாதம் பணிந்து தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இன்னும் ஒரு கோரிக்கை. அதாவது, என்னுடைய தொகுதியில் தாலுகா அலுவலகம் இல்லை. தென்காசிக்கு 25 கிலோ மீட்டர் போகவேண்டும். தென்காசி தொகுதிக்கு உள்ளேயே 2 தாலுகா அலுவலகங்கள் உள்ளன. தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் இடையே 5 கிலோ மீட்டர். அங்கே ஒரு தாலுகா அலுவலகம். தென்காசியில்

ஒரு தாலுகா அலுவலகம். தென்காசிக்கு 20 கிலோ மீட்டர் போக வேண்டும். ஆனால் என்னுடைய தொகுதி செங்கோட்டை தாலுகா அலுவலகத்தோடு சேர்க்கப்பட்டுள்ளது. செங்கோட்டை தாலுகா அலுவலகத்திற்கும், தென்காசி தாலுகா அலுவலகத்திற்கும் இடையே 5 கிலோ மீட்டர் இருக்கிறது. ஒரே தொகுதியில் இரண்டு தாலுகா அலுவலகங்கள் இருக்கின்றன. அதை மாற்றி கடையநல்லூருக்கு தாலுகா அலுவலகம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவர, உங்கள் பாதம் தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களுக்கு ஞானத்தில் உச்ச நிலை, பலத்தில் உச்ச நிலை, பக்தியில் உச்ச நிலை, வீரத்தில் உச்ச நிலை, சேவையில் உச்ச நிலை, கீர்த்தியில் உச்ச நிலை, விநாயகத்தில் உச்ச நிலை, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலேயும் உச்ச நிலை, (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால இந்தியாவின் பிரதமர் ஆவதிலும் உச்ச நிலை. (மேசையைத் தட்டும் ஒலி) அறிவு, வலிமை, புகழ், அஞ்சாமை, பக்தி, பணிவு, நோயின்மை, சொல்வன்மை, விழிப்புணர்வு ஆகிய பண்புகளோடு நமது தமிழ்நாட்டை இந்தியாவிலே முதன்மை மாநிலமாக ஆக்கிக்காட்டுவீர்கள் என்பதை நான் எடுத்துக்கூறி, 2003-2004 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்து அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வி. சிவகாமி.

***திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாளை வணங்கி, கோயில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்று பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எந்த ஊரை எடுத்துக்கொண்டாலும், முதலாவதாக, அந்த ஊர் முகப்பிலேயே ஒரு கோயில்தான் காணப்படும். அந்தக் கோயில்கள் சில ஊர்களிலே மிகவும் பாழடைந்து இருந்தன. இன்று குறிப்பாக எடுத்துக்கொண்டால், கங்கைகொண்டசோழபுரம். சில ஆண்டிற்கு முன்பு நான் அந்த வழியாக வந்தேன். அப்போது மதிய உணவிற்காக அந்தக் கோயிலுக்குள் சென்றேன். அங்கு பார்த்தவுடனே சாப்பிடவே மனது



இல்லை. காரணம் என்னவென்றால், அவ்வளவு பாழடைந்து கிடந்தது. இன்று மாண்புமிகு இதயதெய்வம் எப்படித்தான் அதைக் கண்டுகொண்டாரோ? அன்று டி.வி.யில் பார்த்தவுடனே இதற்காகவே எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்காதா என்று எண்ணியிருந்தேன். அந்த அரியதொரு வாய்ப்பை எனக்கு அளித்த தெய்வமே, அறத்தைக் காத்தீர்கள். அந்த ஊரிலே இப்போது மிகமிகச் சிறப்பாக பல இலட்ச ரூபாய் செலவிலே வேலை நடந்துகொண்டிருக்கிறது என்று கேள்விப்பட்டவுடனே மகிழ்ச்சியடைகிறேன். பல கோடி மக்களுடைய இதயத்திலே, குறிப்பாக ஏழைகளின் வீட்டில். தீபமாக எரியும் அம்மா அவர்களே, கங்கைகொண்டசோழபுரத்தை உருவாக்கியவன், கடாரம்கொண்டான் என்றவன்; தமிழகத்தினுடைய வரலாற்றிலே மிகச் சிறப்பு வாய்ந்தவன்; அவன் கட்டிய அந்தக் கோயில் இப்படி பாழடைந்து கிடக்கிறதே என்று கண்ணீர்விட்டு, அன்று தெய்வத்திடம் ஒரு கோரிக்கை வைத்துவிட்டு வந்தேன். இந்தத் தெய்வம்தான் அதைச் செய்ய வேண்டுமென்று விதியிருக்கிறபோது, அதை வேறு யார் செய்ய முடியும்? அம்மா அவர்கள் அதைப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடனே ஆயிரம் ஆண்டுகள் வாழவேண்டுமென்று உளமார நான் கூறுகிறேன்.

அதுமட்டுமல்ல. பசி என்றாலே பத்தும் பறந்து விடும் என்பார்கள். இன்று கோயில்களிலே அன்னதானம் வழங்கப்படுகிறது; அதுவும் 162 கோயில்களில். அவ்வளவுதான் என்று நினைக்கிறேன். இன்னும் பல்லாயிரக்கணக்கான கோயில்களிலே இந்தத் திட்டம் வரவேண்டும் தாயே. ஏனென்றால் பல பகுதிகளிலே பார்த்திருக்கிறேன். பல மைல்கள் அவர்கள் நடந்து வருவதை நிறைய பார்த்திருக்கிறேன். ரோடுகளிலே அவர்கள் வரும்போது, அந்த பக்தர்கள் மிகவும் சோர்ந்து போய் குன்றியிருப்பார்கள். ஒவ்வொரு கோயிலிலும் அன்னதானம் என்று சொல்லும்போது அவர்களுடைய வேகமும் சுறுசுறுப்பும் எப்படி இருக்கும். எது கிடைத்தாலும் போதும் என்று சொல்லமாட்டார்கள். இன்னும் வேண்டும் வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் உணவு ஒன்றுக்கு மட்டும்தான் எனக்குப் போதும் என்பார்கள். இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். அந்தப் பசி என்னும்போது பத்தும் பறந்துவிடும். அந்தப் பசிக்கு உணவு அளித்து இருக்கிறீர்களே, அதை இந்தத் தமிழக மக்கள், உண்மையாகவே சொல்கிறேன்; ஆயிரமாயிரம் கவிதைகள் சொல்லவேண்டுமென்று

எண்ணியிருந்தாலும்கூட, எனக்குக் கொடுத்து இருக்கின்ற சில மணித்துளிகளில் சொல்ல முடியாது. இந்தத் திட்டம் ஏழைகளின் வீட்டில் வாழுகின்ற தெய்வம் ஆகும். அதுவும் பெண்கள் பல்லாயிரக்கணக்கான, பல கோடி மக்களுடைய இதயத்தில் வாழுகின்ற, இமயம்போல உயர்ந்துவிட்ட அம்மா இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்து இருக்கிறார். அதற்காக, நான் என்றும் நான் அவருக்கு நன்றிக்கடன்பட்டவளாக இருப்பேன்.

அதுமட்டுமல்ல. இன்று கள்ளக்குறிச்சி பகுதியிலே வருகின்றபோது, திருநின்றவூர் என்ற ஓர் ஊர் இருக்கும். அந்தக் காலத்திலே ரிஷிகள்தான் அந்தக் கோயிலைக் கட்டியதாகச் சொல்வார்கள். நான் இறங்கி அதையும்கூட பார்த்தேன். பல சிற்பங்கள் செதுக்கியும்கூட அந்தக் கோயில் இன்னமும் செயல்படாமல் பாதியிலே நிற்கிறது. அதையும் தாய் கண்ணெடுத்துப் பார்க்கவேண்டும். அதனையும் கண்டிப்பாகப் புதுப்பித்துத் தர வேண்டும். ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். நாம் எல்லோரும் சட்டசபைக்கு வருகிறோம். ஆனால் எப்படியோ இருக்கும். ஆனால் அம்மா வந்து உட்கார்ந்தவுடனே எப்படி இருக்கும் பாருங்கள். மிகவும் சுறுசுறுப்பாக எல்லோருக்கும் ஒரு சந்தோஷமாக இருக்கும். அதேமாதிரிதான் கோயில் இருக்கும். அங்கே தெய்வம் இல்லாமல் இருக்கும். அந்தத் தெய்வத்தை அம்மா போய் வைக்க வேண்டும். அறத்லைதக் காக்க வேண்டும், அறங்காத்த தாயே.

அதுமட்டுமல்ல. ஒருசில பகுதிகளிலே கல்யாணம் நடத்திக் கொடுத்தார்கள். அம்மா, ஏழைகள் அந்தக் கல்யாணங்களின் மூலமாக எத்தனை பலனை இன்று அடைந்திருக்கிறார்கள் தெரியுமா? அவர்களுடைய மனம், உள்ளம் குளிர என்னிடமே சொல்வார்கள். இந்தக் கல்யாணம் இரண்டு வருடங்களாக நின்று கொண்டிருக்கிறது. இப்போது அம்மா நடத்தியதால்தான் இந்தக் கல்யாணம் நடந்து இருக்கிறது என்று சொல்வார்கள். அதுமாதிரி ஏழைகள் இந்தக் கல்யாணத்திற்கு வழியில்லாமல் சில பகுதிகளில் எல்லாம் மண் சட்டியிலே உண்டியல் செய்து அதில் ஒரு ரூபாய் போடுவார்கள். எதற்கு என்று கேட்டால் என்னுடைய பிள்ளையோட கல்யாணத்திற்காகச் சேர்க்கிறேன் என்று சொல்வார்கள். அந்த உண்டியல் மாதிரி அம்மா அவர்கள் இன்றைக்கு அந்தக் குழந்தைகளுக்கு இலவச கல்யாணம் செய்து வைக்கிறார்களே, கோயிலிலே, அது சாதாரண விஷயம் இல்லீங்க.



பிற்பகல் 12-30

ஒரு கல்யாணம் பண்ணி வைக்கூ வேண்டுமென்றால், அதற்கு ஆயிரம் பொய்யைச் சொல்லி, உண்மைக்குப் புறம்பானதைச் சொல்லி அந்தக் கல்யாணத்தைப் பண்ணிவைப்பார்கள். ஆனால் இதயதெய்வம் அம்மா அவர்கள்--இன்று கல்யாணத்தைக் கோயில்களிலே நடத்துகிறார்கள். இப்போதுகூட கருமாரி அம்மன் கோயிலிலே இதுவரையிலும் 1,300 பேர்களுக்கு மேலே கல்யாணத்தைப் பண்ணியிருக்கிறார்கள். அதிலும், மதிய உணவுத் திட்டத்திலே 55 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் கோடிக்கும் மேல் வருவார்கள். இது கோடி கோடி மக்களுக்குப் பயனாக இருக்கும் இனி வருங்காலத்திலே. மனிதன் தெய்வ பயம் இல்லாதவனாக இருக்கிறான். பாருங்கள்; ஒரு குழந்தை பிறக்கிறது என்றால், அந்த அம்மா அந்த வலியைத் தாங்க முடியாமல், தெய்வத்தைத்தான் கூப்பிடுவாள், ஜனனம் ஆகும்போது. அதற்குத்தான் சொல்வார்கள்:

“கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள் பல வேதெ ரிந்து மதனாலே
கரியகுழல் மாதர் தங்க ளடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி” என்று.

நீ செய்தது என்ன பூமியிலே? பிறக்கும்போது அப்படி; இறக்கும்போது சொல்வார்கள்:

“கட்டுவிட்டுமே கண்கள் எல்லாம் பஞ்சித்து
விட்டுவிட்டு மூச்சைவிட்டு
அட்டகாயம் கொண்டு ஆவிபறக்குது
நெட்டியா பலனா நீ நேர்ந்ததென்ன?”

நீ செய்த தர்மம் என்ன? நீ என்ன செய்து கண்டாய்? நீ போவது நரகமா? சொர்க்கமா என்பதுதான் இந்தக் கேள்வி. அந்தமாதிரி, தாயே உங்களுடைய காலத்திலே இத்தனை இலட்சம் மக்கள் பலனடைகிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினரிடம் கேட்டேன்; இவ்வளவு செய்றாங்க, நம்முடைய மூஞ்சிக்கா ஓட்டுப் போடுகிறார்கள் மக்கள் ‘அம்பாளைப் பார்க்கிறார்கள், ஓட்டுப் போடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான்கூட போனமுறை, 1991-லே தனியாக நின்று மூவாயிரத்து சில்லறைதான் ஓட்டு வாங்கினேன். இப்போது 24 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்தில் ஜெயித்திருக்கிறேன். அது, கட்சி வளர்ச்சியிலே 5 ஆயிரம் ஓட்டு ஆகட்டும்; மீதியெல்லாம் யாருடையது? அம்பாளுக்காகப் போட்ட ஓட்டு இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இப்படி செய்கிறீர்கள்? நன்றாக யோசித்துப் பாருங்கள். விசுவாசமாக இருங்கள். அந்த விசுவாசம்தான் முக்கியம். ஏனென்றால் இப்போது பாருங்கள்; யார் யாரெல்லாம் தெய்வத்திற்கு விரோதியாக இருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் வருவார்கள்போல் இருக்கிறது. என்னைக் கோபித்துக்கொள்ளக் கூடாது மற்றவர்கள். எனக்கு முன்புகூட ஓர் உறுப்பினர் பாட்டுப் பாடினார்.. என்ன பாட்டு என்று கேட்டால்,

'செஞ்சோற்றுக் கடன்தீர
சேராத இடம்சேர்ந்து
வஞ்சத்தில் வீழ்ந்தாயடா கர்ணா
வஞ்சகன் கண்ணனடா'

என்று. எனக்குக் கொஞ்ச நேரம், என்னடா இப்படிப் பாடுகிறார் என்று. அப்புறம்தான், நான் யோசித்து, ஓஹோ! இப்படி மாட்டிக் கொண்டதுமாதிரி இருக்கிறதா; சரி, அப்படி நீங்களே போய் உங்களுடைய வலையிலே சிக்கும்போது, கர்ணனுடைய முடிவுதான் உங்களுக்கு; அப்படி என்று நினைத்துக்கொண்டு, நான் பேசாமல் இருந்துவிட்டேன். அந்தமாதிரி இப்போது எத்தனை ஆயிரம் மக்கள் அம்மாவினுடைய இந்தத் திட்டத்தினாலே பலன் அடைந்திருக்கிறார்கள்! இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால், ஏழை மக்கள் எல்லோரும் சொல்கிறார்கள். நான் நடந்தே போவேன், 40, 50 கிலோ மீட்டர். ஆனால் இன்றைக்கு உணவு சாப்பிட்டுவிட்டு திருப்தியாகப் போகிறார்கள் அங்கேயிருந்து.

என்னுடைய ஊர் ரொம்ப சிறப்பு வாய்ந்த ஊர் ஐயா! தாராபுரம் என்றால், முந்தைய காலத்திலே விராடபுரம் என்று பெயர். அதாவது பாரதத்திலே சொல்வார்கள்; 12 வருடங்கள் வனவாசம்; ஒரு வருடம் அஞ்ஞானவாசம் என்று. யார் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியக்கூடாது. பாண்டவர்கள் அந்த ஒரு வருடம் என்னுடைய ஊர் மன்னனிடத்திலே இருந்தார்கள்.

என்னுடைய ஊர் மன்னன், விராட மன்னன். ஈவு, இரக்க, தான, தர்மத்தில், சிறந்தவன். இங்கேதான் அவர்கள் இருந்திருக்கிறார்கள். அதற்குண்டான சுவடுகள் இருக்கின்றன. இன்னும் பார்த்தீர்கள் என்றால்,



12 தூண்கள் இருக்கின்றன. ஒரு கல்லை எடுத்துத் தட்டினால், 12 ஓசைகள் வரும். அவற்றையெல்லாம், அம்மா அவர்கள் புதுப்பித்துத் தரவேண்டும் எனக்கு. அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்னும் கோயிலிலே சென்று பார்த்தீர்கள் என்றால், அந்தக் காலத்திலே கட்டப்பட்ட அரண்மனை எல்லாம் இன்று பெரிய மண்மேடாக உள்ளது. அந்த மண்மேடு எல்லாவற்றையும் பார்த்தீர்கள் என்றால், இன்றைக்கு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்றைப் பேசும். அவையெல்லாம் அம்மாவினுடைய வரலாற்றைத்தான் பேசும். ஏனென்றால் அழிந்துபோனவற்றை இன்றைக்குப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், அம்மா அவர்களுடைய வரலாற்றைத்தான் பேசும். வரலாறு என்றால் அதுவும் சாதாரண வரலாறு அல்ல. உலகத்திலே ஒரு பெண்ணாக பிறக்க வேண்டும்; அதுவும் கூன், குருடு, நொண்டி இல்லாமல் பிறப்பது அரிது. அதிலேயும் அரிது, அம்மாவைப்போல ஒரு மாபெரும் வீராங்கனையாக. உலகத்திற்கே நிகர் இல்லை. நான்தான் சொல்வேன்; உலகத்திற்கே நிகர் இல்லை. உலக அதிசயத்திற்கு நிகர் கண்டாரா முன்னோர்? அதுபோல்-புரட்சித் தலைவிக்கு நிகர் இல்லை என்பார், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் வரும் தமிழ்கூறும் நல்லோர்கள். அடிக்கடி அம்மாவைப் பற்றி நான் சொல்வேன். இப்படிப்பட்ட அம்மாவுக்கு நிகர், உலகத்திலேயே இல்லை என்று. அவர் யார்? தெய்வத்தினுடைய 'பிரின்ட்'; தெய்வத்தினுடைய வடிவு; தெய்வத்தினுடைய அவதாரம் என்றுதான் நான் அம்மாவைச் சொல்வேன்.

இன்றைக்கு அறநிலையத் துறையைப் பற்றி நான் பேசுகிறேன் என்று சொன்னால், நான் ஒரு பாமரன்; என்னுடைய அப்பா ஒரு தியாகி. எனக்குப் பெயர் வைத்ததுகூட காமராஜர்தான். என் சொந்தப் பெயர் பூவதி. காமராஜர், என் 6 வயதிலே, என்னை 'நீ சிவகாமி; என் அம்மாவின் பெயரை வைக்கிறேன்; நாட்டுக்குச் சேவை செய்' என்றார். அன்றிலிருந்து எல்லாவற்றையும் நான் மறந்துவிட்டு பணியாற்றிக்கொண்டு இருக்கிறேன்; குடும்பம், நாடு எல்லாம் எனக்கு ஒரேமாதிரிதான்.

பிற்பகல் 12-35

கடவுள் வந்து ஒரு பிறப்பில் இப்படித்தான் செய்வார்; யார் நல்லது செய்தார்களோ, அவர்களுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். நல்ல திட்டத்தை அம்மா போடுகிறார்கள்; நல்லது பண்ணுகிறார்கள்;

சட்டமன்றம் வேறு பக்கம் வரவேண்டும், அது நல்லா இருக்கவேண்டும்; அதையும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் அதற்கு ஒரு அரசியல் பண்ணுகிறார்கள். ஏனென்று தெரியவில்லை. அவர்களுடைய சுபாவத்தை மாற்றிக்கொள்ள மாட்டார்களா? இவர்கள் என்ன செய்வார்கள்? தெய்வம் இல்லை என்று சொல்வார்கள்; ஆனால் அவர்களுடைய மனைவிமார்கள் இலட்சக்கணக்கில், 20 இலட்சம், 10 இலட்சம் போட்டு யாகம் பண்ணுவார்கள். அவர்கள் வீட்டில் சாமி வைத்துக்கொண்டு இருப்பார்கள்; சாமிக்கு என்று ஒரு வீடு வைத்து இருப்பார்கள். ஆனால் இவர்கள் இங்கே என்ன செய்வார்கள்? இங்கே வந்து அது ஆகாது என்பார்கள். இவர்கள் காலத்தில் தெய்வத்தை கோயிலிலே இருந்து எடுத்து சாத்திவிட்டார்கள். அவற்றையெல்லாம் அம்மா அவர்கள் என்ன செய்ய வேண்டும்? அம்மா அவர்கள் அவை பூராவையும் பிடுங்கவேண்டும். அவை அவர்கள் கையில் இருக்கின்றன; நிறைய நிலம் அவர்களிடம்தான் இருக்கிறது; அவற்றையெல்லாம வாங்கினால், இன்னும் நிறைய பேருக்கு உணவு போடலாம்; அதற்கு அரசு பணத்தை வீணாக்க வேண்டாம்; அந்தப் பணமே நிறைய இருக்கிறது.

அம்மா அவர்கள் இன்னும் நிறைய ஏழைகளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும். அது ரொம்ப ரொம்ப முக்கியம். அம்மா அவர்கள் ஒரு வருடத்துக்குக் குறைந்தது 10 ஆயிரம் கல்யாணம் பண்ணி வைத்தால் நல்லா இருக்கும். ஏனென்றால் மக்கள் நிறையபேர் கல்யாணம் பண்ணுகிறார்கள். போனமுறை என்னுடைய தொகுதியிலே 10, 15 பேர் போய்விட்டு திரும்ப வந்துவிட்டார்கள். கொஞ்சம் பொறுங்கள்; அம்மா இன்னொரு திட்டம் தருவார்கள்; கண்டிப்பாக நடக்கும் என்று அவர்களுக்குச் சமாதானம் பண்ணினேன்.

இதய தெய்வம் அம்மா அவர்கள் ஏழை எளிய மக்களுக்குச் செய்கிற இந்த மதிய உணவுத் திட்டம், அதை இப்போது ஏழைகளுக்கு அரிசியாக வழங்குகிறார்கள்; அரிசி வழங்குவதன்மூலமாக நிறைய பேர் பயன்பெறுகிறார்கள்; அதை இன்னும் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்க வேண்டும்; இப்போது கொடுப்பதை விட இன்னும் கொஞ்சம் நிறைய பேருக்குக் கொடுக்க வேண்டும். ஒரு தொகுதியில் கொடுக்காமல்கூட இருக்கிறார்கள்; அங்கு அவர்களுக்குச் சோறு போடுவதால் போகவில்லை. அம்மா அவர்கள் செய்தது நல்லதுதான் பாருங்கள், சோறு என்று போட்டால் வரவில்லை; கடைசியில் correct-ஆகச் செய்தார்கள்; அந்தத் திட்டத்தை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டும்.



அரண் காத்த தேவியே! கண்டிப்பாக உங்களுடைய ஆட்சியிலே தமிழகத்தில் இருக்கும் அரண்களை எல்லாம் நீங்கள் கட்டி முடிக்கவேண்டும். சில கோயில்களைப் பார்த்தால் பாழடைந்து இருக்கும்; ஆனால் அங்குள்ள தெய்வத்திற்கு நல்ல சக்தி இருக்கும். அவற்றையெல்லாம் நீங்கள் பார்த்துச் செய்ய வேண்டும். நிறைய இடங்களில் அந்தமாதிரி இருக்கிறது; அந்த லிஸ்ட்டை எல்லாம் நான் அம்மாவிடம் கொடுக்கிறேன். அதுபோன்ற கோயில்களின் எண்ணிக்கை நிறைய இருக்கிறது; பிரசித்தி வாய்ந்த கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு சொத்து நிறைய இருக்கிறது; நிலம் இருக்கிறது; நல்ல கட்டடம் இருக்கிறது. ஆனால் அவற்றையெல்லாம் அந்தக் கோயிலில் உள்ள எல்லோரும் எடுத்துவிடுவார்கள். சூரியநல்லூரில் கூட ஒரு சிறப்பு வாய்ந்த கோயில் இருக்கிறது. நம்முடைய அமைச்சருக்கு அதுபற்றித் தெரியும். அந்தக் கோயிலுக்கு 12 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதுபற்றி case போட்டு அந்த நிலத்தை அவர்கள் வைத்து இருக்கிறார்கள். கோயிலுக்கு நிலம் தரவேண்டும். ஆனால் கோயில் நிலத்தை அவர்கள் கொடுக்கமாட்டார்கள். அந்தமாதிரி இருக்கிற நிலங்களை எல்லாம் அம்மா அவர்கள் எடுக்கவேண்டும்.

அம்மாவினுடைய ஆட்சியில் தர்மம் நிலைக்கிறது; நீதி நிலைக்கிறது; நேர்மை நிலைக்கிறது. அவர்கள் இன்னும் பல்லாண்டு இந்தத் தமிழ்நாட்டில் பெரிய பெரிய சாதனைகளைச் செய்து, பெரிய அளவிலே அவர்களை இந்த உலகமே உற்றுப் பார்க்கிற அளவுக்கு இப்போது ஒரு புனிதமான ஆட்சியை அவர்கள் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஆண்டவன் அருளும் நிறைய இருக்கிறது; இனியும் அவர்களுக்கு இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதிக்காகக் கேட்கிறேன். இந்த மானியக் கோரிக்கையில் 28 கோடியே 10 இலட்சத்தைக் கேட்டு இருக்கிறார்கள்; எனது தொகுதியில் நிலுவையில் இருக்கும் திட்டங்களையும் அம்மா அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் இருக்கிறது. பக்தர்கள் நிறைய வருவார்கள்; என்னுடைய ஊர் வழியாகத்தான் அவர்கள் தருமபுரி, சேலம், நீலகிரி, கோவை, ஈரோடு போன்ற இடங்களிலிருந்து நிறைய பேர் வந்து தாராபுரம் வழியாகத்தான் போகவேண்டும்; அவர்களைப் பார்த்தீர்கள் என்றால், அவர்களுக்கு தாராபுரம் முடிவாக இருந்தால், சேலம்தான் [illegible] ஆக இருக்கும்; அவர்கள் நடந்தே வருவார்கள்; அவர்களுக்கு ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டும். தமிழ்நாட்டில்

இன்றைக்கு அம்மா அவர்கள் செய்திருக்கிற திட்டங்கள் எல்லாம் நல்ல நல்ல திட்டங்கள். அதைப்பற்றி போனமுறைகூட நிறைய சொல்லி இருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை extend பண்ணவேண்டும்; அதிகப்படுத்த வேண்டும்; அம்மா அவர்கள் அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தினார்கள் என்றால், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவை போய்ச் சேரும் என்று கூறி, இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்த என்னுடைய இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு வணக்கம் கூறி, பேரவைத் தலைவருக்கும் வணக்கம் கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருப்பணன்.

***திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை ஒன்றியச் செயலாளராக ஆக்கி, பின்பு சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி இந்த மாமன்றத்தில் மூன்றாவது முறையாக இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

*பிற்பகல் 12-40*

உலகில் எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத, பக்தர்களின் பசிப் பிணியைப் போக்க திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தந்த எங்கள் இதயதெய்வமே. வாடிய விவசாயிகளின் துயர் நீக்க அபராத வட்டி ரூபாய் 310 கோடியே 50 இலட்சம் சுமையைத் தள்ளுபடி செய்து மேலும் நில வரியைத் தள்ளுபடி செய்து, காய்ந்த தென்னை மரங்களுக்கு மானியம் வழங்கி விவசாயிகளின் துயர் நீக்கிய எங்கள் குலவிளக்கே! தாழ்த்தப்பட்ட மக்களின் துயர்துடைக்க ரூ.100 கோடி அளவிற்கு வீட்டுக் கடன் வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்த எங்கள் ஏழைகளின் இதயக்கனியே! இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத தாழ்த்தப்பட்ட S.C. மற்றும் S.T. மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கிய எங்கள் மாதர்குல மாணிக்கமே! வானம் பொய்ப்பினும், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார்கள், பசிக்கு பலியாகிறார்கள் என்று பொய்யைச் சொன்னாலும் அதை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்று பசிப் பிணியைப் போக்க இலவச அரிசி வழங்கும் திட்டத்தைக் கொடுத்த எங்கள் வருங்கால பாரதத்தின்



தாயே! நெசவாளர்களின் துயர் துடைக்க மலிவு விலை வேட்டி-சேலை கொடுத்து உதவிய ஏழை நெசவாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமே! தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக்க தரிசு நிலங்களை எல்லாம் விளை நிலங்களாக மாற்றவுள்ள எங்கள் தமிழ் அன்னையே!

பெண்கள் நாட்டின் இரு கண்கள் என்று கருதி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கோடானுகோடியாக மானியம் வழங்கிய மாதர்குல மணிவிளக்கே! ஏழைகளின் இதயம் காப்போம் திட்டத்தைக் கொடுத்து உதவிய ஏழைகளின் இதயத் துடிப்பே!

பெரியார் பிறந்த மண்ணாம் எங்கள் கொங்கு நாட்டுக்கு வருகை தந்து, ஒரு தாய் மகளுக்குக் கொடுக்கின்ற சீர்வரிசையைப்போல எங்கள் தாய் எங்களுக்கு, பெரியார் பிறந்த மண்ணில் உள்ள மக்களுக்கு 425 கோடி ரூபாய் நலத் திட்டப் பணிகளை வழங்கியும், இந்த நிதிநிலை அறிக்கையில் 23 ஆயிரம் ஏக்கர் நிலத்தை LBP நீர்ப்பாசனத் திட்டத்தில் சேர்த்து அதனுடைய பராமரிப்புக்காக ரூ.55 கோடியை ஒதுக்கிய எங்கள் கொங்கு நாட்டுத் தங்கமே!

சேற்றில் கிடக்கின்ற ஒவ்வொரு உழவனும் தொழில் அதிபர் ஆகலாம் என்று ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் அளவில் விவசாயம் சார்ந்த தொழில் தொடங்க அனுமதி கொடுத்து-- ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்--இன்றைக்கு ஏழையர் இல்லமதில் இன்பத்தைத் தந்தார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுபோல வாடிய காவிரி விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பரிசாக 21 கோடி ரூபாய் பரிசு கொடுத்து வாக்களித்த மக்களை வாழவைத்த எங்கள் தெய்வமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமுன் காப்போம், வந்தபின் காப்பாற்ற முடியாது என்றொரு திட்டம்; மாண்புமிகு அம்மா அவர்களை சித்ரவதை செய்ய ரூ. 5 கோடி செலவு; பறிபோனது இந்திரா குடியிருப்பு; தேவையில்லாத அதிகாரிகள் நியமனம்; ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அரசுப் பணம் விரயம்; பதவி சுகம் போனதும் அய்யோ! அய்யோ! என்று சொல்லிய அந்த நிலைமை மாறி தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் அனைத்து கிராம நிர்வாக அலுவலகம் கட்டப்பட்டு வருகிறது. S.C., B.C. மாணவ மாணவியர்களுக்கு விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. அநாதைக் குழந்தைகளுடைய காப்பகங்கள், தமிழகம் முழுவதும் அனைத்து மகளிர் சுகாதார வளாகம் மற்றும் மகளிர் சுய உதவிக்

குழுக்கள் வளாகம், மழைநீர் சேகரிப்பு, தமிழகத்தில் உள்ள அனைத்து குளம் குட்டைகள் தூர்வாரப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் அதிகமான மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து அவர்களுக்கு சுயமாக தொழில் செய்ய கோடானுகோடி ரூபாய் கடன் கொடுத்து அதில் 50 சதவிகிதம் மானியமும் கொடுக்கும் திட்டம். ஆக இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழக மக்களுக்கு எத்தனை எத்தனை திட்டங்கள். இதனை நினைத்தால் தமிழகம் முதல் மாநிலம் ஆகாதா சொல்லுங்க.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கிராமத்து விவசாயி என்ற முறையில் சொல்கிறேன். தமிழகத்திலுள்ள எந்தவொரு விவசாயியும் இலவச மின்சாரம் இரத்து ஆகிவிட்டது என்று சொல்லி ரோட்டிற்கு வந்து யாரும் போராடவில்லை. ஆனால் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள்தான் விவசாயிகளுக்கு சம்பந்தம் இல்லாதவர்களை கூட்டிக்கொண்டு 5 பேர், 10 பேர் என்று விளம்பரம் தேடுவதற்காக இப்போது தெருக்களில் வந்து போராடிக் கொண்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயிலுக்குச் செல்பவர்கள் எல்லாம் கோமாளிகள், தீ மிதிப்பவர்கள் எல்லாம் தீண்டத்தகாதவர்கள் என்றும் இந்து என்றால் திருடன் என்றும் இந்து அறநிலையத் துறையைக் கொச்சைப்படுத்தியவர்களும் உண்டு.

"நெஞ்சி லுரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ-கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடீ"

என்று பாடிய மகாகவி பாரதியாரின் பாடலை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்துவிட்டு இப்பேரவைக்கு வராமலும், சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் பற்றி வெளியே பேசிக் கொண்டிருக்கும் தலைவருக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நேரில் சந்திக்கும் துணிவும் இல்லை.

பிற்பகல் 12-45

கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக் கூடாது என்று வசனம் எழுதி கைத்தட்டல் பெற்றவரின் வாரிசுகள் 1996-2001 ஆம் ஆண்டுகளில் கோயில்களை கொள்ளையடித்தது. மதுரையில்



ஒருவர் தன் விருப்பப்படி புதிய நியமனங்களை செய்து கொண்டார். சென்னையில் இன்னொரு வாரிசு கோயில் நிலத்தை மிகக் குறைந்த வாடகைக்குப் பிடித்து இறால் பண்ணை நடத்தி வருகின்றார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த நிலைமை மாறி, தமிழக அரசின் நிதி நிலை சீரமைக்கப்பட்டது போலவே, திருக்கோயில்களின் நிதி ஆதாரங்கள் சரி செய்யப்பட்டதன் காரணமாகத்தான் திருக்கோயில்களில் சில சமூகப் பொறுப்புகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றி வருகின்றார்கள் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட அன்னதானத் திட்டம் பெரும் ஆதரவு பெற்று தற்போது 162 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் சாப்பிட்டு இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். சென்ற நிதியாண்டில் இத்திட்டம் அறிவிக்கப்பட்டபோது இம்மாமன்றத்தில் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இது என்ன புதிய திட்டம், கேரளாவில் இல்லையா? கர்நாடகத்தில் இல்லையா? என்று கேட்டார்கள். கொச்சைப்படுத்திப் பேசினார்கள். அங்கு எல்லாம் 5 அல்லது 10 திருக்கோயில்களில்தான் இந்த அன்னதானத் திட்டம் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் இங்கு, 162 திருக்கோயில்களில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. மேலும் அண்டை மாநிலங்களில் உள்ள திட்டத்தைவிட சிறப்பான திட்டமாக மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். அதேபோல் அன்னதானம் சாப்பிடுபவர்கள், தரிசனத்திற்குச் செல்லும் நடுத்தரப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் கஷ்டத்தைப் புரிந்துகொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றிய திட்டத்தை முழு மனதோடு வரவேற்கிறேன். மேலும் இத்திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சியால், நல்ல உள்ளம் கொண்ட வசதி படைத்த மக்கள் நிதியை வாரி வழங்குகிறார்கள். இது மாண்புமிகு அம்மா அவர்களின் மிகப்பெரிய சாதனை இல்லையா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மூலம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற ஆண்டு சென்னையில் நடத்தி வைத்த 1,008 இலவச திருமணங்கள் உலகம் போற்றும் வண்ணம் அமைந்திருந்தன. இவர்கள்

[திரு. கே. சி. கருப்பணன்] [2003 ஏப்ரல் 21

எல்லாம் யார்? நாட்டினுடைய கோடீஸ்வரர்களா? இல்லை. இவர்கள் குடும்பத்தில் திருமணம் என்பது ஒரு கனவாகவும், கைக்கு எட்டாக் கனியாகவும் இருந்தது. தாய் தந்தையர்கள் பிள்ளைக்கு வயது வந்தாயிற்றே, கல்யாணம் பண்ண 5,000 ரூபாய் கூட சம்பாதிக்க முடியவில்லை என்று ஏங்கிக்கொண்டு மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருப்பதுபோல பிள்ளைகளைப் பார்த்து கவலைப்பட்டுக் கொண்டு இருந்தவர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தலைமையில் இலவச சீர்வரிசையோடு திருமணம் செய்து வைக்கிறார்கள் என்று சொன்ன உடனேயே அவர்கள் ஆனந்தப்பட்டார்கள் என்பது எங்களைப் போன்றோர்களுக்குத்தான் நன்கு தெரியும். இது ஒரு சாதனை இல்லையா! மேலும் இந்த ஆண்டு, அந்தந்த மாவட்டங்களில் இலவசத் திருமணத்தை நடத்தி வைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில், சென்னையில் நடைபெறவேண்டும் என்று தாழ்த்தப்பட்ட மக்கள் நினைக்கிறார்கள் என்பதை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு அன்போடும், பணிவோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஜூன் மாதத்தில் மீண்டும் 1,008 ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் நடத்தி வைக்கலாம் என்று இந்த அரசு முடிவு செய்து உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே சில மணமக்கள், அதாவது திருமணம் செய்து கொள்ள விரும்புகின்ற ஜோடிகள் பதிவு செய்துகொண்டு இருக்கின்றார்கள். ஏற்கெனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சிவகாமி அவர்கள்கூட அவர்களது தொகுதியைச் சேர்ந்த 10 ஜோடிகள் ஏற்கெனவே இந்த இலவசத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று விரும்பி ஏமாற்றத்துடன் திரும்பியதாகக் குறிப்பிட்டார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சிவகாமி அவர்களும், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர் தொகுதிகளில் இப்படி அரசு நடத்தி வைக்கும் இலவசத் திருமண நிகழ்ச்சியின் மூலம், திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஜோடிகள் இருந்தால் அவர்கள் அறநிலையத் துறை அதிகாரிகளிடம் பதிவு செய்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2003 ஏப்ரல் 21]

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபின்பு, கடந்த 2 ஆண்டு .... (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவகாமி.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவிற்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜூன் மாதம் வரைக்கும் ஜோடிகளைக் கொஞ்சம் பொறுத்திருக்கச் சொல்லுங்கள். (சிரிப்பு)

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு கடந்த இரண்டு ஆண்டுகளில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு அவற்றை அகற்றி பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் திருக்கோயில் வசம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சொத்துக்கள் சரியான முறையில் பராமரிக்கப்பட்டு அதன் வாயிலாக திருக்கோயில்களுக்கு மிக அதிக வருவாய் கிடைக்கின்றது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் ஓட்ட முடியாத கண்டதேவி திருத்தேர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் முயற்சியால் தென்மாவட்டங்கள் வியக்கும் வண்ணம் மிகச் சிறப்பான முறையில் திருத்தேர் ஓட்டி வைக்கப்பட்டது. மேலும் திருக்கோயில்களும் கல்விக் கூடங்களும் நன்றாக இருந்தால்தான் நாடு நன்றாக இருக்கும், நாட்டு மக்கள் நன்றாக இருப்பார்கள் என்று எண்ணி, 2001-2002, 2002-2003 ஆம் ஆண்டுகளில் கோயில்களின் திருப்பணிகளுக்காக ரூ.25,000 வீதம் தாழ்த்தப்பட்ட 50 ஆதிதிராவிடர் திருக்கோயில்களுக்கு 25 இலட்சம் ரூபாயை, மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். அதேபோல் இந்த ஆண்டும் 100 திருக்கோயில்களுக்கு 2...

184540

அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்றும் கேட்பாரற்றுக் கிடந்த திருக்கோயில் குளங்கள் எல்லாம் நல்ல முறையில் தூர்வாரி தூய்மையான நீர் கிடைக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

அதேபோல திருவண்ணாமலை, இராமேஸ்வரம் போன்ற மிகப்பெரிய திருத்தலங்கள் மற்றும் ஏனைய திருக்கோயில்களில் 2001 முதல் 2002 ஆம் ஆண்டுவரை 1,770 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) செய்து, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவில் மிகச் சிறப்பான முறையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆசியுடன் கும்பாபிஷேகம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும் பழனியம்பதி என்றும், தென்பழனி என்றும் தமிழகம் மற்றும் கேரள மக்களால் போற்றப்படும் மிகச் சிறந்த வழிபாட்டுத் தலங்களில் ஒன்றான பழனி முருகன் சன்னதியில் பொதுமக்களின் நெருக்கத்தைக் குறைக்கும் வண்ணம் சுமார் 3.88 கோடி ரூபாய் செலவில் கேபிள் கார் வசதியைச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டி மிகச் சிறப்பாக வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பவானி தொகுதியில்கூட, பவானி நகரில் காவிரி ஆறும், பவானி ஆறும் சங்கமம் ஆகும் கூடுதுறை சங்கமேஸ்வரர் திருக்கோயில், மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த திட்டமான அன்னதானத் திட்டத்தில் முதல் அறிவித்த 63 திருக்கோயில்களில் இதுவும் ஒன்றாகும். இத்திருக்கோயிலுக்குச் சென்ற ஆண்டு 1 கோடி ரூபாய் அளவிற்கு சுற்றுலாத் துறை மூலமும், கோயில் நிதி மூலமும், அரசுப் பணம் மூலமும் பெண்கள் உடைமாற்றும் அறை, நவீன கழிப்பிட வசதி, குடிநீர்த் தொட்டி, சைக்கிள் ஸ்டாண்டு, அலுவலர்கள் குடியிருப்பு மற்றும் அலுவலகம் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைத்து தொகுதி மக்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அவர்களின் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் விவசாயம் மற்றும் தொழில் வளம் செழிக்க அன்புத் தாய் அறிவித்த அவினாசி-அத்திக்கடவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், எங்கள் மாவட்ட விவசாயிகளின் கனவை நனவாக்கவும், இதய தெய்வம் புரட்சித்



தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றி, LBP மற்றும் தட்டப்பள்ளி, அரக்கன்கோட்டை, காளிங்கராயன் பாசனம் மூலம் சுமார் 5 இலட்சம் ஏக்கர் விளை நிலம் பயன்பெற சுமார் 14 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்க பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை எங்கள் மாவட்டத்திற்கு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களை பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எனது தொகுதியில் மனித உயிர் தோன்றிய காலத்திலிருந்து வைரமங்கலம், சின்னபுலியூர், பெரியபுலியூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் மக்கள் பவானி ஆற்றைக் கடந்து செல்வதற்கு பாலம் இல்லாமல், 1 கி.மீ., 2 கி.மீ. தூரம் செல்லக்கூடிய, சக்தி சர்க்கரை ஆலை மற்றும் தளவாய்பேட்டை, ஜம்பை ஆகிய ஊர்களுக்கு 15 முதல் 20 கி.மீ. வரை சுற்றி அந்த சர்க்கரை ஆலைக்கும், மற்ற ஊர்களுக்கும் செல்கிறார்கள். எனவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எனது பவானி தொகுதியில் உள்ள பவானி மற்றும் ஆப்பக்கூடல், கவுந்தப்பாடி காவல் நிலையத்தில் பணிபுரியும் உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், காவலர்கள், மகளிர் காவலர்கள், அனைவருக்கும் நல்ல குடியிருப்பு வசதியில்லை. மிகவும் பழைய ஓட்டுக் கட்டடத்தில் இருக்கிறது. மழைக் காலத்தில் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே இவர்களுக்கு ஓர் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடம் கட்டிக்கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எங்களுடைய பவானி நகரம் இந்தியாவிலேயே ஜமுக்காள நகரம் என்று பெயர் பெற்றது. ஜமுக்காளத் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய கூட்டுறவுச் சங்கங்களில் 2 X 10 நூல் கிடைப்பதில்லை. அதற்கு நம்முடைய ஆலைகள் மூலம் நூல் கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எங்களுடைய பவானி நகரத்தில் உள்ள 7 நீதி மன்றங்களும் வாடகைக் கட்டடத்தில் இருந்து வருகின்றன. இவற்றிற்குண்டான நிலத்தை பவானி நகராட்சி ஒதுக்கிக்

[திரு. கே.சி. கருப்பணன்] [2003 ஏப்ரல் 21

கொடுத்துள்ளது. அங்கே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த

'எந்நாளும் புகழ் மணக்க
இந்நிலத்தை முதல் மாநிலமாக்க ஆள்பவரே!
எங்கள் இதயத்தில் இருப்பவரே!
இந்தியாவின் எதிர்பார்ப்பே!
இன்பத் தமிழ் இருப்பிடமே!
இலக்கியமாய் வாழுகின்ற எங்கள் உயிர்மூச்சே!
அகன்ற பாரதத்தை ஆளப்போகும்
அமுதூறும் புதுமலரே!

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

*பிற்பகல் 12-55*

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் இங்கே முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழில் அர்ச்சனை, தமிழில் குடமுழுக்கு என்பது உறுதிசெய்யப்பட வேண்டுமென்பதை நான் குறிப்பிடுகிறேன். கரூர் பகுதியில் தமிழில் குடமுழுக்கு செய்தபோது ஏற்பட்ட சிரமங்களை நாடறியும். அதுபோன்ற நிலைமை ஏற்படாத வண்ணம் தமிழில் அர்ச்சனை, குடமுழுக்குச்செய்யும் கோயில்களுக்கு சிறப்புச் சலுகைகளை வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் குடமுழுக்கு என்ற விவகாரம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்தக் கருத்துக்கு நான் பதில் கூறுகிறேன். தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்களில் நடைபெறும் குடமுழுக்குகள் அந்தந்த திருக்கோயில் பழக்க வழக்கங்கள் மற்றும் திருக்கோயில் ஆகம விதிகள் ஆகியவற்றுக்கு உட்பட்டதாகும். ஆகம விதிகளை நன்கு



2003 ஏப்ரல் 21] [திரு. பி.சி. ராமசாமி]

கற்றுத் தேர்ந்த சிவாச்சாரியார்களால் சிவன் திருக்கோயில்களிலும், பட்டாச்சாரியார்களால் வைணவத் திருக்கோயில்களிலும் ஆகம விதிகளின்படி குடமுழுக்கு நடைபெற்று வருகின்றது. அனைத்துத் திருக்கோயில்களிலும், தமிழில் அர்ச்சனைகள் நடைபெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சேவார்த்திகள் விருப்பத்திற்கேற்ப திருக்கோயில்களில் சமஸ்கிருதம், மற்றும் தமிழில் அர்ச்சனைகள் செய்யப்பட்டு வருகின்றன. தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என சேவார்த்திகள் அறியும் வண்ணம் திருக்கோயில்களில் விளம்பரப் பலகையும் வைக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழில் அர்ச்சனை செய்வதற்கு ஏதுவாக இத்துறையின் மூலம் தமிழில் 'போற்றிகள்' அச்சிடப்பட்டு திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். நன்மாறன்:** இந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் முறையில் வேத ஆகமக் கல்லூரி உருவாக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதுகுறித்து இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே எதுவும் இல்லையென்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே அரசு இதில் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து ஆலயங்களுக்கான நிலக் குத்தகை பற்றி இந்தக் குறிப்பில் இருக்கிறது. குத்தகை விவசாயிகள் தமிழகம் முழுவதும் ஒரு விஷயத்தை எதிர்பார்க்கிறார்கள். 1973 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் முன்மொழியப்பட்டு அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆலயங்களுக்கு வர வேண்டிய தொகையும் வரவேண்டும், விவசாயிகளும் நலம் பெற வேண்டும், அந்த அடிப்படையில் 12 ஆண்டுகளாக நிலக் குத்தகை என்பதை ஒரு தொகையாகத் தீர்மானித்து, 12 ஆண்டுகளில் அதைத் தவணைமுறையில் செலுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இம்மாதிரி ஒரு ஏற்பாடு செய்து, பணத்தைப் பெற்றால் வங்கியில் போட்டு, ஆலயப் பணிகளும் முறையாக நடைபெறும். குத்தகை விவசாயிகளுக்கும் நிலம் கிரயமாக கிடைக்க வழி ஏற்படும். ஏற்கெனவே 1973-லே கொண்டுவரப்பட்டு பிறகு அது நிறைவேற முடியவில்லை. செலக்ட் கமிட்டிக்குப் போனது.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம் திருமுக்கூடலூர் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் தமிழ்முறை பற்றி இங்கே

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை விளக்கிக் கூறுவது என்னுடைய கடமையென்று நான் கருதுகிறேன். கரூர் மாவட்டம், கரூர் வட்டம், திருமுக்கூடலூர் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் இத்துறை ஆளுகையின் கீழுள்ள பட்டியலில் சேராத ஆண்டு வருவாய் ரூ.1,180/- மட்டும் பெறும் சிறிய கோயிலாகும். மேற்படி திருக்கோயில் பிரகாரத்தில் அருள்மிகு மணிமுக்தீஸ்வரர் சன்னதி, அருள்மிகு அழகு நாச்சியம்மன் சன்னதி மற்றும் அருள்மிகு சண்டிகேஸ்வரர் சன்னதி ஆகியவை அமைந்துள்ளன. மேற்படி திருக்கோயில் தக்காராக நியமனம் செய்யப்பட்டுள்ள தான்தோன்றிமலை அருள்மிகு கல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் 30-1-2002-ல் தன்னிச்சையாக பொறுப்பேற்று நிருவாகம் செய்து வருகிறார். மேற்படி திருக்கோயிலின் முன்னாள் அர்ச்சகர் திரு. நாகேஸ்வர குருக்கள் என்பவராலும் அவரது மறைவுக்குப் பின்னர் அவரது குமாரர் செல்வசுப்பிரமணியம் என்பவராலும் கவனிக்கப்பட்டு வந்தது. அவருடன் அவரது சிறிய தகப்பனார் மகன் திரு. கந்தசாமி குருக்கள் என்பவரும் பூசை செய்து நிருவாகத்தைப் பார்த்து வந்தார்கள். இடிபாடுடன் கூடிய மேற்படி திருக்கோயிலை திருப்பணி செய்திட வேண்டியது அவசியமாக உள்ள நிலையில் மேற்படி திருக்கோயிலின் தென்பகுதியில் ஒரு சிறிய சன்னதியாக விளங்கும் ஸ்ரீமணிமுக்தீஸ்வரர் என்னும் அழகு நாச்சியம்மன் சன்னதியில் மேற்படி திருக்கோயிலுக்கு தக்கார் நியமிக்கப்படுவதற்கு முன்பிருந்தே சுமார் 2½ ஆண்டுகாலம் சிறிய திருப்பணி வேலைகள் மேற்கொள்ள ஆலய அர்ச்சகர்கள் ஒப்புதலுடன் இத்துறை அனுமதிக்கு விண்ணப்பிக்காமலும், துறை அனுமதி பெறப்படாமலும் கரூர் சிவனடியார்கள் திருக்கூட்டமைப்பு மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

9-9-2002 அன்று மேற்குறிப்பிட்ட அருள்மிகு ஸ்ரீமணிமுக்தீஸ்வரர் அழகு நாச்சியம்மன் மற்றும் சண்டிகேஸ்வரர் சன்னதிகளில் இத்துறை அனுமதி பெறாமல் கருவறைக்குள் சென்று கும்பாபிஷேகம் செய்தனர். அதைத் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு சிவனடியார்கள் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட மேற்படி சன்னதிகளில் கருவறைக்குள் சென்று பூசை செய்தனர். சிவனடியார்கள் கருவறைக்குள் சென்றதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்களிடம் இருந்தும் ஆன்மீக பக்தர்களிடமிருந்தும் வந்த புகார்களைத் தொடர்ந்து 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருக்கோயில் நுழைவு அனுமதிச் சட்ட விதிகளுக்குப்





புறம்பானவை என மேற்படி ஆலய தக்கார் செயல் அலுவலரால் 12-9-2002 அன்று பாங்கல் கிராம காவல் நிலையத்தில் புகார் செய்தனர். அதனுடைய அடிப்படையில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டதாகக் கருதி 14-9-2002 அன்று கரூர் கோட்டாட்சியர் முன்னிலையில் இரு தரப்பினரிடையேயும் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:—

பிற்பகல் 1-00

சிவனடியார்கள் மூலஸ்தானத்திற்குள் யாரும் எந்தச் சூழ்நிலையிலும் செல்லக் கூடாது; சட்ட விதிகளின்படி இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. திருக்கோயில் அர்ச்சகர்கள் மட்டுமே கர்ப்பக்கிருகத்திற்குள் சென்று பூசை செய்ய வேண்டும்; அர்ச்சகர்கள் கருவறைக்குள் ஆகம விதிப்படி, வழக்கப்படி தவறாமல் பூசை செய்யவேண்டும். அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலுள்ள அனைத்து சன்னதிகளிலும் திருக்கோயில் அர்ச்சகர்கள் தினசரி பூசை செய்ய வேண்டும். மண்டலாபிஷேகம் நிறைவு நாளன்று சிவனடியார்கள் காலையில் தமிழ் முறைப்படியும், மாலையில் திருக்கோயில் அர்ச்சகர்களின் ஆகம விதிகளின்படியும் நிறைவுநாள் பூசை செய்யவேண்டும். இந்த விழாவில் இவ்விருதரப்பினரும் எந்தக் கருத்து வேறுபாடின்றி மனப்பூர்வமாக பூசை செய்ய சம்மதிக்கப்பட்டது. தினமும் பூசைக் காலம் 9-00 மணி முதல் 10-00 மணி வரையாகும். சம்பந்தப்பட்ட திருக்கோயிலில் மேற்கொள்ளும் வேறெந்தப்பணியையும் இந்து சமய அறநிலையத் துறையின் அனுமதி பெற்ற பின்னரே இரு தரப்பினரும் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இன்னும் ஒன்றை நான் சொல்கிறேன். தமிழ்நாடு திருக்கோயில் நுழைவு அதிகாரம் அளிக்கும் சட்டம் 5/1947 பிரிவு 4, உட்பிரிவு 8-ன்படி பக்கதர்கள் அனைவரும் திருக்கோயிலுக்குள் நுழைந்து வழிபட உரிமையுண்டு. ஆனால் திருக்கோயில் கர்ப்பக்கிருகத்திற்குள் நுழையவோ, வேறு முக்கியமான பூசை செய்யும் புனித இடங்களுக் நுழையவோ, அவ்வாறு நுழைந்து தானே பூசை செய்ய உரிமையில்லை. திருக்கோயில்களின் பழக்கவழக்கத்தை அனுசரி நடைமுறையை உத்தேசித்தும், அர்ச்சகர்கள், பூசாரிகள் போன்ற பூசை செய்யும் தகுதி பெற்றவர்கள் மட்டுமே கர்ப்பக்கிருகம் போன்ற புனித இடங்களுக்குள் நுழைந்து பூசை செய்ய அருகதை உடையவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 21

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் மேலும் தொடர விரும்பவில்லை. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று காலையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கு நான் மனப்பூர்வமான வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே சமயத்தில் ஆலயத்தில் தமிழ் என்பது இன்னும் உறுதி செய்யப்படுவதில் சிரமம் இருக்கிறது. நம் மக்களுக்கு, தமிழில் ஒரு வேண்டுதலைத் தெரிவித்தால் அதுபோய்ச் சேராதோ என்று நினைக்கிறார்கள். ஆகவே அதை உறுதி செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிலக் குத்தகை. குத்தகைதாரர்களுக்கு நிலத்தை உரிமையாக்குவதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். குத்தகை விவசாயிகளுடைய நீண்ட நாள் எதிர்பார்ப்பாக அது இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்.

இந்த ஆண்டு பெரிய வறட்சி நிலைமை. வறட்சியின்போது இந்த குத்தகையிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல திருக்கோயில் திருப்பணிகள். திருப்பணிகள் சம்பந்தமாக நிறைய விவரங்கள் இதிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயில்களிலுள்ள கல் வெட்டுகள். இந்தக் கல்வெட்டு ஆராய்ச்சியில் தமிழகத்திலே ஒரு பெரிய அளவிற்கு பங்களிப்பைச் செலுத்துகிறவர் மரியாதைக்குரிய அறிஞர் ஐராவதம் மகாதேவன். அவர்களுடைய முயற்சிக்கு ஊக்கம் அளிக்கிற நடவடிக்கையில் அரசு ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பழனியில் அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில் உள்ளது. அதனுடைய வருவாயைப் பயன்படுத்தி பழனியில் ஒரு நல்ல உயரிய மருத்துவமனையை ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள திருக்கோயில்களில் வருவாய் வரக்கூடிய ஆலயங்கள் உண்டு. திருப்பதி தேவஸ்தானம் ஆந்திர மாநிலத்திற்கு உதவுவதைப் போல தமிழகத்திலுள்ள இந்தத் திருக்கோயில்களுடைய வருவாயையும் தமிழக நலனுக்கு பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்



2003 ஏப்ரல் 21] [திரு. என். நன்மாறன்]

என்று கேட்டுக்கொள்கிறேன். பழனியிலே பஞ்சாமிர்தம் தயாரிக்கப்படுகிறது. அது உண்மையிலேயே தரமானது. இதை மேலும் நவீனப்படுத்தி, வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய முயற்சியில் ஈடுபடவேண்டும். பழனி திருக்கோயில் சார்பில் நடத்தப்படுகின்ற கல்லூரியில் ஆசிரியர் பணியிடங்கள், நூலகப் பணியிடம், திருக்கோயில் பணியாளர் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் அவர்கள் பெரிய கோயில்களுக்கு அடிக்கடி சென்று சோதிக்கக்கூடிய முயற்சிகளை நடத்தவேண்டும் என்பதை நான் தெரிவிக்கிறேன். அதேபோல முடி காணிக்கை செலுத்தப்படுகிறது. அதிலே ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் ஈடுபடுகிறார்கள். இதற்கு Contract விடுகிறபோது வேறு பலர் Contract எடுக்கிறார்கள். முடி சவரத் தொழிலில் ஈடுபடுகிறவர்கள் கூலிக்காரர்களாக இருக்கிறார்கள். இந்த Contract என்பது சவரத் தொழிலாளர்களுக்கு, அந்த மருத்துவ குல சமுதாயத்தினருக்கு வழங்கப்படுவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மதுரை மாரியம்மன் தெப்பக்குளம். அந்த தெப்பக்குளத்திலே தண்ணீர் நிரப்புவதற்கு உரிய ஏற்பாடு எல்லாம் நடந்தாயிற்று. மணலூரிலிருந்து தண்ணீர் தருவதற்கு மாநகராட்சியும் ஒப்புக்கொண்டது. மின் கட்டணம் செலுத்துவது அறநிலையத் துறையின் பொறுப்பு. இதுசம்பந்தமாக அனுமதி தருவது என்பது மரியாதைக்குரிய கௌரிசங்கர் அவர்களிடத்தில் இருக்கிறது. இன்னும் அனுமதி கிடைக்கவில்லை என்பதைக் குறிப்பிடுகிறார்கள். ஆகவே அந்த அனுமதி கிடைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் அனுமதி தற்சமயம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். நன்மாறன்:** மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல அங்கப்பிரதட்சண மண்டபம். அதுவும் அரசின் சார்பிலே முடிவெடுக்கப்பட்டுவிட்டது. அந்த மண்டபம் கட்டுகிற பணிகளுக்கும் அறநிலையத் துறையினுடைய அனுமதி கிடைக்கவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். அது கிடைத்துவிட்டதா, இல்லையா என்பதையும்

அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன். அந்த அனுமதி கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கன்னியாகுமரி மாவட்டம். அந்த மாவட்டத்திலே குழித்துறை தேவிகுமாரி மகளிர் கல்லூரி நடத்தப்படுகிறது அறநிலையத் துறை சார்பாக. அதற்குப் போதுமான கட்டட வசதி தேவை. புதிய பாடப் பிரிவு Micro-biology, bio-chemistry, bio-technology, M.Com., M.Sc., வணிகவியல் ஆகிய பாடப் பிரிவுகளை கல்லூரிக்குத் தந்துதவ வேண்டும். கல்லூரியில் பணிபுரியக்கூடிய தொகுப்பூதிய ஆசிரியைகளுக்கு முழு ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல குழித்துறையிலுள்ள சிவன் கோயில் யானைப் பாகனுக்கு பிற மாவட்டங்களில் யானைப் பாகனுக்கு வழங்குகிற ஊதியம் வழங்கப்படுவதில்லை. யானைக்குத் தீனி போடுவதற்கும் உரிய நிதி வழங்கப்படவில்லை என்று அறிகிறோம். ஆகவே உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம், ஆனையடியில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலம் உண்டு. அந்த நிலத்தில் மூலிகைப் பண்ணை அமைக்கவும், அதோடு இணைத்து ஒரு ஆயுர்வேத மருத்துவமனையை அமைக்கவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். கிட்டத்தட்ட 18 உதவி ஆணையர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அவை நிரப்பப்பட வேண்டும் என்பதை நான் தெரிவிக்கிறேன். குமரி மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் உள்ள 771 பணியாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் வழங்க—அந்த விகிதங்களைச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அரசு சொல்லியும்—அரசு உத்தரவிட்டும் அந்த ஊதியம் குமரி மாவட்டக் கோயில் நிர்வாகத்தினரால் வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். சி.ஐ.டி.யூ-வினுடைய மாநிலத் தலைவர் திருவட்டாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே. ஹேமசந்திரன் அவர்கள், அமைச்சர், துறைச் செயலாளர் ஆகியோருடைய கவனத்திற்கும் இதைத் கொண்டு வந்திருக்கிறார். காலம் தாழ்த்தாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.



நாகர்கோவிலில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திலே அறநிலையத் துறை அமைச்சர் அறிவித்தபடி தினக்கூலிகள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த ஆலயப் பணியாளர் சங்கத்தின் குமரி மாவட்ட ஊழியர் சங்கச் செயலாளர் திரு. சிவசங்கரன் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறார். அவருக்கு பணி வாய்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தமிழகத்திலே கண் பார்வையற்ற மக்கள் நாயனம் வாசிக்கிறார்கள்.மேளம் இவற்றிலெல்லாம் பயிற்சி அடைந்திருக்கிறார்கள். அவர்களை திருக்கோயில்களில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்"

என்று இந்த கொள்கை விளக்கக் குறிப்புத் துவங்குகிறது. ஆண்டாள் பாசுரத்தோடு துவங்கி இருக்கக்கூடிய இந்தக் குறிப்பு வருகிற ஆண்டுகளில் ஆலயங்களில் தமிழ் உறுதி செய்யப்பட வேண்டும், ஆலயப் பணியாளர்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்பட வேண்டும். காலி இடங்கள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதைக் கூறுகிறேன்.

பழனி நிர்வாகம் சம்பந்தமாக அதாவது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பழனிவேல் அவர்களே பெரிய குறிப்பு தந்திருக்கிறார்கள். அதில் உள்ள பல்வேறு அம்சங்கள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதை நான் வற்புறுத்துகிறேன். குறிப்பாக ஏற்கெனவே சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறேன். இப்போது அறங்காவலர் குழுவில் உறுப்பினர்களை நியமனம் செய்கிறபோது transparency வேண்டும். அப்போதுதான் இன்றைய காலத்திலே மேலும் மேலும் அது முன்னுக்கு வரும். எனவே அறங்காவலர் குழுத் தலைவராகவும், உறுப்பினர்களாகவும் நியமனம் செய்யப்படுவது மேலும் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் குறிப்பிடுகிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஒரு விஷயம். முடித்துவிடுகிறேன். அதுபோலவே பிரசன்னம் பார்ப்பதற்கு கோயில் நிதி 1 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக பழனிவேல் அவர்கள் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். கேரளாவிலிருந்து உன்னிகிருஷ்ணன் என்கிற ஜோதிடர் பழனிக்கு அழைத்துவரப்பட்டு பிரசன்னம் என்று கூறப்படும் குறி

சொல்லும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக திருக்கோவில். . . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசன்னம் அல்ல, அது பிரஸ்னம்.

**திரு. என். நன்மாறன்:** முதலமைச்சர் அவர்களுடைய திருத்தத்தை ஏற்கிறேன். எனக்கு வந்திருக்கிற கடிதம் அப்படி வந்திருக்கிறது. (குறுக்கீடு) அப்படியே வைத்துக்கொள்வோம். அதில் என்ன பிரச்சினை என்றால் 1 இலட்ச ரூபாய் அந்தக் குறி பார்ப்பதற்கு செலவு பண்ணியிருக்கிறார்கள். பக்தர்கள் செலுத்தக்கூடிய காணிக்கையை இதுபோல செலவழிப்பதற்கு அறநிலையத் துறைக்கு என்ன...

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்ததாகத் தாங்கள்தான் சொல்கிறீர்கள். அதிகாரபூர்வமான அறிவிப்பு இன்னும் இந்த அறநிலையத் துறைக்கு, எங்களுக்கு வரவில்லை என்பதைத் தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டு வந்திருக்கிறேன். இதன்மீது உரிய கவனம் செலுத்தி ஆய்வின் மூலம் அதனைச் சோதிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆலயத்திற்கு வரக்கூடிய வருவாய் மக்களுக்குப் பயன்படுவதற்கு மாநிலம் முழுவதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அனுமதிக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலத்தின் அருமை கருதி சில செய்திகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் 36,356 திருக்கோயில்களும், மடங்கள், மடங்களுடன் இணைந்த திருக்கோயில்கள், கட்டளைகள், அறக்கட்டளைகள், சமய அறநிறுவனங்கள் உட்பட கிட்டத்தட்ட 38,396 நிறுவனங்கள்



இருக்கின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே குறிப்பாக 10,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ள கோயில்கள் 34,421 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 10 ஆயிரம் ரூபாய்க்கு மேலே இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வரையிலும் வருமானம் உள்ள கோயில்கள் 3,975 தான். ஆகவே கிட்டத்தட்ட 34 ஆயிரத்திற்கு மேற்பட்ட கோயில்கள் வருமானம் இல்லாத கோயில்களாக இருக்கின்றன என்பது நீண்ட காலமாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்படுகின்ற செய்தி.

இந்த ஆட்சியில் மட்டுமல்ல, சென்ற ஆட்சியிலும் இதேபோலத்தான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக கோயில் மடங்களுக்கும், அறக்கட்டளைகளுக்குமாக இருக்கின்ற நிலங்களுடைய ஏக்கரின் எண்ணிக்கை 4,78,957 ஏக்கர் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. நன்செய், புன்செய், மானாவாரி நிலங்கள் குறித்த விவரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே குத்தகைதாரர்கள் 1,05,928 பேர்கள். மனைகள், கட்டடங்கள், குத்தகைதாரர்கள் 55,225 பேர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், நான் 1996 ஆம் ஆண்டு முதலே அனேகமாக அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது கடந்த 6 வருடங்களாக, இது 7-வது வருடமாக நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

இந்த நிலத்தைப் பற்றிய விவரத்தையும் மனைப் பகுதிகளான விவரத்தை பற்றியும், தொடர்ந்து நான் சில கருத்துகளைச் சொல்லி வருகிறேன். இதை நான் சொல்கிறபோதுகூட பக்தர்களுக்கும், இன்னும் ஆன்மீகவாதிகளுக்குக்கூட அதிலே உடன்பாடுகள் இல்லாமல் இருக்கிறது. நான் அதைப் புரிந்துகொள்கிறேன். குறிப்பாக, கோயில் மடம், தர்ம ஸ்தாபனங்களுடைய நிலங்கள் குத்தகைதாரர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டு உரிய முறையிலே அதற்குரிய பணத்தைப் பெற்று வங்கியிலே deposit செய்தால் கோயில்களுடைய நிர்வாகம் போன்ற எல்லாவற்றையும். மிகச் சிறப்பாகச் செய்யமுடியும் என்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லி வருகிறேன். அருகிலே இருக்கின்ற கேரள மாநிலத்திலே இது நடைமுறையிலே செய்யப்பட்டிருக்கிறது. நான் இதைச் சொல்கிறபோது பல பேர்கள் அதை எதிர்த்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்போது பேசுவதைக்கூட வெளியில் இருப்பவர்கள் கேட்டுக்கொண்டிருப்பார்கள். குறிப்பாக இந்து முன்னணியினுடைய தலைவராக இருக்கிற மரியாதைக்குரிய

ராமகோபாலன் அவர்களேகூட கடுமையாக என்னை சாடிப் பேசினார்கள். இன்னும் பல பேர்கள் சொன்னார்கள். பெயர் சிவபுண்ணியம் என்று இருக்கிறது, சிவன் சொத்திற்குக் கொலை நாசம் தேடுவதைப்போலச் சொல்கிறாரே கருத்து என்றுகூட என்னைக்கண்டித்து அவர் அறிக்கை வெளியிட்டார். நான் இதைச் சொல்கிறபோது—எனக்கு தெய்வ பக்தியின்மீது நம்பிக்கை இல்லை என்பது வேறு விஷயம். ஆனால்--பக்தி உடையவர்களை நிந்தனை செய்கிற நோக்கத்தில் என்னுடைய கருத்துகள் அமையாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

34 ஆயிரம் கோயில்களுக்கு வருமானமே இல்லை என்ற செய்தி இருக்கிறது. ஆனால் நம்மிடத்திலே இருக்கின்ற நிலமோ 4 இலட்சத்திற்கு மேற்பட்ட கிட்டத்தட்ட 5 இலட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. இந்த நிலத்தினுடைய சாதாரண மதிப்பீடு என்ற அடிப்படையிலே வைத்துப் பார்த்தால்கூட ஒரு சாதாரண வாய்க்கணக்காக பார்த்தாலே 25 ஆயிரத்திலிருந்து 30 ஆயிரம் கோடி ரூபாய் வரும். இதை விற்பனை செய்தால் கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோடி ரூபாய்க்கு உள்ள சொத்து நமது தமிழகத்திலே இருக்கிறது. ஆனால் 10 ஆயிரம் ஏக்கர் இருக்கின்ற வேதாரண்யம், வேதபுரீஸ்வரர் சுவாமி கோயிலில் ஒருகால பூஜை நடத்துவதற்கே அந்தக் கோயில் திணறுகிறது. அந்தக் கோயிலிலே விளக்கு ஏற்றுவதற்குக்கூட எண்ணெய் இல்லையென்று பல சந்தர்ப்பங்களிலே சொன்னதாக செய்திகள் இருக்கின்றன.

10 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால் ஒரு சில ஏக்கர் நிலங்களே உடைய—ஓராயிரம் ஏக்கருக்குள் இருக்கலாம் அல்லது இன்னும் கொஞ்சம்கூட குறைச்சலாக இருக்கலாம்—அந்த பழனியாண்டவர் கோயிலுக்கு பல கோடி ரூபாய் வருமானம் வருகிறது. ஆகவே தெய்வத்திலேயே வசதியான சுவாமிகள், ஏழை சுவாமிகள் என்று இருக்கின்றன. ஆகவே வசதியான சுவாமிகளுடைய வருமானத்திலிருந்து ஆயிரக்கணக்கான கோயில்களுக்கு நிதியுதவி செய்து ஒருகால பூஜை திட்டத்தை நம்முடைய அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. நான் சொல்கிற இந்த நிலையிலிருந்து பார்த்தால் இப்படி 10 ஆயிரம் ஏக்கர் இருக்கிற வேதாரண்யம் கோயிலுக்கு வருமானம் இல்லை. ஆனால் நிலம் இல்லாத சில கோயில்களுக்கு ஏராளமான வருமானம் வருகிறது. ஆகவே இந்த நிலத்திலிருந்து வருமானம் வராததைக் கணக்கிட்டு அதிலே இருக்கிற நிலைமைகளைப் புரிந்துகொண்டு அதை மாற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்



என்பது என்னுடைய பணிவான கருத்து. நம்முடைய தமிழக அரசு உயர்மட்டக் குழு என்ற ஓர் அமைப்பை, ஆன்மீகவாதிகளை மற்றவர்களையெல்லாம் கொண்டு அமைத்திருக்கின்றது. அந்தக் குழுவை பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்கான முயற்சிகளை எடுக்கச் சொல்ல வேண்டி அந்தப் பொறுப்பை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று பரிசீலிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும், உடனே விடை காணவேண்டுமென்ற அந்த அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. இதை நான் சொல்கிற அடிப்படையில் ஆழமாகப் பரிசீலித்தால் 34,000 கோயில்கள், அதிலே இருக்கிற சுவாமிகள் பட்டினியாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஒருகால பூஜைக்கே அவதிப்படுகிற கோயில்களில் நான் சொல்லுகிற திட்டத்தின் அடிப்படையில் 25 ஆயிரம், 30 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் வரும். அதை வைப்பு நிதியாக வங்கியிலே deposit செய்தால் ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே வட்டியே கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே எந்தக் கோயிலிலேயும் சிரமம் இல்லாமல், ஒரு வேளை பூஜை செய்ய வேண்டிய கோயில்களில்கூட 6 கால பூஜை செய்யக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதுபற்றி ஆன்மீகவாதிகளையும் மற்றவர்களையும் சேர்த்து இணைத்து நல்ல பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்கிறேன்.

பிற்பகல் 1-15

எனக்கு அடுத்ததாக பாரதிய ஜனதா கட்சியின் உறுப்பினர் மாண்புமிகு ராஜா அவர்கள் பேச இருக்கிறார். இந்தக் கருத்தை அவர் ஆதரிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மற்றவற்றிலே நாம் சண்டை போட்டுக்கொள்வோம். ஆகவே இந்தக் கருத்தை சிந்தனை செய்வதற்குரிய முயற்சியை அவர் எடுக்க வேண்டும் என்பதற்காக நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நீதிமன்றத்திலே வழக்குகளாக இருக்கின்றன. பல விவசாயிகள், மற்றவர்களும் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுவாமிகள் பட்டினியாக இருப்பதாகச் சொன்னார்கள். சுவாமிகள் எங்கேயும் சாப்பிடுவது இல்லை. ஆசாமிகள்தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

[2003 ஏப்ரல் 21

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். திசை திருப்பி விடுவோம் என்ற காரணத்தினாலே நான் அப்படிச் சொல்லவில்லை. ஆகவே ஆசாமிகள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், விவசாயிகளையோ, மற்றவர்களையோ நான் குறிப்பிட்டுச் சொல்வதாகத்தான் அர்த்தம். ஆனால் அந்த விவசாயி சுவாமியை ஏமாற்றிச் சாப்பிட வேண்டுமென்ற சிந்தனையில் இல்லை. ஓராண்டு வெள்ளம் வருகிறது. மறு ஆண்டு வறட்சி வந்து விடுகிறது. இன்னொரு ஆண்டு புயல் வந்து விடுகிறது. ஆகவே இயற்கையின் சீற்றத்திற்கு மாறிமாறி ஆளாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே அவர்களாலே முழுமையான அளவில் குத்தகை செலுத்த இயலவில்லை. எந்த ஆண்டு நல்ல விளைச்சல் இருக்கிறதோ அந்த ஆண்டு அந்த விவசாயி செலுத்துவதற்கு, மனமுவந்து செய்வதற்கு உரிய முயற்சியை எடுக்கிறார். அவர்களால் இயலவில்லை என்பதுதான் காரணமே தவிர, சுவாமியை ஏமாற்றுகிற நோக்கத்தில் நடைபெறுவதாக தயவுசெய்து கருதக்கூடாது. அதேநேரத்தில் இப்போது இருக்கிற இயற்கை தட்பவெப்ப சூழ்நிலைகள், தண்ணீர் இல்லாத போக்கு, இன்னும் பலவேறு காரணங்களினாலே மேலும் அது சுமையாக மாறிக் கொண்டே இருக்கும். ஆகவே இந்த அடிப்படையில் முழுமையாக மாற்றுகிறபோது அவர்களுக்கு ஒரு பொறுப்பு வருகிறது. அவர்களிடத்திலிருந்து நிதியைப் பெறுவதற்குரிய வாய்ப்பு வரும். அதன்மீது அந்தக் காரியங்களைச் செய்யலாம் என்பதற்கு மட்டும்தான் நான் இதைச் சொல்கிறேன். எனவே அதைத் திரும்பவும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதை நான் தொடர்ந்து சொல்கிறபோது சென்ற ஆட்சியாளர்கள் கூட அதை ஏற்றுக் கொண்டார்கள். ஏற்றுக் கொண்ட உடனே வெளியிலே இருந்து அதற்குக் கண்டனக் குரல் வந்த உடனே சென்ற ஆட்சியின்போது இருந்த முதலமைச்சர் அவர்களும் திரும்ப மறுத்துவிட்டார். சட்டமன்றத்தில் ஏற்றுக் கொண்டார், இது நல்ல கருத்துதான், கம்யூனிஸ்டுகள் கருத்து மட்டுமல்ல, தி.மு.க. வினுடைய கருத்தாகக்கூட நாம் அதைப் பரிசீலிப்பதற்கான முயற்சியை எடுப்போம் என்று ஒப்புக் கொண்டார். வெளியே இருந்து எதிர்ப்பு வந்ததற்குப் பின்னாலே, நான் அப்படிச் சொல்லவில்லை, நாங்கள் பொறுத்திருந்து செய்வோம் என்று மாற்றிக் கொண்டார்கள். ஆகவே இப்படியே அது நிலுவையில் செல்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேச்சை முடித்து விடுங்கள்.



2003 ஏப்ரல் 21]

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆகவே இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அப்புறம் மனைப் பகுதிகளுக்கான நியாய வார வாடகை. இது அரசாணை எண் 353-ன்கீழ் புதிய அளவிலே திரும்பவும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. 1999 ஆம் ஆண்டு கணக்கீட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. அது 27-4-2000 தேதி அன்று அந்த அரசாணையை நிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டது. அந்த அரசாணையை நிறுத்தி வைப்பதற்குக் காரணமாக இருந்தவன் நான். இந்தச் சட்டமன்றத்தில் நான்தான் பேசியிருக்கிறேன். இது அதிகமாக 50 மடங்கிலிருந்து 350 மடங்கு வரையில் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது, ஆகவே இதைப் பரிசீலனை செய்வதற்கான முயற்சிகளை நான் எடுத்தேன். அதற்குரிய விவாதத்திலே நான் பங்கெடுத்தேன். அப்படிச் சொல்கிறபோது, 10 ரூபாய் செலுத்திய மனைப் பகுதி வாடகைதாரர் கிட்டத்தட்ட 3,500, 4,000, 5,000 ரூபாய் செலுத்த வேண்டிய அவசியம் ஒரே நேரத்தில் வருகிறது. ஆண்டுக்கு ஒருமுறை வசூல் செய்த நிலையிலிருந்து மாதம் ஒரு முறை வசூலிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இந்த அரசாணை என்பது தி.மு.க. ஆட்சியில் போடப்பட்டது. இந்த அரசாணை போடப்பட்டதிலேயே முதலமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்குமே கூட நேரடியாக இந்தச் சட்டமன்றத்திலே மாற்றுக் கருத்து வந்தது. அன்றைய முதலமைச்சர் அவர்கள், சிவபுண்ணியம் பேசுகிற இந்தக் கருத்து எனக்கு உடன்பாடாக இருக்கிறது, ஆகவே, இந்த அரசாணையை நான் நிறுத்தி வைக்கிறேன் என்று இந்தச் சட்டமன்றத்திலேயே நிறுத்தி வைத்தார். இப்போது வந்திருக்கிற நீங்கள் திரும்ப அதே அரசாணையை எடுத்து, அதன்மூலம் இந்த வசூலை மேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறீர்கள். இது மிகப் பெரிய பாதிப்பை மனை வாடகைதாரர்களுக்கு ஏற்படுத்தும். ஏழையாக இருக்கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வசதிவாய்ப்பு உள்ளவர்கள், வர்த்தக நிறுவனங்கள், இப்படிப்பட்டவர்களுக்கு வாடகையை உயர்த்துவதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதனால் ஒரேயடியாக வாடகையை உயர்த்துவது என்பது மிகப் பெரிய பிரச்சினையை ஏற்படுத்தும். என்னுடைய தொகுதியில் மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயிலுக்குச் சொந்தமான இடத்திலே 100 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களை...

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இப்படி ஒரு நிர்ப்பந்தம் செய்து, அதிகாரிகள் வசூலிப்பதற்கான முயற்சிகளை எடுக்கிறார்கள். இதற்கு பெயரே 'நியாய வார வாடகை நிர்ணயம்' என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பெயர் அதற்குப் பொருத்தம் இல்லாமல் இருக்கிறது. அநியாய வார வாடகையாக இருக்கிறது. ஆகவே அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும்; இரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநியாய வாடகையை இந்த அரசு வசூல் செய்யவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, எந்த ஒரு வாடகையும் உயர்த்தப்படவில்லை; ஏற்றப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் அவர்கள் போட்ட வாடகையைத்தான் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வசூல் செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன்; பேச்சை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். 'தி.மு.க. ஆட்சியில் போடப்பட்டதுதான் இந்த அரசாணை. அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால். அதே ஆட்சியிலேதான் அது நிறுத்தி வைக்கப்பட்டது, தவறு என்று ஒப்புக்கொண்டு. ஆனால் அது தவறு என்று ஒத்துக்கொண்டு, நிறுத்தி வைக்கப்பட்ட அரசாணையை நமது அரசு ஏற்று நடைமுறைப்படுத்துகிறதே என்பதுதான் வருத்தமான செய்தி. ஆகவே அதைத் திரும்பப் பரிசீலிக்க வேண்டும். இந்த வாடகை உயர்வைக் குறைப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக....

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணையை அவர்கள் நிறுத்தி வைத்தார்களே தவிர, அரசாணையை அவர்கள் நீக்கவில்லை.



**திரு. வை. சிவபுண்ணியம்:** அவர்கள் செய்த தவறை நாமும் செய்ய வேண்டுமா? இதுதான் என்னுடைய அழுத்தமான கேள்வி. நான் தவறு என்று சுட்டிக்காட்டி, சென்ற முறை அவர்கள் ஆட்சியில் பேசியிருக்கிறேன். அதே தவறை இந்த அரசும் செய்யக்கூடாது என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், பேச்சை முடித்துவிடுங்கள். அடுத்து, திரு. எச். ராஜா.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்து விடுகிறேன், ஓரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். மன்னார்குடியைப் பொறுத்தவரையில், குறிப்பாக அங்கே தெப்பக் குளம் தூர் வாரப்பட வேண்டும் என்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் நிலுவையிலே இருக்கின்றன. அதை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எனது தொகுதியிலே பிரசித்தி பெற்ற திருவடானேசுவாமி கோயில் குடமுழுக்கு விழா நடைபெற்றிருக்கிறது. அதற்கு அருகிலே இருக்கிற பிரசித்தி பெற்ற குளத்தை தூர் வாருவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல் நமது திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறார். கோயில் மனைகளிலே குளங்கள், பண்ணைக் குட்டைகள் அமைப்பதற்கு உரிய அனுமதி வேண்டும் என்று பல இடங்களிலே கோரி வருகிறார்கள். நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் கீழ்நோக்கிச் செல்கிற காரணத்தாலே, கோயில் குளங்களையும் தூர் வார வேண்டும்; அந்தக் கோயில் நிலங்களிலே பண்ணைக் குட்டைகள், குளங்கள் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு உரிய சிந்தனையையும் இந்த அரசு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டு, எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மானியக் கோரிக்கைமீது பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக கருத்துகளை எடுத்து வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எச். ராஜா] [2003 ஏப்ரல் 21

தமிழ்நாட்டு திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாகத் திகழ்ந்து, அறநெறியையும் ஆன்மீக உணர்வையும் வளர்ப்பதோடு மட்டுமின்றி, நமது புகழ் வாய்ந்த பழைய பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் புதிய தலைமுறைகளுக்கு அறிமுகப்படுத்துவனவாகவும் இருப்பதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்துக் கோயில்களைக் காத்து, அவற்றைச் சரிவரப் பராமரிப்பதுதான் இந்து அறநிலையத் துறையினுடைய பணி. 1951-ல் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு 52 ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே இந்த 52 ஆண்டுகளிலே என்ன நிலைமை இருக்கிறது என்பதைப் பற்றி ஒரு Stock-taking-க்கான நேரமாகக்கூட நாம் இதை எடுத்துக்கொள்ள முடியும்.

பொதுவாகவே, பாரதிய ஜனதா கட்சியினுடைய கருத்து, கோயில் நிர்வாகம் தனித்து இயங்கும் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதுதான். ஏனென்றால் இந்தச் சட்டம் 1951-லே கொண்டு வந்த சமயத்திலேகூட, Justice Pathanjali Sastry அவர்கள் சொன்னார்கள் "It was not the duty of a secular state to run temples" என்று. அவருடைய கருத்தை அப்போது அவர் தெரிவித்தார். ஏனென்றால் பல்வேறு சமயங்களிலே இந்து சமய அறநிலையத் துறை என்ற ஒன்று இருக்கிறது, அது அரசாங்கத்தினுடைய கையிலே, இந்துக் கோயில்களைப் பராமரிக்கின்ற பொறுப்பு இருக்கின்ற காரணத்தாலே, எடுக்கின்ற நடவடிக்கைகளைக்கூட மதவாத நடவடிக்கையாகப் பேசப்படுகிறது, விமர்சிக்கப்படுகின்ற சூழ்நிலையைப் பார்க்க முடிகிறது. ஏனென்றால் அன்னதானத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது எதிர்ப்பு வந்தது; ஆனால் அப்போது எதிர்த்தவர்கள்—those who raised a hue and cry இப்போது அதே திட்டம், மசூதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுகிறது—இப்போது பேசவில்லை. ஆகவே இந்து என்று வந்தாலே அதை விமர்சிக்கின்ற சில pseudo-secular parties இருக்கின்ற காரணத்தாலே இதை இங்கே குறிப்பிட வேண்டிய அவசியமானது ஏற்படுகின்றது. இங்கு நான் குறிப்பிட்ட (குறுக்கீடு) அதை நான் வரவேற்கிறேன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை pseudo-secular என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** Pseude-secular is not unparliamentary. சமய நிறுவனங்களுக்கான சொத்துக்களைப் பற்றி இங்கே எனக்கு முன்பாகப்



2003 ஏப்ரல் 21] [திரு. எச். ராஜா]

பேசிய திரு. சிவபுண்ணியம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதாவது, 4,78,957 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. 20,046 கட்டடங்கள், 33,627 கிரவுண்டு மனைகள் ஆகியவை உள்ளன. இதிலே பிரச்சினை எங்கே வருகிறது? மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் இவற்றை விற்றுவிட்டு, அதைப் பணமாகப் போட்டு, வருகிற வட்டியை வைத்து கோயில்களை நடத்தலாம் என்று சொன்னார்கள். இது Real Estate Business இல்லை. இந்தச் சொத்துக்களை கோயில்களுக்கு வழங்கியவர்களுடைய உணர்வுகளை நாம் மதித்தாக வேண்டும். ஆகவே இந்து ஆலயங்களினுடைய நிலங்களிலேயிருந்து வருகின்ற குத்தகை, தொடர்ந்து குறைந்து, 17 ஆண்டுகளாகக் குத்தகை வசூல் ஆகாமலே இருந்து கொண்டிருக்கிறது. Cultivating Tenants Protection Act 1955-ன் மூலமாக கோயிலினுடைய பங்கு 60 சதவீதமாக இருந்தது. இது 1961-லே 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, பின்னர் 1972-லே 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

ஆனால் கடந்த 17 ஆண்டுகளாக குத்தகை பாக்கி இருக்கிறது. 1994-95-லே அரசாங்கமே அறிவித்துள்ள பாக்கி ரூ. 81 கோடியாக இருக்கிறது. இந்தக் கொள்கைக் குறிப்பிலே 6 வருவாய் நீதிமன்றங்கள் மற்றும் 3 அமர்வு நீதிமன்றங்கள் மூலமாக இதுவரை 10 கோடியே 44 இலட்சம் ரூபாய் வரி பாக்கி வசூலிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இடைவெளி மிகப் பெரிய அளவிலே இருந்து கொண்டிருக்கின்றது.

பிற்பகல் 1-25

அதேபோன்று இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு உட்பட்ட கோயில்கள் இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இருக்கின்றன. இதிலே 867 கோயில்கள் இந்த சமஸ்தானத்தின்கீழ் இருக்கின்றன. இந்தக் கோயில்களுக்கான நிலத்திலிருந்து அவர்களுக்கு வருகின்ற தஸ்கிட் கட்டணம் 3 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய்தான். ஆனால் நிர்வாகச் செலவுக்கு மாத்திரமே 60 இலட்சத்திற்கு மேலாக செலவாகிறது. எனவே இந்த தஸ்கிட் கட்டணத்தை புனர் நிர்ணயம் செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிலக் குத்தகை மற்றும் வாடகை பாக்கியை வசூலிப்பதற்காக Special Tribunal ஒன்று அமைத்து குறிப்பிட்ட காலவரையறைக்குள் அது வசூலிக்கப்பட வேண்டும். அப்படி குறிப்பிட்ட காலவரையறைக்குள்

வாடகை பாக்கி தராதவர்களை கோயில் சொத்துக்களிலிருந்து வெளியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேணடுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோயில் திருப்பணியைப் பொறுத்தவரையில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுவதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே பொதுமக்களுடைய பங்கேற்பினை ஊக்குவிப்பதற்காக அரசு மானியம், பொது நிதி மற்றும் திருக்கோயில் மேம்பாட்டு நிதியிலிருந்து அரசு உதவி வழங்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. பொதுமக்கள் நிதி இதிலே 75 சதவிகிதம் ஆகும். கோயிலினுடைய பொது நிதியிலிருந்து 25 சதவிகிதம் இருக்க வேண்டுமென்று கருதப்படுவதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

காரைக்குடி கொப்புடைய நாயகி அம்மன்--கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக இருக்கின்ற அந்த கொப்புடை நாயகி அம்மனுடைய-- திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்து 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஊர் மக்கள் திருப்பணிக்கு உதவத் தயாராக இருக்கிறார்கள். எனவே இந்த ஆண்டு திருப்பணிக்கு அரசு அனுமதி தந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 515 தேர்களில் 79 திருத்தேர்கள் பழுதடைந்திருக்கின்றன என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவை பழுது பார்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே விசேஷமாக ஸப்தவிடஸ்தலங்கள் என்று திருவாரூர், வேதாரண்யம், நாகப்பட்டினம், திருநள்ளாறு, திருக்காற்று இல், திருவாய்மூர், திருக்குவளை போன்ற அந்த 7 தேர்களிலே திருவாரூர் தேர் மாத்திரம் இப்போது ஓடுகிறது, மற்ற தேர்கள் பழுதடைந்து இருக்கின்றன. அவை பழுது பார்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் திருவாரூர் தேரோட்டத்தைப் பொறுத்தவரையில் வரலாற்றுப் புகழ்கொண்ட தியாகேசனின் தேரோட்டம் அந்தக் கோயிலின் ஆகம விதியின்படி ஆண்டுதோறும் பங்குனி மாதம் ஆயில்ய தினத்தன்று நடைபெறவேண்டும். ஆனால் சென்ற 7 ஆண்டுகளாக அந்த தினத்தில் நடத்தாமல் ஏதோ கண்காட்சி நடத்துவதுபோல இஷ்டப்பட்ட சமயத்திலே அறிவிக்கப்படுகிறது, நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு அது தவறிவிட்டது. அடுத்த வருகின்ற ஆண்டிலிருந்து பங்குனி மாதம் ஆயில்ய தினத்தன்று திருவாரூரிலே தேரோட்டம் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.



கிராமப்புறக் கோயில் பூசாரிகளுடைய ஓய்வூதியத் திட்டத்திலே 2000-2001-ல் 1,500 நபர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 15-3-2001-ல் அரசாணை 71 மூலமாக அது 4 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. ஆனால் 2001-2002-ல் மேலும் ஆயிரம் பேருக்கு ஓய்வூதியத் திட்டமானது விஸ்தரிக்கப்பட்டது. மொத்தம் அனுமதிக்கப்பட்ட 2500-ல், இங்கே வைக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் 2,132 பேருக்கு ஓய்வூதியத் திட்டமானது வழங்கப்படுவதாக அரசு தெரிவித்திருக்கிறது. இதை 4 ஆயிரமாக உயர்த்தி அரசு விஸ்தரித்து அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பல்வேறு கோயில் நிலங்கள் தனியார்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. அதோடு மாத்திரம் அல்லாமல் அரசாங்கம் மழைநீர் சேகரிப்பதற்காக rain water harvesting-கிற்கு பல்வேறு விதமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற சமயத்திலே திருக்கோயில் குளங்களை எல்லாம் தூர்த்து அதை shopping complex-ஆக மாற்றுகின்ற ஒரு பழக்கமானது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அருள்மிகு வடவீதி சுப்பிரமணிய சுவாமி, இடும்பன், இளையனார் மற்றும் தொண்டர் திருக்கோயில் என நான்கு திருக்கோயில்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கின்றன. அந்த நான்கிற்கும் ஒரே E.O. நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த 4 கோயில்களில் இடும்பன் கோயில் மற்றும் இளையனார் கோயில் அங்கே இல்லை; இரண்டு கோயில்களையும் காணவில்லை என புகாரே கொடுத்திருக்கிறார்கள். இடும்பன் கோயில் சர்வே எண் 138 மற்றும் 2366/1-2, வார்டு எண் 1, பிளாக் எண் 6-ல் இருக்கிறது. அது முழுவதுமாக ஆக்கிரமிக்கப்பட்டதோடு, கோயிலே இடித்து அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது. கோயில் இருந்ததற்கான trace இப்போது கிடையாது. அதேபோல இளையனார் கோயில். இரண்டு கடைகள்தான் இருக்கின்றன. ஆலயங்கள் அங்கு இல்லை. இடும்பன் கோயில் ஆக்கிரமிப்பு பற்றி புகார் செய்யப்பட்டது. அதற்காக E.O. அவர்கள் ஏற்கெனவே பதிலுரையும் தந்திருக்கிறார்கள். இதற்காக வெறும் notice மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2000-லே கொடுக்கப்பட்ட notice-க்கு இன்றுவரை எந்தவிதமான மேல் நடவடிக்கையும் இல்லை என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல சென்ற ஆண்டு அறநிலையத் துறை மானியக் கோரிக்கையிலே பேசும்போது, வடபழனியிலேயுள்ள சர்வே நம்பர் 34-ல் அருள்மிகு லிங்கேசுவரர் திருக்கோயிலில்....

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எச். ராஜா:** 1988-ல் M.M.D.A. அது திருக்குளம்தான் என்றும், யாரும் அதில் கட்டடம் கட்டக் கூடாது என்றும் ஆணை பிறப்பித்தது. 21-8-1988-ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே அறநிலையத் துறை விளம்பரமே கொடுத்திருக்கிறது. ஆனால் இப்போது அந்தக் குளம் தூர்க்கப்பட்டு அந்த இடத்திலே ஒரு wine shop-ஐக் கட்டியிருக்கிறார்கள். ஆகவே நான் இதை சென்ற ஆண்டும் அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்போது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன். இன்னமும்கூட அதே நிலை அங்கு தொடர்கிறது. 18-8-1994-ல் H.R. and C.E. துணை ஆணையர் அந்த ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு இரும்பு வேலி போட்டு, பரம்பரை அறங்காவலர் அதைப் பாதுகாக்க வேண்டுமென்று அறிவுறுத்திய பிறகும் எந்தவிதமானதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல கோயில்களுக்கு மின்சாரம் Commercial rate-லே charge செய்யப்படுகிறது. கிராமக் கோயில்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டும். மற்ற கோயில்களுக்கும் Commercial rate-ஆக இல்லாமல் domestic rate-லேயே வசூலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்களுக்கு அருகிலே மதுக் கடைகள் வருவது என்பது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. உதாரணமாக சிதம்பரத்தில் பிரதான கிழக்கு ரத வீதியிலேயே இப்போது ஒரு win shop வந்திருக்கிறது. அது 100 மீட்டருக்கு உள்ளாகவே இருக்கிறது. ஆகவே அதற்கெதிராக அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலைப் பொறுத்தவரையில் மத்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம் அதை எடுத்துக்கொள்வதற்காக முயற்சி எடுத்தபோது, மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் அதை எதிர்த்து, இப்போது வழக்கும் நீதிமன்றத்திலே இருக்கிறது. ஆனால் அங்கு கோயிலைச் சுற்றியுள்ள இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே A.S.I.-யினுடைய முக்கிய நோக்கமே -- இப்போது நீதிமன்றத் தீர்ப்பு வரட்டும்; அதைப் பற்றி பிரச்சினை இல்லை; ஆனால் நோக்கம் என்னவென்று சொன்னால்--அதைத் சுற்றியும் mining activities இருக்கக் கூடாது; Highraised structure எதுவும் வரக்கூடாது என்பதுதான் அதனுடைய நோக்கம். எனவே மாநில அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கோள்கிறேன்.

அடுத்தபடியாக ஆலயங்களின் நிர்வாகத்தைச் செம்மையாக கவனிப்பதற்காக ஆலய வழிபடுவோரைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று ஒவ்வோர் கோயிலுக்கும் நியமிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அக்குழுவானது திருக்கோயில்களில் இருக்கின்ற நகைகள், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் பட்டியலை வைத்து, அது அவர்களுடைய நிர்வாகத்தின்கீழ் இருக்கும்போதுதான் பக்தர்களுக்கு நிர்வாகத்தின்மீது நம்பிக்கை பிறக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கு தமிழ் அர்ச்சனை பற்றிச் சொன்னார்கள். பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரை தமிழிலே வழிபாடு நடத்துவதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. அதிலே நமக்கு ஒத்த கருத்து உண்டு. அதுவும், தமிழுக்கும், சமஸ்கிருதத்திற்கும் அதிலா இதிலா என்பதிலே எல்லாம் அதிகமாக பிரச்சினைகள் வராது என்று நினைக்கிறேன். ஏன் என்றால் குறளோவியமே சமஸ்கிருதத்திலே மொழி பெயர்க்கப்பட்டு இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே எந்த மொழியிலே ஆண்டவனை வணங்கினாலும் அது புரியும். தமிழிலே வணங்கினாலும் அது புரியும். ஆகவே யாருக்கும் அதிலே சந்தேகமிருக்கத் தேவையில்லை. இது தமிழா சமஸ்கிருதமா என்கிற எந்தவிதமானதொரு பிரச்சினையும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு மீண்டும் பாரதிய ஜனதா கட்சியினுடைய முக்கிய கோரிக்கையாக இருக்கின்ற இந்து ஆலயங்கள், மத நம்பிக்கை உள்ள ஆன்றோர், சான்றோர் கொண்ட தனித்தியங்கும் ஒரு வாரியத்திடம் ஒப்படைப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி அமைகிறேன் வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாளை பதிலுரை வழங்குவார்கள்.

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 22-4-2003 ஆம் நாளன்று வினாக்கள்- விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்- விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 22-4-2003 அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

22-4-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

71. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மலைப் பிரதேச) கட்டட விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 8-11-2002 ஆம் நாளிட்ட 156 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

72. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தேனி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

73. 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

74. 2001-2002 ஆம் ஆண்டிற்கான பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

75. 2001-2002 ஆம் ஆண்டிற்கான வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

76. 2001-2002 ஆம் ஆண்டிற்கான கரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*77. 2001-2002 ஆம் ஆண்டிற்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*78. 2001-2002 ஆம் ஆண்டிற்கான திண்டுக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*79. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

*159. தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)*

*160. சட்டத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)*

*161. மானியக் கோரிக்கை எண் 45-தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ, ஆங்கிலம்).*



# இணைப்பு

*(66 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 45**

**தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை**
**இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004**

**முகவுரை:**

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்"

(ஆண்டாள்—திருப்பாவை)

அதுபோல அறநிலையத் துறையானது திருக்கோயில்களின் பெருமையினைக் கருத்தில்கொண்டு திருக்கோயில்களை பேணிக்காப்பதே தனது முழு முதற் கடமையாகக் கொண்டு செயலாற்றி வருகிறது.

தமிழ்நாட்டு திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாகத் திகழ்ந்து அறநெறியையும் ஆன்மீக உணர்வையும் வளர்ப்பதோடு மட்டுமின்றி நமது புகழ் வாய்ந்த பழைய பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் புதிய தலைமுறைகளுக்கு அறிமுகப்படுத்துவனவாகவும், இசை, ஓவிய, சிற்ப, கட்டடக் கலைகளின் படைப்புக் களங்களாகவும் விளங்கி மக்கள் சமூகத்தின் ஒழுக்க நெறி பராமரிக்கப்பட சீரிய தொண்டாற்றி வருகின்றன.

இத்தகைய திருக்கோயில்களின் சொத்துக்களையும் மற்றும் ஏனைய அறநிலையங்களின் உடைமைப் பொருட்களையும் பாதுகாத்து பராமரித்து வருவதுடன், கோயில்களில் ஆகம விதிகளின்படியும், தொன்றுதொட்டு வரும் நடைமுறைகளின்படியும் வழிபாடுகளை நடத்தவும், கோயிலை நாடிவரும் இறையன்பர்களின் அடிப்படை வசதிகளை நிறைவாகச் செய்து தரவும் இந்தத் துறை முனைப்புடன் பாடுபட்டு வருகிறது.

"உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே"

எனும் புறநானூற்று வரிகட்கேற்ப தெரிவு செய்யப்பட்ட திருக்கோயில்கள் வாயிலாக இறையன்பர்களுக்கு அமுது படைக்கும் அரும்பணியையும் ஆற்றி வருகின்றது இத்துறை.

இவ்வாறு தமிழ்ச் சமுதாயத்தின் ஆன்மீகப் பண்ணைகளாக, நாகரிகக் குறியீடுகளாக, வரலாற்றுப் பெட்டகங்களாக, ஒழுக்கத்தின் தூண்டுகோல்களாக, கலை இலக்கியச் சோலைகளாக விளங்குகின்ற இந்து சமய நிறுவனங்கள் மற்றும் அவை சார்ந்த அறக்கட்டளைகளை இந்தத் துறை பாதுகாத்துப் பேணிவர உரிய திட்டங்களைத் தீட்டி செயற்பட்டு வருகிறது.

**1. அறநிலையங்களின் விவரம்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, தமிழகம் முழுவதுமுள்ள கீழ்க்கண்டவாறான இந்து சமய மற்றும் சமண சமய அறநிலையங்கள் மற்றும் இந்து அறக்கட்டளைகள் நிர்வாகத்தை மேற்பார்வை செய்து வருகிறது:—

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 36,356 |
| 2. | மடங்கள் | 56 |
| 3. | மடங்களுடன் இணைந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமண அறநிறுவனங்கள் | 17 |
| | மொத்த நிறுவனங்கள் | 38,396 |

**2. சமய நிறுவனங்களின் வகைப்பாடு:**

சமய நிறுவனங்கள், அந்நிறுவனங்களின் ஆண்டு வருவாய் அடிப்படையில், பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலில் சேராத நிறுவனங்கள் என இருவேறு வகைகளாக கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:—



| வ. எண் | வகைப்பாடு | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| I. | பட்டியலில் சேராத நிறுவனங்கள்: ரூ.10,000-க்கும் குறைவாக வருவாய் ஈட்டும் நிறுவனங்களின் எண்ணிக்கை | 34,421 |
| II. | பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள்: | |
| | (அ) வருடாந்திர வருமானம் ரூ.10,000-க்கு குறையாமலும் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 3,389 |
| | (ஆ) வருடாந்திர வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு குறையாமலும் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை. | 442 |
| | (இ) வருடாந்திர வருமானம் ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை. | 144 |
| | மொத்தம் | 38,396 |

3. <u>நிர்வாகக் கட்டமைப்பு:</u>

(அ) ஆணையாளர் இத்துறையின் ஒட்டுமொத்த நிர்வாகத்திற்கு தலைவராவார். துறையின் பொது நிர்வாகம், மேற்பார்வை மற்றும் செயல்பாடுகள் அனைத்திற்கும் இவரே பொறுப்பானவர். துறையின் தலைமையிடத்தில் ஆணையருக்கு உதவியாக கீழ்க்கண்ட அலுவலர்கள் உள்ளனர்:—

1. ஒரு கூடுதல் ஆணையர்
2. ஒரு இணை ஆணையர் (தலைமையிடம்)
3. உதவி ஆணையர் நிலையிலான ஆணையரின் நேர்முக உதவியாளர் மற்றும் உதவி ஆணையர் நிலையிலான ஒரு கூடுதல் நேர்முக உதவியாளர்.
4. ஒரு உதவி ஆணையர் (சட்ட சேர்மம்)

[2003 ஏப்ரல் 21

5. ஒரு உதவி ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) தலைமையிடம். இவர் அன்னதான திட்டப் பணிகளின் சிறப்பு அலுவலராகவும் இருந்து வருகிறார்.

மேலும் திருக்கோயிலுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களைப் பராமரிப்பது, நிர்வகிப்பது மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பெருக்குவதற்கான முறைகளை ஏற்படுத்துவதற்கு அரசுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்க ஓர் உயர்நிலைக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை ஒருங்கிணைக்க சிறப்புப் பணி அலுவலர் ஒருவர் இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ளார். இவருக்கு உதவிட மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர் ஒருவர் உள்ளார். இவர்கள் தவிர நான்கு சிறப்பு வட்டாட்சியர்களும், சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்டறிய தேவையான பணியாளர்களுடன் ஒரு சிறப்பு வட்டாட்சியரும் உள்ளனர்.

இதைத் தவிர 2002-ல் திருக்கோயிலுக்கு திருப்பணி மற்றும் குடமுழுக்குப் பணிகள் விரைவில் நடைபெறவும், நெறிமுறைப்படுத்தவும், கண்காணிக்கவும், ஆலோசனைகள் வழங்கவும் ஓர் ஆலோசனைக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளை மேற்பார்வையிடவும் மேற்கண்ட ஆலோசனைக் குழு பணிகளை ஒருங்கிணைக்கவும் இணை ஆணையர் நிலையில் ஒரு பணியிடமும் உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) மண்டலம் மற்றும் கோட்டம் வாரியாக முறையே 10 இணை ஆணையர்களும், 22 உதவி ஆணையர்களும், திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு ஓர் உதவி ஆணையரும், 9 உதவி ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) மற்றும் ஒரு துணை ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு), மேலும் இணை ஆணையர் நிலை முதல் செயல் அலுவலர் நிலை 4 வரை பல்வேறு நிலையில் 629 செயல் அலுவலர்கள் உள்ளனர். இவர்கள் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளை அமல்படுத்த உதவுகின்றனர். தவிர பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் ஒரு துணை ஆணையர் மற்றும் ஓர் உதவி ஆணையர் நிலையிலான நேர்முக உதவியாளர், இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உதவி புரிகின்றனர்.

(இ) சமய நிறுவனங்களின் நகைகள் மற்றும் பொன், வெள்ளி விலையுயர்ந்த கற்கள் போன்றவற்றை உதவி ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) அவர்தம் தொழில்நுட்பப் பணியாளர்களுடன் மதிப்பீடு செய்கின்றனர்.



2003 ஏப்ரல் 21]

(ஈ) சமய நிறுவனங்களின் திருப்பணி வேலைகளுக்கான மதிப்பீடு தயார் செய்யவும், திருப்பணி வேலைகளை மேற்பார்வையிடவும் ஆணையருக்கு உதவியாக, ஒரு கண்காணிப்புப் பொறியாளரும், ஒரு செயற் பொறியாளரும் தேவைக்குரிய தொழில்நுட்பப் பணியாளர்களும் உள்ளனர்.

(உ) இத்துறையின் வரவு-செலவுத் திட்டம் மற்றும் கணக்கு ஆகியவற்றிற்கு கருவூல கணக்குத் துறையைச் சேர்ந்த ஒரு முதுநிலை கணக்கு அலுவலரும் அவருக்கு உதவியாக உதவி கணக்கு அலுவலர் ஒருவரும் பொறுப்பு வகிக்கின்றனர்.

(ஊ) சமய நிறுவனங்களின் வரவு-செலவு கணக்குகளை சரிபார்த்து தணிக்கை செய்யும்பொருட்டு போதிய சார்நிலை அலுவலர்களுடன் அரசு நிதித் துறையிலிருந்து மாற்றுப் பணியில் தலைமைத் தணிக்கை அதிகாரி பணிபுரிந்து வருகிறார்.

(எ) இந்து சமய அறநிலையத் துறை மாநில அளவில் 10 மண்டலங்களாகவும், மற்றும் 22 கோட்டங்களாகவும் ஆட்சி எல்லை பிரிக்கப்பட்டு முறையே இணை ஆணையர்களாலும் மற்றும் உதவி ஆணையர்களாலும் கீழ்க்காணும் வகையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது:-

| வ. எண் | மண்டலங்கள் | வ. எண் | உள்ளடங்கிய கோட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | இணை ஆணையர், சென்னை. | 1. | உதவி ஆணையர் சென்னை. |
| 2. | இணை ஆணையர், வேலூர். | 2. | உதவி ஆணையர், காஞ்சிபுரம். |
| | | 3. | உதவி ஆணையர், வேலூர். |
| | | 4. | உதவி ஆணையர், திருவண்ணாமலை. |

[2003 ஏப்ரல் 21

| வ. எண் | மண்டலங்கள் | வ. எண் | உள்ளடங்கிய கோட்டங்கள் |
|---|---|---|---|
| 3. | இணை ஆணையர், சேலம். | 5. | உதவி ஆணையர், சேலம். |
| | | 6. | உதவி ஆணையர், தருமபுரி. |
| 4. | இணை ஆணையர், கோயம்புத்தூர். | 7. | உதவி ஆணையர், கோயம்புத்தூர். |
| | | 8. | உதவி ஆணையர், ஈரோடு. |
| 5. | இணை ஆணையர், தஞ்சாவூர். | 9. | உதவி ஆணையர், தஞ்சாவூர். |
| | | 10. | உதவி ஆணையர், நாகப்பட்டினம். |
| 6. | இணை ஆணையர், மயிலாடுதுறை. | 11. | உதவி ஆணையர், கும்பகோணம். |
| | | 12. | உதவி ஆணையர், கடலூர். |
| | | 13. | உதவி ஆணையர், விழுப்புரம். |
| 7. | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | 14. | உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி. |
| | | 15. | உதவி ஆணையர், அரியலூர். |
| | | 16. | உதவி ஆணையர், புதுக்கோட்டை. |
| 8. | இணை ஆணையர், மதுரை. | 17. | உதவி ஆணையர், மதுரை. |
| 9. | இணை ஆணையர், சிவகங்கை | 18. | உதவி ஆணையர், விருதுநகர். |
| | | 19. | உதவி ஆணையர், பரமக்குடி. |



2003 ஏப்ரல் 21]

| வ. எண் | மண்டலங்கள் | வ. எண் | உள்ளடங்கிய கோட்டங்கள் |
|---|---|---|---|
| 10. | இணை ஆணையர், திருநெல்வேலி. | 20. | உதவி ஆணையர், திருநெல்வேலி. |
| | | 21. | உதவி ஆணையர், தூத்துக்குடி. |
| | | 22. | உதவி ஆணையர், நாகர்கோயில். |

(ஏ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரையும் உள்ளடக்கி 52 வகைகளடங்கிய மொத்தம் 2,356 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

**4. சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் நிர்வாகம்:**

திருக்கோயில்கள் அவற்றின் முக்கியத்துவம், வருமானம், அவற்றிற்குச் சொந்தமாக உள்ள சொத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் நிலைகள் மற்றும் செயல் அலுவலர்கள் நிலை—1 முதல் நிலை—4 ஆகிய பதவி நிலைகளில் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி பதவித் தரங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | இணை ஆணையர்கள் | 8 |
| 2. | துணை ஆணையர்கள் | 12 |
| 3. | உதவி ஆணையர்கள் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை 1 | 66 |
| 5. | செயல் அலுவலர் நிலை 2 | 112 |
| 6. | செயல் அலுவலர் நிலை 3 | 250 |
| 7. | செயல் அலுவலர் நிலை 4 | 154 |
| | மொத்தம் | 629 |

[2003 ஏப்ரல் 21

**5. திருமடங்கள் நிர்வாகம்:**

திருமடங்கள் நிர்வாகம் 'ஆதீனகர்த்தர்களால்' நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தற்சமயம் 56 திருமடங்களும் அவற்றுடன் இணைந்த 19 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. திருமடங்களின் நிர்வாகம் மேலும் சிறப்புற நடைபெறவும், நிர்வாகத்தை மேம்படுத்தவும், மடங்களின் வரவு—செலவுத் திட்டங்களை பரிசீலித்து ஒப்புதல் வழங்கவும் ஆணையரின் நேர்முக உதவியாளரும் அவருக்கு உதவியாக மண்டலத் தணிக்கை அதிகாரி மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய பிரிவு ஒன்று செயல்படுகின்றது. இப்பிரிவால் திருமடங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.

**6. அறங்காவலர் நியமனம்:**

(அ) திருக்கோயில்கள் மற்றும் ஏனைய சமய நிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் விதிமுறைகளின்படி நியமிக்கப்பட்டு, நிர்வாகத்தை கவனிக்க அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அவற்றில் சில அறநிலையங்கள் பரம்பரை அறங்காவலர்களைக் கொண்டும், மற்றும் சில நிர்வாகத் திட்டங்கள் அடிப்படையிலும் குறிப்பிட்ட சமுதாயத்தினர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) பாரம்பரை அறங்காவலர்கள் நிர்வகிக்கும் திருக்கோயில்கள், கட்டளைகள், மடாதிபதிகளால் நிர்வகிக்கப்படும் மடங்கள் மற்றும் நிர்வாகம் சம்பந்தமான வழக்குகள் உள்ள திருக்கோயில்களின் வகையில் 8,633 இனங்களுக்கு பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய இயலாது. இது தவிர அறங்காவலர்கள் நியமனம் செய்ய இயன்ற திருக்கோயில்கள் 29,763 உள்ளன. இத்திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் குறித்த விவரங்கள்:—



2003 ஏப்ரல் 21]

| வ. எண் | சட்டப் பிரிவு | பரம்பரை முறை சாரா அறங்-காவலர்கள் நியமனம் செய்ய இயன்ற மொத்த திருக்-கோயில்களின் எண்ணிக்கை. | பரம்பரை முறை சாரா அறங்-காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பதவிகளில் உள்ள திருக்-கோயில்களின் எண்ணிக்கை. | பரம்பரை முறை சாரா அறங்-காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டிய திருக்-கோயில்களின்-எண்ணிக்கை. | அறங்-காவலர் நியமன அதிகாரி |
|---|---|---|---|---|---|
| 1. | 49(i) | 27199 | 814 | 2638.5 | உதவி ஆணையர் |
| 2. | 46(i) | 2175 | 171 | 2004 | இணை ஆணையர் |
| 3. | 46(ii) | 291 | 57 | 234 | ஆணையர் |
| 4. | 46(iii) | 98 | 11 | 87 | அரசு |
| | மொத்தம் | 29763 | 10.53 | 28710 | |

(இ) ஒவ்வொரு வருவாய் மாவட்ட அளவிலும், பதவி முறை ஒருங்கிணைப்பாளர் (உதவி ஆணையர்) மற்றும் ஐந்து அலுவல்சாரா உறுப்பினர்கள் கொண்ட மாவட்டக் குழு மூலம் பட்டியலில் சேராத திருக்கோயில்களுக்கும், சட்டப் பிரிவு 46(i) மற்றும் 46(ii)-ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களுக்கும், பரம்பரை முறை வழி சாரா அறங்காவலர்களை நியமனம் செய்ய தகுதியானோர் பட்டியல் தயார் செய்யும் அதிகாரம் கொண்டது. நியமன அதிகாரி மூன்று அறங்காவலர்களை நியமனம் செய்யவும், சட்டப் பிரிவு 40(iii)-ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்ய அரசுக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு அனைத்து திருக்கோயில்களுக்கும் இரு அறங்காவலர்களை நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**7. சமய நிறுவனங்களின் நில நிர்வாகம்:**

**(அ) நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்கள் விவரம்:**

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக தமிழ்நாடு முழுமையும் 4,78,957.54 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றில் நஞ்செய், புஞ்செய் மற்றும்

[2003 ஏப்ரல் 21

மானாவாரி நிலங்கள் கீழ்க்காணும் விவரப்படி அடங்கியுள்ளன:—

| நிலத்தின் தன்மை | திருக்கோயில் களுக்குச் சொந்தமானவை | | திருமடங்— களுக்குச் சொந்தமானவை | | மொத்த பரப்பளவு | |
|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர் | செண்ட் | ஏக்கர் | செண்ட் | ஏக்கர் | செண்ட் |
| நன்செய் | 1,83,859 | 58 | 21,282 | 05 | 2,05,141 | 63 |
| புன்செய் | 2,18,517 | 86 | 34,543 | 15 | 2,53,061 | 01 |
| மானாவாரி | 20,754 | 90 | — | — | 20,754 | 90 |
| மொத்தம் | 4,23,132 | 34 | 55,825 | 20 | 4,78,957 | 54 |

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1,05,928 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 20,046 கட்டடங்களும் 33,627 கிரவுண்டு மனைப் பகுதிகளும் உள்ளன. இதில் முறையே 22,776 மற்றும் 55,225 குத்தகைதாரர்களும் உள்ளனர்.

**(ஆ) வருவாய் நீதிமன்றம்:**

நிலக் குத்தகை நிலுவைத் தொகைகள் வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும், நிலுவைகளை வசூலிக்கவும், நியாய வாடகை நிர்ணயம் செய்யவும், குத்தகைதாரர்களை வெளியேற்றவும் தனித் துணை ஆட்சியர் தலைமையில் வருவாய் நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன:—

1. தஞ்சாவூர்
2. திருச்சிராப்பள்ளி
3. மயிலாடுதுறை
4. திருவாரூர்
5. கடலூர்
6. மதுரை



2003 ஏப்ரல் 21]

மேலும் கீழ்க்கண்ட இடங்களில் அமர்வு நீதிமன்றங்கள் உள்ளன:—

1. மன்னார்குடி
2. கும்பகோணம்
3. சேலம்

வருவாய் நீதிமன்றங்களில் ரூ.21.75 கோடி குத்தகை தொகை பாக்கியை உள்ளடக்கிய மொத்தம் 14,785 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 6,972 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.10.44 கோடி குத்தகைதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. ரூ.11.31 கோடி குத்தகை பாக்கி குறித்த 7,213 வழக்குகள் வருவாய் நீதி மன்றங்களில் நிலுவையில் உள்ளன. இவ்வழக்குகளை விரைவில் முடித்து குத்தகை பாக்கித் தொகையினை வசூலிக்க விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(இ) நியாய வாடகை நிர்ணயம்:**

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள், குடியிருப்புகள் மற்றும் கட்டடங்களுக்கான வாடகை குறைந்தது மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையேனும் ஆணையரால் அமைக்கப்பட்டுள்ள குழுவினால் திருத்தியமைக்கப்பட வேண்டும். அரசாணையின்படி, நிலத்தின் சந்தை மதிப்பு மற்றும் கட்டடத்தின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். 4—6—1999-ல் நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கான கணக்கீட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. அவ்வுத்தரவு 27—4—2000 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் இந்த உத்தரவு அரசால் மறுபரிசீலனை செய்யப்பட்டு, 1—11—2001 முதல் அமல்படுத்த ஆணையிடப்பட்டது. இதன் மூலம் திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் மனைகள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றிலிருந்து கூடுதல் வருவாய் பெறப்படுகிறது. அனைத்து கட்டடங்கள், மனைகள் மற்றும் குடியிருப்புகளுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**8. திருக்கோயில் திருப்பணி:**

திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டு நாம் வணங்க வேண்டும்

(பெரிய புராணம்)

[2003 ஏப்ரல் 21

தமிழ்நாட்டில் ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் பாடி போற்றப்பட்ட புகழ்மிகு புனித திருத்தலங்கள் பல உள்ளன. இவை தவிர நன்முறையில் பேணிப் பாதுகாத்து வரவேண்டிய நிலையில் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள் பல உள்ளன. இவற்றை திருப்பணி செய்வது இன்றியமையாததாகும். இத்திருப்பணிகளில் பொதுமக்கள் அளிக்கும் நன்கொடைகள் அவர்களின் ஆர்வத்தின் ஈடுபாட்டின் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. ஆகவே பொதுமக்கள் பங்கேற்பினை ஊக்குவிக்க அரசு மானியம், பொது நிதி மற்றும் திருக்கோயில் மேம்பாட்டு நிதிகளிலிருந்து அரசு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் நிதி 75 விழுக்காடும், கோயில் அல்லது பொது நிதிகளின் பங்கு 25 விழுக்காடும் இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது.

திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்தல், அவற்றிற்கு பழுதுபார்த்தல் ஆகியவை பின்வரும் நிதியாதாரங்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன:—

1. பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை
2. அந்தந்த திருக்கோயில்களின் நிதி
3. நிதிவசதி மிகுந்த திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும் உபரி நிதி
4. அரசு மானியம்
5. பொது நல நிதி
6. ஆலய மேம்பாட்டு நிதி
7. திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
8. கிராமப்புற திருக்கோயில் திருப்பணி நிதி



2003 ஏப்ரல் 21]

**திருக்கோயில் திருப்பணிகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை விவரம்:**

| ஆண்டு | திருக்கோயில்களின் எண்ணிக்கை | அனுமதி வழங்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) | அரசு நிதி (இலட்சத்தில்) | திருக்கோயில் நிதி (இலட்சத்தில்) | பொது மக்கள் நிதி |
|---|---|---|---|---|---|---|
| 2001-2002 | 28.5 | 424 | 1715.33 | 108.24 | 774.49 | 832.60 |
| 2002-2003 | 108 | 253 | 2311.03 | 216.00 | 849.16 | 1245.87 |

**(அ) பொதுமக்களின் நன்கொடை:**

சமயப் பற்றுள்ளவர்களாலும், தொழில் அதிபர்களாலும், பொறுப்பாட்சி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களும் தாமாக மனமுவந்து அளிக்கப்படும தொகை அல்லது பொருட்களைக் கொண்டு திருப்பணி மேற்கொள்ளுதல்.

**(ஆ) உபரி நிதி மிகுந்த திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும் நிதி:**

நிதி வசதி குறைந்த, தேவையுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டப் பிரிவு 36—ன்கீழ் ஆணையரின் அனுமதியுடன் வசதிமிகு திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும் உபரி நிதி மூலம் திருப்பணிகள் செய்யப்படுகின்றன.

**(இ) அரசு மானியம்:**

ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும் பழுது பார்ப்பதற்காகவும் அரசு மானியமாக இத்துறை வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கை மூலம் அரசு மானியம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.75 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர இத்துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொளளும் பொருட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்படி 50 திருக்கோயில்களின் திருப்பணிக்கு அரசு மானியம் மூலம் ரூ.12.50 இலட்சம் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 50 திருக்கோயில்களுக்கு ரூ.12.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**(ஈ) பொது நல நிதி:**

சமய நிறுவனங்களால் அல்லது தனி ஒருவரால் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு பொது நல நிதி ஒன்று ஏற்படுத்த ஆணையருக்கு தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டப் பிரிவு 97 வழிவகை செய்துள்ளது. இந்நிதி திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், பேணிக் காத்தலுக்கும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 2002-2003 ஆம் ஆண்டில் 24 திருக்கோயில்களுக்கு ரூ.41.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**(உ) ஆலய மேம்பாட்டு நிதி:**

வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி பெறப்பட்டு இவ்வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இவ்வைப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையினைக் கொண்டு அரசின் முன் அனுமதி பெற்று பழமை வாய்ந்ததும், சரித்திர முக்கியத்துவம் பெற்றதும், பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப் பெற்றதுமான திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்நிதி ஆணையரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 3 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.11.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஒருகால பூஜை வைப்பு நிதி திட்டத்திற்கு இந்நிதியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1,200 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**(ஊ) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி:**

(i) நமது கலாச்சார மரபுரிமையைக் கட்டிக்காக்க வேண்டும் என்னும் நோக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது சொந்த நிதியிலிருந்து ரூ.1,08,000-ஐ அளித்து "முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியை 5—8—1991-ல் உருவாக்கினார்கள். மேலும் இந்நிதிக்குத் தொண்டுள்ளம் கொண்ட நன்கொடையாளர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும்





நன்கொடைகள் பெறப்பட்டன. பின்பு இந்நிதி "திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ii) ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற, நாயன்மார்களால் பாடப் பெற்ற வரலாற்றுப் பெருமை வாய்ந்த, தொன்மையான கலைச் சிறப்புகள் மிக்க திருக்கோயில்களின் திருப்பணிக்கு இந்நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. 2001-2002ஆம் ஆண்டு 4 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.43.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2002-2003ஆம் ஆண்டு 3 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ.50.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(iii) மேலும் ஒருகால பூஜை வைப்பு நிதி ஏற்படுத்த திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1,300 வீதம் இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

(iv) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக இந்நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து ஆண்டு தோறும் ரூ.14 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

(v) மேலும் இத்துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்காக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 50 திருக்கோயில்களின் திருப்பணிக்கு மொத்தம் ரூ.12.50 இலட்சம் வழங்கப்படுகிறது. 2002—2003ஆம் ஆண்டிற்கு ரூ.12.50 இலட்சம் 50 திருக்கோயில்களின் திருப்பணிக்காக வழங்கப்பட்டுள்ளது.

**9. துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட பகுதியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்குதல்:**

இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 100 திருக்கோயில்களுக்கு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை 500 திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் 2002-2003-க்கு 100 திருக்கோயில்களுக்கு நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 21

**10. கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணித் திட்டம்:**

தமிழ்நாட்டிலுள்ள இத்துறை ஆளுகையின்கீழ் உள்ள கிராமப்புறப் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. பழனி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் 2 கோடி முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்தொகை வழங்கப்படுகிறது. 2002—2003 ஆம் ஆண்டுக்கு 100 திருக்கோயில்களுக்கு ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**11. திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் செய்தல்:**

1. ஆகம விதிகளின்படி ஒவ்வொரு திருக்கோயிலிலும் 12 ஆண்டுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும். பொதுவாக திருக்கோயில்கள் கீழ்க்கண்டவாறு மூன்று வகையாக பிரிக்கப்பட்டு திருப்பணிகள் நடத்தப்படுகின்றன:

(அ) ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடல் பெற்ற திருக்கோயில்கள்.

(ஆ) சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.

(இ) உடனடியாக திருப்பணி செய்ய வேண்டியதும், ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகளுக்குள் கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய திருக்கோயில்கள். (இதுதவிர அஷ்டபந்தன மருந்தின்றி உள்ள மூலஸ்தான மூர்த்திகளுக்கு உடனடியாக மருந்து சாத்தப்பட்டு அபிஷேகம் செய்து சிறிய அளவில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்தல்)

2. தமிழகத்தில் நாயன்மார்களால் பாடல் பெற்ற திருக்கோயில்களும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்களும் பழமையான மற்றும் பெரிய திருக்கோயில்களும் பெருமளவில் உள்ளன. தவிர தமிழ்நாட்டில் கலை மற்றும் கலாச்சாரப் பெட்டகமாக விளங்கும் மேற்கண்ட பழமையான திருக்கோயில்களில் திருப்பணி செய்ய வேண்டிய அனைத்தையும் வருகின்ற மூன்றாண்டுகளுக்குள் செய்து குடமுழுக்கு நடத்திடும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2003 ஏப்ரல் 21]

2002-2003 ஆம் ஆண்டில் 967 திருக்கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

**12. திருக்கோயில் திருக்குளங்கள் திருப்பணி:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களில் 534 திருக்குளங்கள் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளன. மேற்படி திருக்குளங்களில் தெப்பத் திருவிழா நடத்துவதற்கும் மற்றும் வறட்சியை எதிர்கொள்ளவும் இவற்றைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும். இத்திருக்குளங்களைப் புதுப்பித்தல் மற்றும் பேணுதலை கீழ்க்கண்ட வழிகளில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது:—

(i) திருக்குளங்களில் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

(ii) திருக்குளங்களைச் சுற்றி வேலி அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்

(iii) தூர் எடுத்தல்

(iv) திருக்குளங்களுக்கு மழைநீர் வருவதற்கு வழி ஏற்படுத்தி மழைநீர் சேகரித்தல்.

(v) திருக்குளங்களில் உள்ள படிகளைப் பழுதுபார்த்தல்.

2002-2003 ஆம் ஆண்டு 228 திருக்குளங்கள் பழுது பார்க்கப்பட்டன. மேலும் இதர திருக்குளங்களை பழுதுபார்க்கவும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**13. திருத்தேர்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்:**

(அ) திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 515 மரத்தேர்கள் உள்ளன. அவற்றில் 79 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளன. அவற்றைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருத்தேர்களை பாதுகாக்கும் பொருட்டு தீப்பிடிக்காத தகடுகளால் கூரை, இரும்பு அச்சு மற்றும் சக்கரம், பழுதுபார்த்து பராமரிப்பு ஏற்பாடுகள் செய்யவும், திருத்தேர்களின் மதிப்பிற்குரிய காப்பீடுகள் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருத்தேர் திருப்பணிகளில் பொதுமக்கள் பங்கேற்கச் செய்யும் வகையில் பொதுமக்கள் நன்கொடை மற்றும்

உபயம் மூலம் திருத்தேர் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 44 திருக்கோயில்களின் திருத்தேர்கள் பழுது நீக்கப்பட்டு திருத்தேர் திருவிழா நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் 10 திருக்கோயில்களின் திருத்தேர்கள் பழுது பார்க்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதில் ஒரு திருத்தேர் திருப்பணி முடிந்தும், மற்ற 4 திருக்கோயில்களில் பணி நடைபெற்று வருகிறது. எஞ்சியுள்ள 5 திருக்கோயில்களில் திருத்தேர் திருப்பணிக்கு பொதுமக்களிடம் நன்கொடை பெறப்படாத காரணத்தாலும், அத்திருக்கோயில்களில் நிதிவசதி இல்லாத காரணத்தாலும் பணிகள் தொடங்கப்படவில்லை. பொதுமக்களின் நன்கொடை மற்றும் உபரி நிதி மூலம் திருத்தேர்களைச் செப்பனிடும் பணி விரைவுபடுத்தப்படும்.

(இ) சிவகங்கை மாவட்டம், கண்டதேவி அருள்மிகு சொர்ணமுக்தீஸ்வரர் என்கிற சிறகிலிநாத சுவாமி திருக்கோயிலின் தேரோட்டம் 1998 முதல் 2001 வரை நடைபெற இயலாத நிலை இருந்து வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், இத்துறையின் முழு முயற்சியாலும், மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் பல்வேறு சமூகத்தினரையும் அழைத்துப் பேசியதன் விளைவாகவும், கடந்த 24—6—2002 அன்று தேரோட்டம் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது.

**14. பக்தர்களுக்கு வசதிகள்:**

**(அ) திருக்கோயில்களில் குடிநீர் வசதி:**

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் திருக்கோயில்களில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 1060 திருக்கோயில்களில் இவ்வசதி செயயப்பட்டுள்ளது.



**(ஆ) கழிப்பிட வசதி:**

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகள் பயன்படுத்தும் வண்ணம் நவீன கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கவும், ஆண்கள், பெண்களுக்கெனத் தனித்தனியாக மேற்படி வசதிகளைச் செய்து கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்படி 187 திருக்கோயில்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

**(இ) குடில்கள், அறைகள், பொருள் பாதுகாப்பு அறை வசதிகள்:**

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகளின் தேவைக்கேற்ப போதிய அளவில் தங்குவதற்குத் தேவையான குடில்கள், அறைகள் மற்றும் பொருள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிட வசதிகள் செய்துதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**15. ஒருகால பூஜைத் திட்டம்:**

ஒருகால பூஜை முறையாக நடத்திட இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜையினை முறைப்படி நடத்திட இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பொதுமக்களை ஈடுபடுத்தும் நோக்கில் பொதுமக்கள் நன்கொடையாக ரூ.2500/— ஒரு திருக்கோயிலுக்கு அளித்தால், நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/-மும், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/-மும், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/-ம் வழங்கி அத்திருக்கோயிலின் பெயரில் ரூ.25,000/- நிரந்தர முதலீடு செய்யப்படும். அம்முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து நாள்தோறும் ஒருகால பூஜை நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி மார்ச் 2002 வரை 9242 திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. ஒருகால பூஜை நடத்த இயலாமல் உள்ள திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு அத்தகைய அனைத்து திருக்கோயில்களிலும் ஒருகால பூஜை நடத்தப்பட வேண்டும் என இவ்வரசு முடிவு செய்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 460 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

**16. உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு:**

(1) திருக்கோயில்களில் திருட்டு நடைபெறாமல் தடுக்கும் வண்ணம் இயன்ற அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு

எடுத்துள்ளது. திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகள், நேரம் அறிவிப்பு கடிகாரம், தொட்டிப் பூட்டுகள், இரும்புக் கதவுகள் முதலியன நிறுவுதல், இரவுக் காவலர்கள் நியமனம், முன்னாள் இராணுவ வீரர் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்களை திருக்கோயில் பாதுகாப்புப் படை மூலம் நியமித்தல், உலோகத் திருமேனி மையங்கள் ஏற்படுத்துதல், கிராமப்புற விழிப்புக் குழு ஏற்படுத்துதல் போன்ற முன்னேற்பாடுகள் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உள்ளூர் காவல் துறை மற்றும் சிலைகள் பாதுகாப்புப் பிரிவு திருக்கோயில்களில் நிகழும் களவுகளைக் கண்டறியும் பொறுப்பில் உள்ளனர். இத்துறை கீழ்க்கண்ட இடங்களில் உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்களை ஏற்படுத்தி பேணி வருகின்றது:—

1. திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் வளாகம்) திருவாரூர்.
2. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.
3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
4. அருள்மிகு காந்திமதி உடனுறை நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.
5. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம்.

உலோகத் திருமேனிகளின் பாதுகாப்பு மையங்களில் 3088 உலோகத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் பாதுகாப்பு மையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 17. திருக்கோயில் பாதுகாப்புப் படை:

மாநிலம் முழுவதுமுள்ள திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகள், நகைகள், உண்டியல்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களின் பாதுகாப்பிற்காக திருக்கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இதில் 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் 3000 முன்னாள் இராணுவத்தினரை நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டது. காவல் துறையினரால் 1000 இரண்டாம் நிலைக் காவலர்களும், 2778 முன்னாள் இராணுவத்தினர்களும் நியமனம்



செய்யப்பட்டு அவர்கள் உள்ளூர் காவல் நிலையத்துடன் இணைக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இதுவரையிலும் 2751 திருக்கோயில்களில் பாதுகாப்புப் படையினர் பணியில் உள்ளனர்.

## 18. கருணை இல்லம்:

ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், கல்வி முதலியன அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இயங்கும், திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் துவங்கப்பட்டன. இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 37 திருக்கோயில்களில் 42 கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. அவற்றில் 893 சிறுவர்களும், 461 சிறுமியர்களும் ஆக மொத்தம் 1354 சிறார்கள் பயன்பெற்று வருகின்றனர். இக்கருணை இல்லங்களுக்கான செலவில் 50 விழுக்காடு அந்தந்த திருக்கோயில் நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. எஞ்சிய 50 விழுக்காடு நிதியுதவியை சமூக நலத் துறை வழங்குகின்றது. கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட அரசு மானியம் விவரம்.

| ஆண்டு | அரசு மானியம் |
| --- | --- |
| 1998—1999 | ரூ.43,39,255 |
| 1999—2000 | ரூ.46,97,027 |
| 2000—2001 | ரூ.50,74,487 |
| 2001—2002 | ரூ.46,96,000 |

2002-2003 ஆம் ஆண்டு ரூ.43.93 இலட்சம் அரசு, மானியமாக வழங்கியுள்ளது.

## 19. திருக்கோயில்களால் நடத்தப்படும் கல்வி மற்றும் பிற நிறுவனங்கள்:

திருக்கோயில்கள் சமூக நோக்கோடு, சமயம் மற்றும் பொதுக் கல்வித் தொடர்பான பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பாடசாலைகளைப் பேணி வருகின்றன. அவற்றின் விவரம் கீழ்வருமாறு:—

### அ) கல்வி நிறுவனங்கள்

1. கல்லூரிகள்
2. தொழில்நுட்பப் பயிலகங்கள்

| | | |
|---|---|---|
| 3. | மேல்நிலைப் பள்ளிகள் | 12 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 10 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் | 3 |
| 6. | ஆரம்பப் பள்ளிகள் | 10 |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 8. | நாதசுரம் மற்றும் தவில் பயிற்சிப் பள்ளிகள் | 4 |
| 9. | வேத ஆகம பாடசாலைகள் | 4 |
| 10. | தேவாரப் பாடசாலைகள் | 2 |
| 11. | திவ்யபிரபந்த பாடசாலைகள் | 3 |
| 12. | காது கேளாதோர் — பேச இயலாதோர் பள்ளி | 1 |

**(ஆ) சமூக நல நிறுவனங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | சித்த வைத்தியசாலைகள் | 9 |
| 2. | ஆங்கில மருத்துவமனைகள் | 2 |
| 3. | கருணை இல்லங்கள் | 42 |
| 4. | முதியோர் இல்லங்கள் | 3 |
| | மொத்த நிறுவனங்கள் | 113 |

**20. இலவசத் திருமணம்:**

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு வசதிமிக்க திருக்கோயில்கள் சார்பாக இலவசத் திருமணங்கள் நடத்திட திட்டம் ஒன்று செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் திருமணம் ஒன்றுக்கு ரூ.4500/- செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆண்டுதோறும் இலவசத் திருமணங்கள் நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வருகின்றன.





ஆண்டுதோறும் நிதிவசதிமிக்க ஒவ்வொரு திருக்கோயில்களிலும் தனித்தனியே நடத்தப்பட்டு வந்த இலவசத் திருமணங்கள் 14-7-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக ஒரே இடத்தில் முதன் முறையாக 1008 இணைகளுக்கு இலவசத் திருமணங்கள் நடத்தப்பட்டன. இத்திருமணத்தில் 662 இணைகள் ஆதிதிராவிடர் வகுப்பினரும், 67 இணைகள் பழங்குடி இனத்தவரும், 114 இணைகள் மிகவும் பிற்படுத்தப்பட்டவரும், 160 இணைகள் பிற்படுத்தப்பட்டவர்களும், 5 இணைகள் இதர வகுப்பினரும் பயனடைந்தனர்.

2002-2003 ஆம் ஆண்டில் மேலும் 21-2-2003 அன்று திருச்சிராப்பள்ளியில் 27 இணைகளுக்கும், 5-3-2003-ல் திருநெல்வேலி மண்டலத்தில் அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் 108 இணைகளுக்கும், சிவகங்கை மண்டலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலில் 108 இணைகளுக்கும் இலவசத் திருமணங்கள் நடைபெற்றுள்ளன. சேலம் மண்டலத்தில் 169 இணைகளுக்கு 30-03-2003 அன்று சேலம் நகரில் இலவசத் திருமணம் நடத்திவைக்கப்பட்டது. மேலும் ஏழு இணைகளுக்கு திருச்சிராப்பள்ளியில் இலவசத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

**21. அன்னதானத் திட்டம்:**

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி

(திருமந்திரம்)

2002-2003 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின்போது மேதகு ஆளுநர் அவர்களால் அறிவிக்கப்பட்டதையடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23-3-2002 அன்று துவக்கி வைக்கப்பட்டது. முதற்கட்டமாக 63 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் தற்போது விரிவுபடுத்தப்பட்டு மொத்தம் 144 திருக்கோயில்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

[2003 ஏப்ரல் 21

அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்கள் அனைத்திலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை மாணவர்களுக்கு கற்றறிந்தோரைக் கொண்டு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக மாணவர்களுக்கு "நீதிபோதனை" என்ற நூலில் இருந்து ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

அன்னதானத் திட்டம் திருக்கோயில்களில் தொடர்ந்து நடைபெறும் பொருட்டு நன்கொடையாளர்களிடம் இருந்து ரூ.15,000/— கட்டளை முதலீடுகள் பெற்று அதனை தனியாக வைப்பு நிதி ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு நன்கொடையாளர்கள் விரும்பும் வருடத்தில் ஏதாவது ஒரு நாள் அன்னதான செலவுக்கு ஈடுசெய்யும் வகையில் திட்டம் ஏற்படுத்தப்பட்டு கட்டளை முதலீடுகள் பெறப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ.1,79,90,456/- மதிப்பிற்கு 813 கட்டளை முதலீடுகள் பெறப்பட்டுள்ளன.

ஆணையர் பதவி பெயரில் ரூ.20 கோடி அன்னதானத் திட்ட வைப்பு நிதி ஏற்படுத்தவும் இந்த வைப்பு நிதியிலிருந்து நிதிப் பற்றாக்குறை உள்ள திருக்கோயில்களுக்கு நிதியுதவி செய்யத்தக்க வகையிலும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை அன்னதானத் திட்டத்தில் 54,04,681 நபர்களும், ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள் மூலம் 1,79,481 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

**22. தமிழில் வழிபாடு:**

திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை நெறிப்படுத்துவதற்கு தக்க ஆலோசனை வழங்க சைவ, வைணவ ஆன்மீகப் பெரியோர்களையும், தமிழில் புலமை பெற்ற பெருமக்களையும் உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு தமிழில் கீழ்க்கண்ட அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன:—

***108 போற்றி நூல்கள்***

1. அருள்மிகு விநாயகர் போற்றி
2. அருள்மிகு முருகவேல் போற்றி
3. அருள்மிகு சிவன் போற்றி
4. அருள்மிகு திருமால் போற்றி



5. அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி
6. அருள்மிகு நடராஜர் போற்றி
7. அருள்மிகு உமையம்மை போற்றி
8. அருள்மிகு கோதண்டராமர் போற்றி
9. அருள்மிகு தாயார் போற்றி
10. அருள்மிகு துர்க்கை அம்மன் போற்றி
11. அருள்மிகு காளியம்மன் போற்றி
12. அருள்மிகு மாரியம்மன் போற்றி
13. அருள்மிகு அனுமன் போற்றி
14. அருள்மிகு நவகோள்கள் போற்றி

***1008 போற்றி நூல்***

அருள்மிகு விநாயகர் போற்றி. (அருள்மிகு விநாயகர் 1008 போற்றி புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது)

**23. சேக்கிழார் விழா:**

தெய்வப் புலவர் சேக்கிழார் விழா ஆண்டுதோறும் நடைபெற ஏதுவாக ரூபாய் ஐந்து இலட்சம் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து மூலதனம் ஏற்படுத்தப்பட்டது. அம்முதலீட்டிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகையைக் கொண்டு சேக்கிழார் விழா ஆண்டுதோறும் சேக்கிழார் பிறந்த நாளன்று சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது.

**24. திருஞானசம்பந்தர் இசை விழா:**

சமயக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் பெருமகனாரைப் போற்றும் வகையில் "திருஞானசம்பந்தர் இசை விழா" இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இவ்விழாவிற்கான செலவுத் தொகை "ஆணையர் பொது நல நிதியிலிருந்து" வழங்கப்பட்டு வருகிறது.

[2003 ஏப்ரல் 21

**25. அவ்வை விழா:**

அருள்மிகு அவ்வையார் சன்னதி உள்ள விஸ்வநாத சுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாபட்டினம் கிராமத்தில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ளன. மேற்படி கிராமத்தில் அவ்வை விழா அரசு விழாவாக நடத்த இத்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**26. பழனியில் தொங்கு உந்து ஊர்தி (கேபிள் கார்) அமைத்தல்:**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகளின் நீண்டநாள் கோரிக்கையான தொங்கு உந்து ஊர்தி அமைத்தல் பணியினை நிறைவேற்ற இவ்வரசு நடவடிக்கை எடுத்து தொங்கு உந்து ஊர்தித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டப்பணி 07—03—2003 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

**27. பழனியில் கிரிவலப் பாதை அமைத்தல்:**

திருவண்ணாமலை திருக்கோயிலில் உள்ளதைப் போலவே, பழனி திருக்கோயிலிலும் சேவார்த்திகளின் புனித கடப்பாட்டினை நிறைவேற்ற, நீண்டநாளைய விருப்பத்திற்கேற்ப கிரிவலப் பாதை அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

**28. பெண் செயல் அலுவலர்கள்:**

திருக்கோயில்களில் பெண்களை செயல் அலுவலர்களாக நியமிப்பதைத் தவிர்த்திடும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சார்நிலைப் பணிகள் விதிகளில் தக்க திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இத்திருத்த விதிகளின்படி இதுவரையிலும் பெண்கள் செயல் அலுவலர்களாக நியமனம் செய்யப்படவில்லை. தற்போதுள்ள மாறிய சூழ்நிலைக்கேற்ப பெண்களை செயல் அலுவலர்களாக நியமிப்பதைத் தவிர்த்திட தெரிவிக்கப்பட்ட காரணங்களை விரிவாகப் பரிசீலித்து அவை வழக்கற்றுப் போனவை என்ற நிலையில் பெண்களை செயல் அலுவலர்களாக திருக்கோயில்களில் நியமிக்க இவ்வரசு முடிவுசெய்து, சம்பந்தப்பட்ட விதிகளுக்கு திருத்தமும் செய்துள்ளது. இத்திருத்தத்திற்குப்பின் உதவி ஆணையர் நிலையில் ஒருவரும், துணை ஆணையர் நிலையில் மூன்று



2003 ஏப்ரல் 21]

மகளிரும் செயல் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24 பெண் செயல் அலுவலர்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

**29. தலவரலாறு மற்றும் தலபுராணம்:**

திருக்கோயில்களின் சிறப்புகள், பெருமைகள், வரலாற்று முக்கியத்துவங்கள், கல்வெட்டுச் செய்திகள் மற்றும் புராண வரலாறுகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் திருக்கோயில்களின் தலவரலாறுகள் மற்றும் தலபுராணங்கள் வெளியிடப்படுகின்றன. இதுவரை 1960 தலவரலாறுகளும், 9 தலபுராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் மற்றும் 2 கலம்பக நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் தலவரலாறு மற்றும் தலபுராண நூல்களை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டு 150 தலவரலாறுகள் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்டம்தோறும் முக்கிய திருக்கோயில் விவரம் அறிய பயணியர் கையேடு வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**30. "திருக்கோயில்" இதழ் வெளியிடுதல்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம் "திருக்கோயில்" என்ற பெயருடைய தமிழ்த் திங்கள் இதழ் 1958-ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் இந்து சமயம், திருக்கோயில்கள் மற்றும் ஆன்மீகம் குறித்து கட்டுரைகள் சிறந்த அறிஞர் பெருமக்கள் மற்றும் கற்றறிந்தோரால் எழுதப்பட்டு அனைவரும் பயன்பெறும் வகையில் வெளியிடப்படுகிறது. இவ்விதழுக்கான ஆண்டுச் சந்தா ரூ.75/—, ஆயுள் சந்தா ரூ.1000/— ஆகும். தற்போது 4000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன.

**31. பட்டயப் பொறியாளர் அங்கீகாரம்:**

திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்திட மதிப்பீடுகள் தயாரித்தளிப்பதில் தொய்வு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றில் பணியாற்றி ஓய்வுபெற்ற பொறியாளர்கள் பட்டயப் பொறியாளர்கள் என அங்கீகாரம் செய்யப்படுகின்றனர். இத்துறை மூலம் அங்கீகாரம் அளிக்கப்படும் பட்டயப் பொறியாளர்கள் திருக்கோயிலுக்குத் தேவையான மதிப்பீடுகள் தயாரித்து அளிப்பதை அங்கீகாரம் செய்திட

[2003 ஏப்ரல் 21

வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுவரை 73 பட்டயப் பொறியாளர்கள் அங்கீகாரம் பெற்றுள்ளனர்.

**32. ஸ்தபதிகள் அங்கீகாரம்:**

திருக்கோயில்களில் திருப்பணி செய்யப்படும்போது திருக்கோயில் அமைப்பு முறை, ஆகம சாஸ்திரங்களின்படியும், கலை நுணுக்கம் உள்ள வேலைப்பாடுகளுடனும் செய்திட ஸ்தபதிகள் உதவிபுரிகின்றனர். கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் ஸ்தபதி ஆலோசகர் நியமிக்கப்பட்டு மேற்கூறியவை பரிசீலிக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகின்றன. மதிப்பீடு தயாரிப்பதில் உதவி புரிய ஏதுவாகச் சிற்பக் கலையில் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பெற்றவர்களையும், வழிவழியாக இத்தொழிலில் ஈடுபட்டு அதன் வாயிலாக கற்றறிந்தோர்களையும், ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்து திருப்பணி வேலைகளை ஊக்கப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**33. ஸ்தபதிகள் நியமனம்:**

திருக்கோயில்களில் ஆகம சாஸ்திரங்களின்படி திருப்பணி வேலைகளைச் செய்து முடிக்கும் பொருட்டு கீழ்க்காணும் ஐந்து மண்டலங்களில் ஸ்தபதிகளை நியமனம் செய்ய அரசு முடிவெடுத்தது. ஸ்தபதிகளுக்கு தொகுப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/— வழங்கப்படும். இச்சம்பளச் செலவு நிதிவசதிமிக்க கீழ்க்காணும் திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும். துவக்கத்தில் இப்பணியிடம் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டு தற்போது செயல்படுத்தப்படுகிறது.

| வ. எண். | தலைமை—யிடம் | இணை ஆணையர் பிரிவு | சம்பளம் வழங்கும் திருக்கோயில் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 1. சென்னை | 1. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| | | 2. வேலூர் | 2. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு |



2003 ஏப்ரல் 21]

| | | | |
|---|---|---|---|
| 2. | மதுரை | 1. மதுரை | 1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர், திருக்கோயில், மதுரை |
| | | 2. சிவகங்கை | 2. அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், இராமேசுவரம் |
| | | | 3. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி |
| 3. | திருச்சிராப்—பள்ளி | 1. திருச்சிராப்—பள்ளி | 1. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் |
| | | 2. தஞ்சாவூர் | 2. அருள்மிகு அரங்கநாதசாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் |
| | | 3. மயிலாடு—துறை | |
| 4. | கோயம்—புத்தூர் | கோயம்—புத்தூர் | 1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மருதமலை |
| | | | 2. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி |
| 5. | திருநெல்—வேலி | திருநெல்—வேலி | 1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் |
| | | | 2. அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில் |

[2003 ஏப்ரல் 21

**34. சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து:**

வசதியுடைய திருக்கோயில்களில் ஆண்டுதோறும் சுதந்திரத் திருநாள் மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத் தாழ்வு இன்றி பங்குபெறும் வகையில் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது. 2002—2003 ஆம் ஆண்டில் 529 திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப்பட்டது.

**35. புத்தொளிப் பயிற்சித் திட்டம்:**

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள் மற்றும் ஓதுவார்கள் ஆகியோர்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்ய ஏதுவாக 1991 ஆம் ஆண்டு "புத்தொளிப் பயிற்சித் திட்டம்" தொடங்கப்பட்டு செம்மையுடன் நடைபெற்று வந்தது. கடந்த ஆண்டுகளில் தொய்வு ஏற்பட்டதை நிவர்த்தி செய்து இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்க முடிவு செய்யப்பட்டது. புத்தொளிப் பயிற்சித் திட்டம் ஒவ்வொரு உதவி ஆணையர் பிரிவிலும் முக்கியத் திருக்கோயில்களைத் தெரிவு செய்து நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2002—2003 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 3 மாத புத்தொளிப் பயிற்சித் திட்டம், 74 திருக்கோயில்களில் அளிக்கப்பட்டது.

**36. திருக்கோயில்களில் நாதசுர இசைப் பணியாளர்கள் நியமனம்:**

நிதிவசதி இல்லாத காரணத்தால் நாதசுர இசை பல பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வரலாற்றுப் புகழ் வாய்ந்த பழமையான திருக்கோயில்களில் கால பூஜை மற்றும் திருவிழாக்களின்போது இசைக்கப்படுவது குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு நாதசுரம், தவில் மற்றும் தாள இசைக் கலைஞர்களை நியமனம் செய்து முறையே ரூ.1,500/-, ரூ.1,000/- மற்றும் ரூ.750/- வீதம் மாத ஊதியம் துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூபாய் ஒரு கோடி மூலதனம் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் மாத ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 21]

**37. தமிழ்ப் புலவர்கள் நியமனம்:**

நிதிவசதி மிக்க திருக்கோயில்களில் திருமுறை, திவ்யபிரபந்தங்கள் பாடுதல், முற்றோதல் செய்தல், சொற்பொழிவுகள் செய்தல், சமயக் கருத்துகளைப் பரப்புதல், தலவரலாறு, தலபுராணம் வெளியிட நடவடிக்கை எடுத்தல் மற்றும் நூல் நிலையம் பராமரித்தல் ஆகிய பணிகளுக்காக 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அப்புலவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/- ஊதியமாக சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**38. திருக்கோயில் பணியாளர்கள்:**

தமிழ்நாடு முழுவதும் உள்ள இந்து சமய அறநிலையங்களில் 37,819 முழு நேரப் பணியாளர்கள் பல்வேறு பதவித்தரங்களில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு ரொக்கம் மற்றும் தானியமாகச் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மொத்தப் பணியாளர்களில் 4,751 பணியாளர்கள் இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் நிலைகளில் உள்ள செயல் அலுவலர்கள் மேலாண்மையில் உள்ள நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் நிரந்தரப் பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளன:

(1) பங்குத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி

(2) குடும்ப நல நிதி

(3) சிறப்பு வருங்கால வைப்பு நிதி

(4) ஆலய ஊழியர் நல நிதி

(5) ஓய்வூதியம்

(6) கருணைத் தொகை வழங்குதல்

(7) திருமண முன்பணம்

(8) வாகன முன்பணம்

(9) மருத்துவப் படி

(10) சலவைப் படி

(11) பண்டிகை முன்பணம்

(12) விடுப்புச் சலுகை

(13) வீட்டு வாடகைப் படி

(14) தட்டச்சர்களுக்கு சிறப்பூதியம்

(15) தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு 30 சதவீத ஊதிய உயர்வு

(16) நகர ஈட்டுப் படி

(17) தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை

(18) கருணை அடிப்படையில் பணி நியமனம்

**(1) பங்குத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி:**

ஆண்டு வருமானம் ரூ.10,000/-க்கு மேல் உள்ள அறநிலையங்களில் இத்திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின்கீழ் மாதந்தோறும் சந்தாதாரர்கள் அவர்கள் பெறும் மொத்தச் சம்பளத்தில் 12 விழுக்காட்டிற்குக் குறையாமல் சந்தாத் தொகை செலுத்த வேண்டும். திருக்கோயிலிலிருந்து 12 விழுக்காடு தொகை சந்தாதாரர் கணக்கில் செலுத்தப்படும்.

**(2) குடும்ப நல நிதி:**

பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளரது குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.75,000/- உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கென உபரி நிதி மிக்க திருக்கோயில்களிலிருந்து ரூபாய் ஐந்து கோடி மூலதனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 31-1-2003 வரை 122 குடும்பங்களுக்கு ரூ.64.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**(3) சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்:**

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்





ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் எட்டு இலட்சம் மூலம் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பணியாளர் ஓய்வு பெறும்போது அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை திருக்கோயில் மூலம் வட்டியுடன் வழங்கப்படுவதுடன் துறை மூலம் ரூ.1,000/- வழங்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 51 பணியாளர்களுக்கு ரூ.41,500/- வழங்கப்பட்டுள்ளது.

**(4) ஆலய ஊழியர் நல நிதி:**

ஆண்டு வருமானம் ரூ.40,000/-க்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில், மாத ஊதியம் ரூ.400/-க்கும் குறைவாகப் பெறும் பணியாளர்களுக்குச் சம்பள நிலுவை ஏற்படின் அப்பணியாளர்களுக்குத் துறை மூலம் சம்பள நிலுவைத் தொகை வழங்கிட ஆலய ஊழியர் நல நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்திட்டம் ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 423 திருக்கோயில்களில் பணிபுரியும் 596 பணியாளர்களுக்கு ரூ.13,51,518/- சம்பள பாக்கி வழங்கப்பட்டுள்ளது.

**(5) ஓய்வூதியத் திட்டங்கள்:**

**(அ) ஓதுவார்கள், அர்ச்சகர்கள் மற்றும் பிறர்:**

திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்வியபிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்கள் போன்றோருக்கு அரசு நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.500/— இத்துறை மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி கீழ்க்காணும் விவரப்படி ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள் (சைவம் மற்றும் வைணவம்) ஓதுவார்கள், வேதபாராயணம், நாலாயிர திவ்யபிரபந்தம் பாடுவோர், அரையர் சேவை மற்றும் இசைக் கலைஞர்களுக்கு அரசால் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்ட விவரம்:

| அனுமதிக்கப் பட்டது | ஓதுவார் | வேதம்/ பிரபந்தம்/ அரையர் | இசைக் கலை- ஞர்கள் | அர்ச்ச கர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **மொத்தம்** | **125** | **59** | **125** | **691** | **1000** |

**ஓய்வூதியம் பெறுவோர்:**

| அனுமதிக்கப் பட்டது | ஓதுவார் | வேதம்/ பிரபந்தம்/ அரையர் | இசைக் கலை- ஞர்கள் | அர்ச்ச கர் | மொத் தம் |
|---|---|---|---|---|---|
| 2000-2001 வரை | 117 | 43 | 99 | 591 | 850 |
| 2001-2002-ல் | 6 | 1 | .. | 46 | 53 |
| 2002-2003-ல் | 2 | .. | 8 | 21 | 31 |
| **மொத்தம்** | **125** | **44** | **107** | **658** | **934** |

**(ஆ) கிராம பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்:**

தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை அடைந்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுவோர் விவரம் பின்வருமாறு:

| அனுமதிக்கப்பட்ட ஆண்டுஎண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட பெறுவோர் | ஓய்வூதியம் |
|---|---|---|
| 2000—2001 வரை | 1500 | 1418 |
| 2001—2002-ல் | 1000 | 366 |
| 2002—2003-ல் | .. | 348 |
| **மொத்தம்** | **2500** | **2132** |

**(6) கருணைக் கொடை:**

திருக்கோயில்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் மற்றும் திருவிழாக் காலங்களில் சிறப்புப் பணியாற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கருணைக்கொடை தொகுப்புத் தொகையாக





வழங்கப்பட்டு வந்தது. 2001—2002 ஆம் ஆண்டில் இக்கருணைக் கொடை திருக்கோயில் பணியாளர்களின் ஒரு மாத அடிப்படைச் சம்பளமாக உயர்த்தப்பட்டது.

**(7) திருமண முன்பணம்:**

திருக்கோயில்கள் பணியாளர்களின் மகன் மற்றும் மகள் திருமணத்திற்கென முறையே ரூ.6,000/— மற்றும் ரூ.10,000/— திருமண முன்பணமாக வழங்கப்படுகிறது.

**(8) வாகன முன்பணம்:**

தகுதி வாய்ந்த திருக்கோயில் பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் வாங்க ரூ.20,000/— முன்பணமாக வழங்கப்படுகிறது.

**(9) மருத்துவப் படி:**

திருக்கோயில் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/—வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

**(10) சலவைப் படி:**

திருக்கோயில் சீருடைப் பணியாளர்களுக்கு சலவைப் படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.10/— வீதம் வழங்கப்படுகிறது.

**(11) பண்டிகை முன்பணம்:**

பண்டிகை முன்பணமாக ரூ.1,000/— வழங்கப்படுகிறது.

**(12) விடுப்புச் சலுகை:**

**(அ) ஈட்டிய விடுப்பு:**

திருக்கோயில் பணியாளர்கள் ஆண்டொன்றுக்கு 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு சேமிக்கவும் அதில் 15 நாட்களை ஒப்படைப்பு செய்து அதற்குரிய சம்பளம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) மருத்துவ விடுப்பு:**

திருக்கோயில் பணியாளர்கள் அவர்களது மொத்த பணிக்காலத்தில் 240 நாட்கள் மருத்துவ விடுப்பு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(இ) மகப்பேறு விடுப்பு:**

திருக்கோயில்களில் உள்ள பெண் பணியாளர்களுக்கு 60 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படுகிறது.

**(ஈ) ஓய்வு பெறும்போது ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்தல்:**

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வு பெறும் போது அவர்களது ஈட்டிய விடுப்பிலிருந்து 60 நாட்களை ஒப்படைப்பு செய்து அதற்குரிய சம்பளம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(13) வீட்டு வாடகைப் படி:**

திருக்கோயில் பணியாளர்களுக்கு அவர்களது சம்பள விகிதம் மற்றும் பணிபுரியும் இடத்திற்கேற்ப கீழ்க்கண்டவாறு வீட்டு வாடகைப் படி அனுமதிக்கப்படுகிறது:

| | சம்பள விகிதம் | | | | |
|---|---|---|---|---|---|
| பணிபுரியும் இடம் ரூ. | ரூ.1600 வரை ரூ. | ரூ.1601 முதல் ரூ.2200 வரை ரூ. | ரூ.2201 முதல் ரூ.5300 வரை ரூ. | ரூ.5301 முதல் ரூ.7000 வரை ரூ. | ரூ.7001 முதல் ரூ.10000 வரை ரூ. |
| நிலை—1(ஏ) சென்னை நகரம் மறறும் 32 கிலோ மீட்டர் சுறறு வட்டாரப் பகுதி | 250 | 280 | 340 | 400 | 500 |
| நிலை—1(பி) கோவை, மதுரை நகர் மற்றும் 16 கிலோ மீட்டர் சுற்று வட்டாரப் பகுதி | 144 | 200 | 250 | 300 | 360 |
| நிலை—2 பிற நகாங்கள் மற்றும் 8 கிலோ மீட்டர் சுற்று வட்டாரப பகுதி | 120 | 150 | 180 | 220 | 270 |
| நிலை—3 நகரங்களா | 80 | 100 | 120 | 150 | 190 |
| இதா இடங்கள் | 60 | 70 | 80 | 90 | 100 |



**(14) தட்டச்சர்களுக்கான சிறப்பூதியம்:**

திருக்கோயில்களில் பணிபுரியும் தட்டச்சர்களுக்கு, ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் முதுநிலை தட்டச்சுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின் மாதம் ஒன்றுக்கு ரூ.80/- வீதமும், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றுள் ஒன்றில் முதுநிலை பிரிதொன்றில் இளநிலை தட்டச்சுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின் மாதம் ஒன்றுக்கு ரூ.60/- வீதம் சிறப்புச் சம்பளம் வழங்கப்படுகிறது.

**(15) தொகுப்பு ஊதியம் பெறுவோருக்கு சம்பள உயர்வு:**

திருக்கோயில்களில் தொகுப்பூதிய முறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 30 சதவிகித சம்பள உயர்வு வழங்கப்படுகிறது.

**(16) நகர ஈட்டுப் படி:**

கீழ்க்கண்ட வகையில் நகர ஈட்டுப் படி திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

(அ) இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் நிலையில் செயல் அலுவலர்கள் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்கள்.

| அடிப்படைச் சம்பளம் | சென்னைப் பெருநகர் ரூ. | மாநகராட்சிகள் ரூ. | இதர இடங்கள் ரூ. |
|---|---|---|---|
| ரூ.3200/-வரை | 80 | 40 | 20 |
| ரூ.3200/-க்கு மேல் | 110 | 60 | 20 |

**(ஆ) இதர திருக்கோயில் பணியாளர்கள்:**

| அடிப்படைச் சம்பளம் | நகரம் ரூ. | கிராமம் ரூ. |
|---|---|---|
| ரூ.1600/- வரை | 50 | 50 |
| ரூ.1600/-க்கு மேல் | 70 | 45 |

**(17) தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை:**

15-10-1997 அன்றும் அதற்குப் பின்னும் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் ஒரே பதவியில், பணிபுரிந்துள்ள திருக்கோயில்

பணியாளர்களுக்கு முறையே தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை சம்பள விகிதம் வழங்கப்பட்டு வருகிறது.

**(18) கருணை அடிப்படையில் நியமனம்:**

திருக்கோயில்களில் பணியாற்றும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் சட்டரீதியான வாரிசுதாரர்களுக்கு உதவிடும் முகத்தான் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 19 திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**39. பகுதி-II திட்டங்கள்:**

சென்னை, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலகக் கட்டடத்தை ரூ.39.71 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்க்கவும், திருநெல்வேலியில் சிலைகள் பாதுகாப்பு மையத்தை ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டவும் மற்றும் திருநெல்வேலி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்தை ரூ.8.79 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்ப்பதற்குமான மூன்று புதிய திட்டங்களுக்கு நடப்பு நிதியாண்டு 2003-2004-ல் பகுதி-II திட்டங்கள் அடிப்படையில், முறையே ரூ.15.88 இலட்சம், ரூ.9.20 இலட்சம் மற்றும் ரூ.3.52 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளன.

**நிறைவுரை:**

அளவற்ற செல்வமும், குறைவற்ற அறிவும், சுற்றமும் நட்பும் மனித இனத்திற்குத் தராத மனநிறைவை, அமைதியை ஆண்டவன் தம்மை தம்மகத்தே கொண்ட திருக்கோயில்களே தரமுடியும். நமது தொன்மை கொண்ட கலாச்சாரம், நாகரிகம் ஆகியவற்றை பேணிக்காக்கப் பயன்படும் ஒழுக்க உணர்வையும், ஆன்மீகச் சிந்தனைகளையும், அற உணர்வையும் தொய்வில்லாமல் மனித சமுதாயத்திற்கு திருக்கோயில்கள் வழங்கி வருகின்றன. பன்னெடுங்காலமாக இறையருளாளர்கள் தோன்றி இப்பேருண்மைகளை மக்களுக்கு திருக்கோயில்கள் மூலம் செப்பி வந்தது தெரியும். அத்தகைய ஆலயங்களைப் பாதுகாக்க, அறநிலையங்கள் தழைக்க, ஆன்மீகம் மிளிர, அதன் மூலம் சமுதாய ஒழுக்கம் ஓங்க இத்துறை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் [illegible] தலைமையில், சிறப்பான ஆலோசனையில் இடைவிடாது பணியாற்றும்

184540
சென்னை-600 009

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.